



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com






CHENNAI | Volume- 3 | Issue:242 | 18-03-2026 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

18.03.2026 பங்குனி 4
புதன் கிழமை

சூரிய உதயம் 6.20

**திதி:**
இன்று காலை 8.28 வரை சதுர்த்தசி பின்பு அமாவாசை.

**நட்சத்திரம்:**
இன்று காலை 6.08 வரை சதயம் பின்பு பூரட்டாதி.

**யோகம் :**
இன்று அதிகாலை 4.53 வரை சாத்தியம் பின்பு சுபம்

**கரணம்**
இன்று காலை 8.28 வரை சகுனி பின்பு இரவு 7.58 வரை சதுஷ்பாதம் பின்பு நாகவம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.19 வரை யோகம் சரியில்லை பின்பு அமிர்த யோகம்.

**சந்திராஷ்டமம் :**
இன்று காலை 6.08 வரை பூசம் பின்பு ஆயில்யம்.

**நல்ல நேரம்**
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30.

**இராகு காலம்**
பிற்பகல் 12.00 – 1.30.

**எமகண்டம்**
காலை 7.30 – 9.00.

**குளிகை**
காலை 10.30 – 12.00.

இன்று அமாவாசை நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ஆப்கன் மருத்துவமனை மீதான பாகிஸ்தான் தாக்குதலுக்கு இந்தியா கண்டனம்

## காபூலில் 400 பேர் உயிரிழப்பு

புதுடெல்லி, மார்ச் 18:

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘ஓமித் போதை மீட்பு சிகிச்சை மருத்துவமனை மீது நேற்று (மார்ச் 16) பாகிஸ்தான் நடத்திய காட்டுமிராண்டித்தனமான வான்வழித் தாக்குதலை இந்தியா திட்டவட்டமாகக் கண்டிக்கிறது. இது ஒரு கோழைத்தனமான, மனசாட்சியற்ற வன்முறைச் செயல்.



எந்த வகையிலும் இது ஒரு ராணுவ இலக்காக இருக்க முடியாது. இந்த தாக்குதல் ஏராளமான பொதுமக்களின் உயிர்களைப் பறித்துள்ளது. ஒரு படுகொலையை ராணுவ நடவடிக்கை போல சித்தரிக்க பாகிஸ்தான் முயல்கிறது.

பாகிஸ்தானின் இந்த கொடூரமான ஆக்கிரமிப்புச் செயல், ஆப்கனிஸ்தானின் இறையாண்மை மீதான அப்பட்டமான தாக்குதலாகவும், பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு நேரடி அச்சுறுத்தலாகவும் உள்ளது. இது பாகிஸ்தானின் தொடர்ச்சியான பொறுப்பற்ற நடத்தையையும், எல்லைகளுக்கு அப்பால் வன்முறைச் செயல்களை அதிக அளவில் நடத்துவதன் மூலம் உள்நாட்டுத் தோல்விகளை மறைக்க முயல்வதையுமே காட்டுகிறது.

உலகெங்கிலும் உள்ள முஸ்லிம் சமூகத்தினரிடையே அமைதி, சுயசிந்தனை, கருணை ஆகியவற்றுக்கான காலமாகப் போற்றப்படும் புனித ரமலான் மாதத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது, இன்னும் அதிக வன்மையான கண்டனத்தைக் கோருகிறது. ஒரு மருத்துவமனையையும் அங்குள்ள நோயாளிகளையும் திட்டமிட்டு தாக்குவதை எந்த ஒரு மதமும், சட்டமும், அறநெறியும் நியாயப்படுத்தாது.

இந்த குற்றச் செயலை அரங்கேற்றியவர்களை சர்வதேச சமூகம் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும். அதோடு, ஆப்கனிஸ்தானில் உள்ள பொதுமக்களை பாகிஸ்தான் கண்மூடித்தனமாக தாக்குவதை எவ்வித தாமதமும் இன்றி நிறுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்தியா தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய விழைகிறது. மேலும், இந்த துயரமான தருணத்தில் ஆப்கன் மக்களுடன் இந்தியா உறுதுணையாக நிற்கிறது.

ஆப்கனிஸ்தானின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு நாங்கள் அளிக்கும் அசைக்க முடியாத ஆதரவை மீண்டும் வலியுறுத்துகிறோம்’’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

*நடந்தது என்ன?*

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள மருத்துவமனை மீது பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் ஏறத்தாழ 400 பேர் உயிரிழந்ததாக தலிபான் அரசு தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் சுமார் 250 பேர் காயமடைந்துள்ளனர். இந்த தாக்குதல் திங்கட்கிழமை (மார்ச் 16) இரவு நடந்ததாக ஆப்கன் அரசின் துணை செய்தித் தொடர்பாளர் ஹம்துல்லா ஃபித்ரத் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் இடையிலான மோதல் பல ஆண்டுகளாக தொடர்ந்து வருகிற சூழலில், அண்மைக் காலமாக எல்லை தாண்டிய பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக இருதரப்புக்கும் இடையே மோதல்கள் அதிகரித்து வருகின்றன. தற்போது இரு தரப்புக்கும் இடையிலான மோதல் தொடங்கி மூன்று வார காலம் ஆகியுள்ளது. மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு முன்பாக இரு தரப்பிலும் எல்லையோர பகுதியில் மாறி மாறி தாக்குதல் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# “காலம் பேசாது; ஆனால் காத்திருந்து பதில் சொல்லும்”

## ஆதவ் அர்ஜுனாவின் கருத்து ரஜினிகாந்த் கண்டனம்

சென்னை, மார்ச் 18:



நடிகர் ரஜினிகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-.

தவெக கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஆதவ் அர்ஜுனா சமீபத்தில் என்னைப் பற்றி உண்மைக்கு மாறான ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். அவருடைய அவதூறுக் கருத்தைக் கண்டித்து, எனக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த தமிழக சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய மந்திரி எல்.முருகன், தமிழக அமைச்சர் ரகுபதி, தொல்.திருமாவளவன், எஸ்.பி.வேலுமணி, நண்பர் அண்ணாமலை, அர்ஜுனமூர்த்தி, அன்புமணி ராமதாஸ், ஜி.கே. வாசன், ஜான் பாண்டியன், புகழேந்தி மற்றும் பல கட்சி அரசியல் தலைவர்கள், அமீர், ஜி.தனஞ்சயன் மற்றும் திரையுலக நண்பர்கள் மற்றும் நக்கீரன் கோபால், சாணக்கியா ரங்கராஜ் பாண்டே மற்றும் ஊடகத்துறையினர், என்னை வாழவைக்கும் தெய்வங்களான ரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். "காலம் பேசாது ஆனால் காத்திருந்து பதில் சொல்லும்”.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திமுக வேட்பாளர்கள் நேர்காணல் தொடங்கியது

சென்னை, மார்ச் 18:



தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒரே கட்டமாக வரும் ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி (23.04.2026) தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு - புதுச்சேரி சட்டமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுக்கான நேர்காணல் இன்று (17.03.2026) முதல் வரும் 22ஆம் தேதி (22.03.2026) வரை நடைபெற உள்ளது என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அக்கட்சியின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திமுக வேட்பாளர்கள் நேர்காணல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், விருப்பமனு அளித்துள்ளவர்களிடம் நேர்காணல் செய்து வருகிறார் முதல் நாளான இன்று புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட புதுச்சேரி மற்றும் காரைக்கால் தொகுதிகளில் போட்டியிட விருப்ப மனு அளித்த திமுகவினரிடம் நேர்காணல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நேர்காணலின் போது தொகுதி நிலவரம் மற்றும் வெற்றி வாய்ப்புகள் குறித்து வேட்பாளர்களுடன் கலந்துரையாடுதல் நடைபெறும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# சட்டசபை தேர்தலில் தனித்துப் போட்டி: விஜய் அறிவிப்பு

சென்னை, மார்ச் 18:

“தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் (தவெக) தனித்து போட்டியிடும்’’ என்று நிர்வாகிகள் கூட்டத்தில் விஜய் உறுதி படத்தெரிவித்துள்ளார்.



அடுத்த மாதம் (ஏப்ரல்) 23ந் தேதி நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் தி.மு.க. தலைமையில் ஒரு அணி, அண்ணா தி.மு.க. தலைமையில் மற்றொரு அணி, நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம், இயக்குனர் சீமானின் நாம் தமிழர் கட்சி என 4 முனைப் போட்டி இருக்கிறது. ஆனால் இந்த 4 முனைப்போட்டியை 3 முனைப்போட்டியாக மாற்றும் முயற்சிகள் நடைபெற்றன.

அதாவது அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியில் தமிழக வெற்றிக் கழகத்தை இணைக்கும் முயற்சிகள் நடைபெற்றதாகவும், அப்போது த.வெ.க.வுக்கு 60 தொகுதிகள், துணை முதலமைச்சர் பதவி வழங்குவதாக பா.ஜ.க. தரப்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. ஆனால் த.வெ.க. தரப்பில் முதல் 2½ ஆண்டுகள் விஜய்தான் முதலமைச்சர் என்று கோரிக்கைவிடப்பட்டதாகவும், இதை பா.ஜ.க. ஏற்றாலும், அண்ணா தி.மு.க. ஏற்கவில்லை. குறிப்பாக தேசிய ஜனநாயக கூட்டணியின் முதலமைச்சர் வேட்பாளர் எடப்பாடி பழனிசாமி மறுத்துவிட்டதாகவும் கூறப்பட்டது. இதற்கிடையில் கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் இறந்தது தொடர்பாக டெல்லியில் நடைபெற்ற சி.பி.ஐ. விசாரணையில் கலந்துகொள்ள கடந்த 14-ந் தேதி இரவு நடிகர் விஜய் டெல்லி சென்றார். அவருடன் நிர்வாகிகள் ஆதவ் அர்ஜுனா, விஷ்ணு ரெட்டி ஆகியோரும் சென்றிருந்தனர். அன்று இரவே ஆதவ் அர்ஜுனா, விஷ்ணு ரெட்டி ஆகியோரை பா.ஜ.க. மேலிட தலைவர்கள் சந்தித்து பேயதாகவும், அப்போது, நீங்கள் தனித்து போட்டியிட்டால் அது தி.மு.க. வெற்றியை எளிதாக்கிவிடும். தி.மு.க. தோற்க வேண்டும் என நினைத்தால் அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணிக்கு வாருங்கள் என்று கூறியதாகவும் தெரிகிறது. இந்நிலையில், பட்டினப்பாக்கத்தில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய விஜய், “சட்டசபை தேர்தலில் நாம் தனித்தே போட்டியிடப் போகிறோம். தொகுதிகளுக்கு சென்று களப்பணியாற்றுங்கள். வேட்பாளர் பட்டியல் விரைவில் அறிவிக்கப்படும். தமிழகம் முழுவதும் நானும் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறேன். தேர்தலில் கண்டிப்பாக வெற்றி பெறுவோம். நம்பிக்கையோடு இருங்கள்” என்று கூறியுள்ளார்.

*60 தொகுதிக்கு வேட்பாளர்கள்*

த.வெ.க.வில் ஏற்கனவே 60 தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள 174 தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. இந்தப் பணி நிறைவடைந்ததும், தேர்தல் அறிக்கையும், வேட்பாளர்கள் பட்டியலும் ஒன்றாக அறிவிக்கப்பட இருக்கிறது.

# தமிழ்நாடு உள்பட 5 மாநிலங்களுக்கு 1,111 தேர்தல் பார்வையாளர்கள்!

புதுடில்லி, மார்ச் 18:

தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி உள்பட 5 மாநிலங்களுக்கான தேர்தல் பார்வையாளர்களை நியமித்து இந்திய தேர்தல் ஆணையம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஏப்ரல் 23-ஆம் தேதியும், புதுச்சேரி யூனியன் பிரதேசம், கேரளம், அஸ்ஸாம் மாநிலங்களுக்கும் ஏப்ரல் 9-ஆம் தேதியும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

மேற்கு வங்கத்தில் இரு கட்டங்களாக ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 29 ஆகிய தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இந்த 5 மாநிலங்களிலும் ஞாயிற்றுக்கிழமை முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டு, தேர்தல் ஆணையம் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றது.

தமிழ்நாட்டுக்கு 136 பொதுப் பார்வையாளர்கள், 40 காவல் பார்வையாளர்கள், 151 செலவினப் பார்வையாளர்கள் என மொத்தம் 327 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் நடைபெறவுள்ள 5 மாநிலங்களில் உள்ள 832 தொகுதிகளுக்கு மொத்தம் 1,111 பார்வையாளர்களை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

இவர்கள் அனைவரும் அந்தந்த மாநிலங்களில் (மார்ச் 18) முதல் முகாமிட்டு தேர்தல் பணிகளை கண்காணிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எரிந்த காருக்குள் 4 பேர் பலி

நெல்லை, மார்ச் 18:

திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள பெட்டைகுளத்தில் இருந்து கல்லுவிளை செல்லும் சாலையில் பனங்காடு பகுதி இருக்கிறது. இந்த பகுதியில் ஒரு பனைமரத்துக்கு கீழ் இன்று காலை கார் ஒன்று எரிந்து எலும்புக்கூடாக காட்சியளித்த நிலையில் நின்று கொண்டிருந்தது. இதனை அந்த வழியாக வயக்காட்டுக்கு சென்றவர்கள் பார்த்து திசையன் விளை போலீஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக இன்ஸ்பெக்டர் எழில் சுரேஷ் தலைமையிலான போலீசார் அங்கு விரைந்து சென்று பார்வையிட்டனர்.

*எரிந்த நிலையில் 4 உடல்கள்*

அப்போது அந்த காரில் உள்பகுதி இருக்கைகளில் உடல்கள் எரிந்த நிலையில் இருந்தது. தகவல் அறிந்து வள்ளியூர் டி.எஸ்.பி. வெங்கடேசன் விரைந்து சென்று ஆய்வு செய்தார். அப்போது காரின் டிரைவர் இருக்கையில் ஒரு உடலும், பின் இருக்கைகளில் 3 உடல்களும் முற்றிலும் தீயில் எரிந்த நிலையில் இருந்தது. மேலும் அவர்கள் வந்த காரும் முற்றிலும் அடையாளம் தெரியாத அளவுக்கு எரிந்து கரிக்கட்டையாகி இருந்தது.



சம்பவ இடத்திற்கு போலீஸ் சூப்பிரண்டு பிரசன்னகுமார் சென்று விசாரணை நடத்தி வருகிறார். காரின் அருகே பொதுமக்கள் யாரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. சம்பவம் நடந்த இடமானது சாலையில் இருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் உள்ள பனங்காட்டு பகுதியில் உள்ளது. காரில் டிரைவர் இருக்கையில் ஆண் ஒருவரும், பின் இருக்கைகளில் ஒரு பெண் நடுவிலும், 2 குழந்தைகள் அந்த பெண்ணின் இடது மற்றும் வலது புறத்திலும் இருப்பது போன்று தடயங்கள் சிக்கி உள்ளது. இதனால் இறந்தவர்கள் ஒரே குடும்பத்தினராக இருக்கலாம். அதாவது கணவன், மனைவி மற்றும் 2 குழந்தைகள் என இருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கின்றனர். இதைத் தொடர்ந்து பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி இறந்தவர்கள் குறித்து விசாரித்து வருகின்றனர்.

அதிகாலையில் எரிந்த நிலையில் இருந்த காரில் 4 உடல்கள் கரிக்கட்டையாக கிடக்கும் சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

*சென்னையைச் சேர்ந்தவர்கள்*

இந்த நிலையில் முதல்கட்ட விசாரணையில் அதிர்ச்சி தகவல்கள் வெளியாகி உள்ளன. அதன்படி காரில் எரிந்த நிலையில் மீட்கப்பட்ட 4 பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

அவர்கள் சென்னை நந்தம்பாக்கத்தைச் சேர்ந்த முகமது ரபி, நஸ்ரின் பாத்திமா மற்றும் அவர்களது 2 குழந்தைகள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

முகமது ரபி சமீபத்தில் சென்னையில் உள்ள சொந்த வீட்டை விற்றதாக தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து கடன் தொல்லை காரணமாக தற்கொலை செய்து கொண்டனரா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.







## திருக்குறள் குறள்-562

கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்



ஆக்கம் நெடுங்காலம் நீங்காமலிருக்க விரும்புகின்றவர் (தண்டிக்கத் தொடங்கும் போது) அளவு கடந்து செய்வது போல் காட்டி அளவு மீறாமல் முறை செய்ய வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



கொஞ்சம் இடைவெளி விட்டு
தொடருங்கள்....
வாகனங்களில்
மட்டுமல்ல.....
உறவுகளுடனும்
கூடத்தான் வாழ்க்கையில்
எல்லா உறவுகளும்
நீடிக்க வேண்டுமெனில் சிறு
இடைவெளி அவசியம்....


**உஷா முத்துராமன்**

## ஆஞ்சநேயருக்கு 150 கிலோ தயிர் சிறப்பு அலங்காரம்



நாமக்கல் ஆஞ்சநேயருக்கு 120 கிலோ பச்சரிசி மாவு, 150 கிலோ தயிர் கொண்டு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

## அதிநவீன குளிரூட்டப்பட்ட (AC) உடற்பயிற்சி கூடம்




காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட ரயில்வே சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு மையத்தில், பெண்களுக்காக பிரத்யேகமாக அமைக்கப்பட்ட அதிநவீன குளிரூட்டப்பட்ட (AC) உடற்பயிற்சி கூடம் திறந்து வைக்கப்பட்டது. இந்த உடற்பயிற்சி கூடத்தை காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் தேதி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

## வேட்பாளர் தேர்வு கூட்டம்



சத்தியமூர்த்தி பவனில் பெறப்பட்டுள்ள 2026 சட்டமன்றத் தேர்தல் விருப்ப மனுக்களை சட்டமன்ற வாரியாக ஆய்வு செய்யப்பட்டு 5 வேட்பாளர்களை தேர்வு செய்யும் நேர்காணல் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் மதாரம்மா கனி பாரூக் அவர்கள் தலைமையில் நேற்று 17-03-2026, சத்தியமூர்த்தி பவனில் வேட்பாளர் தேர்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வேட்பாளர் ஆய்வு குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## குன்னத்தூர் மதினா மஜித் நோன்பு திறப்பு விழா



போளூர் ஆர் குன்னத்தூர் மதினா மஜித் அஹ்லே சுன்னத்துல்ஜமாஅத் பள்ளிவாசலில் தினமும் மாலை ரமலான் இஃப்தார் என்கிற நோன்பு திறப்பு விழா மாலை 6.25 நடைபெறும். இதில் இஸ்லாமிய சகோதரர்கள் குழந்தைகள் அனைவரும் கலந்து கொள்வார்கள். அனைவருக்கும் நோன்பு கஞ்சி, பழம், வடை ,பேரீச்சம்பழம் வழங்கப்படும்.தினமும் மாலை பொதுமக்களுக்கு கஞ்சி வினியோகம் செய்யப்படுகிறது.

# 20-ஆம் நாள் மண்டல பூஜையில் நம் வாசவி அம்மன் ஆலயத்தில் ஏடு சனி வார பூஜை







**தர்மபுரி, மார்ச் 18:**

தர்மபுரி மாவட்டம் மார்ச் 17 பாலக்கோடு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் 20-ஆம் நாளில் மண்டல பூஜையில் ஏடு சனிவார பூஜை நம் வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு வெங்கடேசப் பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரத்துடன், துளசி மாலைகளுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாரதனையும் நடைபெற்றது.

ஏடு சனி வாரம் பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

மற்றும் திருமதி ஷாமலா அவர்களின் வீணை கச்சேரி சிறப்பாக நடைபெற்றது. உபயதாரர் திருமதி சாரதா ராமநாதன் மற்றும் குடும்பத்தினர்கள். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## ஸ்ரீபேய்யாழ்வார் பங்குனி சதயம் திவ்ய சேவை



திருமயிலை ஸ்ரீபேய்யாழ்வார் பங்குனி சதயம் திவ்ய சேவை.

## விஸ்வாவசு வருட பிரம்மோற்சவம்



ஸ்ரீ யதோக்தகாரி ஸ்வாமி வேணுகோபாலன் திருக்கோலம். சப்பரம்

விஸ்வாவசு வருட பிரம்மோற்சவம் 6ம் திருநாள் காலை பங்குனி 3 ( 17/3/2026) செவ்வாய்க் கிழமை. திருவெஃகா திவ்யதேசம்.

## இலவச தரிசனத்திற்காகப் பல மணி நேரம் காத்திருப்பு



திருப்பதி ஏழுமலையான் கோவிலில் கடந்த தேதி ஒரே நாளில் 82,057 பக்தர்கள் சாமி தரிசனம் செய்த நிலையில், உண்டியல் காணிக்கையாக ரூ.4.22 கோடி வசூலாகியுள்ளது. சுமார் 30,990 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தியுள்ளதாக திருமலை திருப்பதி தேவஸ்தானம் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது. பக்தர்கள் வருகை அதிகரித்து வருவதால், இலவச தரிசனத்திற்காகப் பல மணி நேரம் காத்திருக்கும் நிலை நீடிக்கிறது.

## வணிகக் கப்பல் போக்குவரத்து பாதிப்பு



மத்திய கிழக்குப் போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியதால் வணிகக் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு உலக நாடுகள் போர்க்கப்பல்கள் அனுப்ப வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கோரியிருந்தார். ஆனால் ஆதரவு இல்லாததால், அமெரிக்காவுக்கு யாரின் உதவியும் தேவையில்லை; உலகின் சக்திவாய்ந்த ராணுவம் எங்களிடம் உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

## தடையோட்டப் போட்டியில் ஒரு மீட்டர் நீளமுள்ள சேலையை அணிந்து பங்கேற்று நிஷா மிஸ்ரா



விளையாட்டுப் போட்டிகளில் ஆடை விதிமுறைக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. ஆனால், பீகாரைச் சேர்ந்த நிஷா மிஸ்ரா என்ற இளம்பெண் அந்த சவால்களை முறியடிக்கும் வகையில், புடவை அணிந்து போட்டியில் பங்கேற்று அசத்தியுள்ளார். ஆசியாவின் மிகவும் சவாலான தடையோட்டப் போட்டியில் ஒரு மீட்டர் நீளமுள்ள சேலையை அணிந்து பங்கேற்று நிஷா மிஸ்ரா அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளார். இது தொடர்பான வீடியோ வைரலாகி வருகிறது.

## துவாதசி சிறப்பு அலங்காரம்...!



**வந்தவாசி, மார்ச் 18:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ பாண்டுரங்கன் ருக்மாயி திருக்கோயிலில் பங்குனி மாதம் துவாதசி திதி முன்னிட்டு மூல மூர்த்திகள் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். உற்சவ மூர்த்திகளுக்கு விசேஷ பூஜைகள் நடைபெற்றன. பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## இடைக்கால தடையை மே 10-ம் தேதி வரை நீட்டித்து உத்தரவு



பாமக பெயர் மற்றும் சின்னம் உரிமை தொடர்பான வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் ஏற்கனவே விதித்திருந்த இடைக்கால தடையை மே 10-ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளது. அன்புமணி ராமதாஸுக்கு எதிராக ராமதாஸ் தொடர்ந்த இந்த வழக்கில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால் புதிய உத்தரவுகளை பிறப்பிக்க முடியாது என நீதிபதிகள் மறுத்துவிட்டனர். மேலும், வழக்கின் விசாரணை மே மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## Aadhaar FaceRD செயலி



அனைத்து வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் நுகர்வோரும் தங்களது ஆதார் பயோமெட்ரிக் e-KYC சரிபார்ப்பை முடிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மத்திய பெட்ரோலிய அமைச்சகம் அறிவித்துள்ளது. நுகர்வோர் இப்போது தங்களின் எண்ணெய் நிறுவன செயலிகள் மற்றும் Aadhaar FaceRD செயலி மூலம் வீட்டிலிருந்தபடியே எளிதாக இந்த சரிபார்ப்பை மேற்கொள்ளலாம். இது குறித்த கூடுதல் விவரங்களை pmuy.gov.in இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## 6 ஆண்டுகளுக்கு பிறகு சீனா மற்றும் வடகொரியா இடையிலான விமான போக்குவரத்து



6 ஆண்டுகளுக்கு பிறகு சீனா மற்றும் வடகொரியா இடையிலான விமான போக்குவரத்து வரும் 30-ம் தேதி முதல் மீண்டும் தொடங்குகிறது. சீன தேசிய விமான நிறுவனமான 'ஏர் சீனா', பீஜிங் மற்றும் பியாங்யாங் இடையே வாரத்திற்கு ஒருமுறை இந்த சேவையை வழங்கவுள்ளது. ஏற்கனவே ரயில் போக்குவரத்து தொடங்கியுள்ள நிலையில், இந்த வான்வழி சேவை இரு நாடுகளின் வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை மேலும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சிம்ம வாகனம் ஸ்ரீபெருமாள் இராஜ அலங்காரம்




ஸ்ரீ வித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில், இராஜமன்னார்குடி. பங்குனி ப்ரும்மோத்ஸவ ஒன்பதாம் திருநாள் இரவு சிம்ம வாகனம் ஸ்ரீபெருமாள் இராஜ அலங்காரம், புறப்பாடு.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### "விஜய்யை முதல்வராக ஏற்றுக் கொண்டால் கூட்டணி" - செங்கோட்டையன் சூசகம்

சென்னை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தேர்தல் விதிமுறைகள் செயல்பாட்டிற்கு வந்துள்ளதால், தவெக அதை முழுமையாக கடைப்பிடிக்கும். அதைப்போல் அனைத்துக் கட்சிகளும் அதை கடைபிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் பொதுக்கூட்டம் என்றால், விஜய்க்கு மட்டும் 51 நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. மற்றவர்கள் இந்த விதிமுறைகளை பின்பற்றுகிறார்களா என்று மக்கள் கேட்கின்றனர். தேசிய ஜனநாயகக் கூட்டணியில், தமிழக வெற்றிக்கழகம் இணைவது தொடர்பாக இதுவரை எந்த கருத்துக்களும் பரிமாறப்படவில்லை. விஜய் தான் தமிழகத்தின் முதலமைச்சர் என்பதை, யாராலும் மாற்ற முடியாது. ஆந்திராவின் துணை முதல்வர் பவன்கல்யாண், விஜய்யிடம் பேசியது தொடர்பாக எனக்கு எந்த தகவலும் எட்டவில்லை. டெல்லிக்கு சிபிஐ விசாரணைக்கு விஜய் அழைக்கப்பட்டார். அங்கு சென்று அதற்கான பதிலை அளித்திருக்கிறார். சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக வெற்றிக்கழகத்துக்கு மாபெரும் வெற்றி கிடைக்கும்.

கூட்டணி வேண்டுமா, வேண்டாமா என்று மாவட்டச் செயலாளர்களிடம் கருத்துக் கேட்பது வேறு. கூட்டணி குறித்து முடிவெடுப்பது வேறு. கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் உணர்வுகளை தெரிவிக்கின்றனர். முடிவு செய்ய வேண்டியது விஜய். சமூக ஊடகங்களில் வருகின்ற தகவலுக்கு எல்லாம் பதில் கூற முடியாது. ஒவ்வொரு ஊடகமும் ஒவ்வொரு இயக்கத்துடன் பின்னிப் பிணைந்து கொண்டு இருக்கின்றன. எனவே, ஒவ்வொரு ஊடகமும், ஒவ்வொரு கருத்தை கூறிக் கொண்டிருக்கின்றன. விஜய் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய உறுதியான நிலைப்பாடு, ஆசை. இவ்வாறு அவர் கூறினார்.

அப்படியானால் முதலமைச்சர் வேட்பாளராக ஏற்றுக் கொண்டால் தான் என்டிஏ கூட்டணிக்கு வருவீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, "விஜய் முதலமைச்சராக வரவேண்டும் என்று நாங்கள் உறுதியாகக் கூறுவதிலிருந்தே நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

### சட்டசபை தேர்தலில் போட்டியா? நடிகை குஷ்பு பதில்

சென்னை விமான நிலையத்தில் நடிகையும், பா.ஜனதா மூத்த தலைவருமான குஷ்பு செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

யார் எந்த தொகுதியில் போட்டியி டவேண்டும் என்பதை கட்சியே முடிவு செய்யும். கட்சி என்ன முடிவு எடுக்கிறதோ அதையே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பா.ஜனதா கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்பதே முக்கியம். தி.மு.க. ஆட்சியை எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

தி.மு.க. ஆட்சியில் ஊழல் அதிகரித்துள்ளது. குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லை. போதைப் பொருள் நடமாட்டத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் நான் போட்டியிட்டு வெற்றி பெறவேண்டும் என்ற விருப்பம் எனக்கு இல்லை. நான் போட்டியிட விருப்ப மனுகூட அளிக்கவில்லை.

எந்த தொகுதி, எத்தனை தொகுதி கிடைக்கும் என்பது குறித்து இன்னும் பேச்சுவார்த்தை முடிவடையவில்லை. அதனால் தற்போது எதையும் உறுதியாக சொல்ல முடியாது. நடிகர் விஜய், உற்சாகமாக அரசியலுக்கு வந்தது குறித்து அவரிடமே கேட்க வேண்டும். தேசிய ஜனநாயக கூட்டணியில் அவர் சேருவது குறித்து பேசுபவர்களுக்கு பதில் சொல்ல முடியாது. தி.மு.க.வின் கடைசி தேர்தல் இதுதான். இவ்வாறு அவர் கூறினார்.

### புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் தவெக கூட்டணி?

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்துக்கான உறுதிமொழியை வழங்க வேண்டும், ஜோஸ் சார்லஸ் மார்ட்டினால் தொடங்கப்பட்ட லட்சிய ஜனநாயகக் கட்சியை தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்க்கக் கூடாது என்ற இரு முக்கியமான நிபந்தனைகளை பாஜக தலைமைக்கு என்.ஆர். காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி முன்வைத்துள்ளார்.

இந்த நிலையில், லட்சிய ஜனநாயகக் கட்சி தொடர்பான என்.ஆர். காங்கிரசின் நிபந்தனையை பாஜக மறுத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால், புதுச்சேரி தனியார் விடுதியில் நேற்று நடைபெறவிருந்த கூட்டணிப் பேச்சுவார்த்தையை ரங்கசாமி புறக்கணித்தார். சுமார் இரண்டு மணிநேரம் காத்திருந்த புதுச்சேரி பாஜக தேர்தல் பொறுப்பாளரும் மத்திய மந்திரியுமான மன்சுக் மாண்டவியா ரங்கசாமியை சந்திக்காமல் புறப்பட்டுச் சென்றார். புதுச்சேரி சட்டசபை தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் இன்று முதல் தொடங்கியிருக்கும் சூழலில், நிபந்தனைகள் குறித்து முடிவெடுக்க பாஜகவுக்கு 24 மணிநேரம் ரங்கசாமி கெடு விதித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே, தவெக தலைவர் விஜய்யுடன் கூட்டணி குறித்து ரங்கசாமி பேசியதாக தகவல் வெளியாகி உள்ளது. என்.ஆர். காங்கிரசின் நிபந்தனைகளை பாஜக ஏற்காவிட்டால், தவெகவுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்க என்.ஆர். காங்கிரஸ் ஆயத்தமாகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முதல்வர் ரேஸில் விஜய்... களத்தைக் குழப்ப வெளியான கருத்துக் கணிப்பு!



பாஜக கூட்டணியில் தவெக இணையப் போவதாகச் செய்திகள் பரப்பப்பட்டு வந்த நிலையில், அப்போதெல்லாம் அமைதி காத்த தவெக தரப்பு, "என்டிஏ கூட்டணி மற்றும் ராமதாஸ், சசிகலா தரப்பினருடன் தவெக கூட்டணி சேரப் போவதாகச் சொல்லப்படுவதில் துளியும் உண்மை இல்லை. யாருடனும் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை. வாக்காளர்களை குழப்ப திமுக தரப்பில் இருந்தே இது மாதிரியான வதந்திகளைப் பரப்புகிறார்கள்" என இப்போது மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

கரூர் கூட்ட நெரிசல் வழக்கு விசாரணைக்காக விஜய் டெல்லிக்கு புறப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாக தவெக மாவட்டச் செயலாளர்களுடன் பொதுச் செயலாளர் ஆனந்த் காணொலி வழியே அவசர ஆலோசனை நடத்தினார். அப்போது, "தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிடலாமா?" என அவர் கருத்துக் கேட்டதாகவும் அதற்கு மாவட்டச் செயலாளர்கள், கலவையான கருத்துகளைச் சொன்னதாகவும் முடிவில், "தலைவர் எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்படுவோம்" என உறுதி கொடுத்ததாகவும் சொல்லப்பட்டது.

டெல்லிக்கு விஜய் விசாரணைக்குப் போகவிருக்கும் சமயத்தில் திடீரென இப்படி தவெக மாவட்டச் செயலாளர்களிடம் கருத்துக் கேட்ட விஷயம் குறித்து பலவாறாக தகவல்கள் வெளியாகின. விஜய்யை தங்கள் கூட்டணிக்கு இழுக்கக் காத்துக் கொண்டிருக்கும் பாஜக, டெல்லி விசாரணையை வைத்து அவர் மீதான விசாரணையில் ஏதாவது அழுத்தம் கொடுக்க முயற்சிக்கலாம்.

அப்படி ஏதும் இல்லாமல் விசாரணையை எளிதாக சமாளிக்கும் ஒரு உத்தியாகவே, கூட்டணிப் பேச்சுவார்த்தை 'ஸ்க்ரீன் பிளே'யை தவெக தரப்பில் அரங்கேற்றியதாகவும் ஒரு செய்தி சொல்லப்பட்டது. அதற்கேற்ப, டெல்லியில் ஏழு மணி நேர விசாரணையை முடித்துக் கொண்டு வழக்கத்துக்கு மாறான புன்னகையுடன் கையசைத்தபடியே வெளியே வந்தார் விஜய்.

இதனிடையே இன்னொரு காரியமும் நடந்தது. மாவட்டச் செயலாளர்களுடன் கருத்துக் கேட்டுவிட்டு விஜய் டெல்லிக்குப் பயணமானது பலருக்கும் விஜய் பாஜக கூட்டணிக்குப் போகப் போகிறார் என்ற சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது. இந்த நிலையில் தான் அவசர அவசரமாக விஜய் விசாரணைக்கு ஆவதற்கு ஒரு நாள் முன்னதாக ஒரு கருத்துக் கணிப்பும் வெளியானது. அதில், விஜய்க்கு அமோக ஆதரவு இருப்பதாகவும் அடுத்த முதல்வர் ரேஸில் அவர் முன்னணியில் இருப்பதாகவும் சொல்லப்பட்டது.

இந்த விஷயத்தை எல்லாம் சுட்டிக்காட்டும் தவெக மேல்மட்ட நிர்வாகிகள் சிலர், "பாஜக-வுடன் கூட்டணி பேசுகிறார் விஜய் என்ற செய்தியை திட்டமிட்டுப் பரப்புவதே திமுக தரப்பிடம் 'ஊதியம்' பெறும் யூ டியூப் சேனல்கள் தான். இதன் மூலம் விஜய்க்கு ஆதரவாக இருக்கும் சிறுபான்மையினர் மற்றும் பட்டியலின மக்களை குழப்புவதுதான் இவர்களது வேலையே.

இப்படியொரு கருத்துக் கணிப்பு வெளியானால், நமக்கே இத்தனை செல்வாக்கு இருக்கையில் நாம் ஏன் பாஜக கூட்டணிக்குப் போக வேண்டும் என விஜய் யோசிப்பார்.

அதேபோல், இந்தக் கருத்துக் கணிப்பை வெளிட பாஜக தரப்பிலும் சிலர் உந்து சக்தியாக இருந்திருக்கலாம் என சந்தேகிக்கிறோம் என்றனர்.

## "ரஜினி விவகாரத்தில் ஆதவ் அர்ஜுனாவை விஜய் கண்டிக்காதது ஏன்?" - நயினார் நாகேந்திரன் கேள்வி



தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் பேசும்போது, "வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் தேஜ கூட்டணி சார்பாக இபிஎஸ் தலைமையில் தமிழகத்தில் தேர்தலை சந்திக்க இருக்கிறோம். திமுக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் 500-க்கும் மேற்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்தது. ஆனால் ஒன்று, இரண்டை தவிர வேறு எதையுமே நிறைவேற்றாமல் மக்களை ஏமாற்றுகிற வகையில், திசை திருப்பியது.

முன்னாள் முதல்வர் கருணாநிதி, தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் தங்களது குடும்பம் ஆள வேண்டும் என்பதற்காக பல்வேறு தவறான திட்டங்களை, தவறான செய்திகளை பரப்பி வருகின்றனர். அதோடு, துணை முதல்வர் உதயநிதியை மீண்டும் முதல்வராக்க வேண்டும் என்பதற்காக, பல அறிவிப்புகளை சொல்லி வருகின்றனர்.

எங்கள் கூட்டணிக்குள் தவெக வருவது குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. திரையுலகில் முடிசூடா மன்னராக இருக்கக்கூடிய ரஜினியை, ஆதவ் அர்ஜுனா விமர்சித்துள்ளது வருந்தத்தக்கது, வேடிக்கையானது. அவர் ஒரு ஆன்மிகவாதி. ரஜினியின் ரசிகர்கள் நிச்சயம் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், மன்னிக்க மாட்டார்கள். இதை, தவெக தலைவர் விஜய் கண்டிக்காதது ஏன்? ஆதவ அர்ஜுனா மன்னிப்பு கேட்க வேண்டும். இவ்விவகாரம் குறித்து முதன்முதலாக குரக் கொடுத்தது பாஜக தான். தொகுதி பங்கீடு குறித்து எங்களுக்குள் எந்தவித சிக்கலும் இல்லை. சுமூகமான முறையில் பேசி முடிவெடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

## வேட்பாளர் தேர்வில் திணறும் தவெக



ஒரு தேர்தலை சந்திப்பதற்கு உள்ளாகவே தவெகவில் பல அதிகார மையங்கள் முளைத்துள்ளன. ஜான் ஆரோக்கியராஜ், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, செங்கொட்டையன் என ஆளுக்கொரு பக்கம் விஜய்யை உலுப்பி வருகிறார்கள்.

இவர்கள் தரப்பில் ஆளுக்கொரு வேட்பாளர் பட்டியலையும் விஜய்யிடம் நீட்டியுள்ளனர். இதில், ஒருவர் சொல்லும் வேட்பாளரைப் பற்றி, இன்னொரு நிர்வாகி விஜய்யிடம் 'எக்கச்சக்கமாக' போட்டுக் கொடுக்கிறாராம். இவர்களில் யார் சொல்வதுதான் உண்மை, யாருக்கு தொகுதியில் செல்வாக்கு உள்ளது என கள நிலவரம் தெரியாமல் குழம்பித் தவிக்கிறாராம் விஜய்.

இதுமட்டுமின்றி, விஜய்க்கு நெருக்கமான சில முக்கிய புள்ளிகள், 'சீட்' கேட்பவர்களிடம் '3 சி' வரை வசூல் செய்வதாகவும் புகார் எழுந்துள்ளது. இதனால், விஜய் ரசிகர் மன்ற காலத்திலிருந்து உழைத்த பலரும் 'அந்த தொகை'யை கொடுக்க வழியின்றி விக்கித்து நிற்கின்றனர்.

தற்போது புதிதாக கட்சிக்கு வந்த பலரும், 'கரன்சி'யை கைமாற்றி சீட்டை உறுதி செய்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது. இதில் தொகுதிக்கே அறிமுகமில்லாத பலரும் சீட்டை உறுதி செய்துள்ளதால், நிர்வாகிகள் விரக்தியில் உள்ளதாகவும் தகவல் பரவுகிறது.

இன்னொரு பக்கம் கட்சியின் முக்கிய தலைவர்கள் பலரும் தங்களுக்கு வேண்டப்பட்ட நபர்களுக்காக பணத்தை கட்டி 5 தொகுதிகள், 10 தொகுதிகள் என புக் செய்வதாக புகார்கள் பறக்கிறது. அப்படி இப்படி எனப் பார்த்தாலும் சுமார் 150 தொகுதிகளுக்கு மட்டுமே 'வொர்த்'தான வேட்பாளர்கள் சிக்கியுள்ளனர் என்று சொல்லப்படுகிறது. மற்ற தொகுதிகளை கடைசி நேரத்தில் வரும் கூட்டணி கட்சிகளிடம் தள்ளிவிட்டு விடலாம் என்ற நம்பிக்கையோடு இன்னமும் காத்திருக்கிறது தவெக.

## 6 தொகுதிகளுக்கு குறையக் கூடாது: இந்திய கம்யூ. செயற்குழு திட்டவட்டம்



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளிடையே தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. இந்த நிலையில், சென்னை தி.நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைமையகத்தில் நேற்று முக்கியமான மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது.


மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கட்சியின் 32 முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர். திமுக தரப்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகளை ஒதுக்க முன்வந்துள்ள நிலையில், அதனை ஏற்க கட்சி நிர்வாகிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர். கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் 6 இடங்களில் போட்டியிட்டதைச் சுட்டிக்காட்டிய நிர்வாகிகள், இந்த முறையும் 6 தொகுதிகளுக்குக் குறையாமல் போட்டியிட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர்.

திமுக கூட்டணியில் இந்த முறை கூடுதல் கட்சிகள் இடம்பெற்றிருப்பதால், கூட்டணிக் கட்சிகள் தலா ஒரு இடத்தைச் சுருக்கிக் கொள்ள வேண்டும் என திமுக தலைமை கேட்டுக் கொண்டுள்ளது. இதன் காரணமாகவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு இடத்தைக் குறைக்க திமுக முயன்று வருகிறது. இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட திமுகவின் உயர்மட்டக் குழுவினருடன் கம்யூனிஸ்ட் நிர்வாகிகள் தொடர்ந்து பேசி வருகின்றனர்.

இது குறித்து கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் கூறுகையில், "தொகுதிப் பங்கீடு தொடர்பாக எவ்விதமான கடுமையான நிபந்தனைகளையும் நாங்கள் விதிக்கவில்லை. பரஸ்பரம் சுமூகமான முறையிலேயே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. எவ்விதமான மோதல் போக்கும் இல்லை'' எனத் தெரிவித்தனர்.

நேற்றைய செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், இன்று காலை 10 மணிக்கு கட்சியின் உயர்மட்ட முடிவெடுக்கும் குழு மீண்டும் கூடவுள்ளது. இந்த ஆலோசனையைத் தொடர்ந்து, இன்று நண்பகல் 12 மணிக்குள் திமுகவுடனான தொகுதிப்பங்கீடு ஒப்பந்தம் இறுதிசெய்யப்பட்டு, அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## புதுச்சேரியில் பாஜக - என்.ஆர்.காங். கூட்டணியில் முறிவா? - தொகுதி பங்கீட்டை புறக்கணித்த ரங்கசாமி



பாஜகவுடனான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையை புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி புறக்கணித்துள்ளார். இதையடுத்து, இரண்டு மணி நேரம் காத்திருந்த பாஜக மத்திய அமைச்சர் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் தனி விமானத்தில் கட்சி மேலிடத்தை சந்திக்க டெல்லி புறப்பட்டனர்.

புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் - பாஜக அடங்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் வரும் தேர்தலில் போட்டியிட உள்ளதாக தெரிவித்தது. அதன்படி என்.ஆர்.காங்கிரஸுக்கு 16 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. மீதமுள்ள 14 தொகுதிகளை பாஜக, அதிமுக, லட்சிய ஜனநாயக கட்சி பிரித்துகொள்ள உள்ளதாக பாஜக மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா தெரிவித்திருந்தார்.

இதில் பாமக-வுக்கு இடம் ஒதுக்காததால் பாமக 30 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளது. இந்நிலையில் லாட்டரி அதிபர் ஜோஸ் சார்லஸ் மாரட்டின் கட்சியான லட்சிய ஜனநாயக கட்சியை கூட்டணியில் சேர்க்கக்கூடாது என ரங்கசாமி வலியுறுத்தி வருகிறார்.

இச்சூழலில் நேற்று இரவு மத்திய அமைச்சரும் தேர்தல் பொறுப்பாளருமான மன்சுக் மாண்டவியாவை என்.ஆர். காங்கிரஸ் தரப்பில் அமைச்சர் லட்சுமி நாராயணன், அரசு கொறடா ஏகேடி ஆறுமுகம், பொதுச்செயலர் ஜெயபால் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் சந்தித்தனர். ஆனால், முதல்வர் ரங்காமி அவரை சந்திக்கவில்லை.

தொடர்ந்து அமைச்சர், கொறடா தரப்பில், தங்கள் தலைவரின் லட்சிய ஜனநாயக கட்சி எதிர்ப்பை தெரியப்படுத்தினர். காரசாரமாக நடந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு இன்று காலை மீண்டும் பேசுவோம் என்று புறப்பட்டனர். என்.ஆர்.காங்கிரஸ் தரப்பிலோ லட்சிய ஜனநாயக கட்சியை கூட்டணியில் சேர்த்தால் பாஜகவுடன் கூட்டணி வேண்டாம் என்று தெரியப்படுத்தியுள்ளனர்.

இச்சூழலில் இன்று காலை 9 மணிக்கு என்.ஆர்.காங்கிரஸ் தரப்புக்காக பாஜகவினர் காத்திருந்தனர்.

இரண்டு மணி நேரம் ஆகியும் வராததால் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, அமைச்சர் நமச்சிவாயம், பேரவைத் தலைவர் செல்வம், மாநிலத் தலைவர் ராமலிங்கம் ஆகியோர் தனி விமானத்தில் டெல்லி புறப்பட்டனர்.

தொகுதியில் போட்டியிட விரும்பும் பாஜகவினர் அடங்கிய பட்டியலை மேலிடத்துக்கு தந்து தற்போதுள்ள என்.ஆர். காங்கிரஸ் நிலைப்பாட்டை தெரிவிக்கவுள்ளனர். இதனால் பாஜக - என்.ஆர் காங்கிரஸ் கூட்டணி முறிவு ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக பேச்சு எழுந்துள்ளது.

## எட்டாம் கொடை விழா.. மண்டைக்காடு பகவதி அம்மன் கோவிலில் பொங்கலிட்டு வழிபட்ட மக்கள்

**குமரி, மார்ச் 18:**

குமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற மண்டைக்காடு பகவதி அம்மன் கோவிலில், மாசிக் கொடை விழா கடந்த 1-ந் தேதி திருக்கொடி ஏற்றத்துடன் துவங்கி 10-ந் தேதி வரை பத்து நாட்கள் நடந்தது. விழாவில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கேரள மாநிலத்தில் இருந்தும் அதிகமான பக்தர்கள் கலந்துகொண்டு, கடலில் புனித தீர்த்தமாடி, பொங்கலிட்டு அம்மனை வழிபட்டனர்.

விழாவின் தொடர்ச்சியாக எட்டாம் கொடை விழா இன்று விமரிசையாக நடைபெற்று வருகிறது. விழாவை முன்னிட்டு காலை 4.30 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, 5.30 மணிக்கு பஞ்சாபிஷேகம், 6.30 மணிக்கு உஷபூஜை நடைபெற்றது. 7 மணி முதல் பூமாலை, 10 மணிக்கு வில்லிசை, பகல் 1 மணிக்கு உச்சிகால பூஜை நடைபெற்றது.

மாலை 5 மணிக்கு பஜனை, 6.30 மணிக்கு சாயரட்சை தீபாராதனை, இரவு 8.30 மணிக்கு அத்தாழ பூஜை நடைபெறுகிறது. விழாவில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கேரள மாநிலத்தில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். எராளமான பெண்கள் கோவில் வளாகத்தில் பொங்கலிட்டு, அம்மனுக்கு படையலிட்டு வழிபட்டனர்.

எட்டாம் கொடை விழாவை முன்னிடடு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. விழாவின் தொடர்ச்சியாக 22-ந் தேதி மீனபரணி கொடைவிழா நடக்கிறது.

## மறைந்த தலைவர்களின் சிலைகளை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை - தேர்தல் ஆணையம்

**சென்னை, மார்ச் 18:**

தமிழக சட்டசபைக்கு ஏப்ரல் 23-ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. வேட்பு மனுதாக்கல் வருகிற 30-ம் தேதி தொடங்குகிறது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது. இதனிடையே தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதால் வாகன சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் அரசியல் கட்சிகள் சுவர் விளம்பரங்கள் செய்வதிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளது.

பொது இடங்களில் அரசியல் கட்சி தலைவர்களின் படங்கள் மறைக்கப்பட்டு வருகின்றன. இதனிடையே சில இடங்களில் மறைந்த தலைவர்களின் சிலைகளை தேர்தல் அதிகாரிகள் மறைத்ததாக புகார்கள் எழுந்தன.

இதற்கு திமுக.,அதிமுக, உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்தன. இதனை தொடர்ந்து தேர்தல் அதிகாரிகள், பணியாளர்களுக்கு தேர்தல் ஆணையம் புதிய விதிமுறையை அறிவித்துள்ளது.அதன்படி, மறைந்த தலைவர்களின் சிலைகளை மூட வேண்டாம் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.இது தொடர்பாக மாவட்ட ஹேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் சுற்றறிக்கை அனுப்பி உள்ளது.

## திருப்பதி ஏழுமலையானை வழிபட ஜூன் மாதத்துக்கான தரிசன டிக்கெட்டுகள்



**திருப்பதி, மார்ச் 18:**

திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பக்தர்கள் ஜூன் மாதம் வழிபட ஆன்லைனில் பல்வேறு தரிசன டிக்கெட்டுகள் நாளை (புதன்கிழமை) முதல் வெளியிடப்படுகின்றன. அதில் ஆர்ஜிதசேவை டிக்கெட்டுகளான சுப்ர பாதம், தோமாலா சேவை, அர்ச்சனை, அஷ்டதள பாத பத்மாராதனை சேவைகளுக்கான தரிசன டிக் கெட்டுகள் நாளை (புதன்கிழமை) காலை 10 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும்.

அந்தச் சேவைகளுக்கான எலக்ட்ரானிக்ஸ் குலுக்கல் பதிவு 20-ந்தேதி காலை 10 மணி வரை ஆன்லைனில் செய்யலாம். டிக்கெட்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் 20 முதல் 22-ந்தேதி மதியம் 12 மணிக்குள் பணம் செலுத்தினால் டிக்கெட்டுகள் உறுதி செய்யப்படும். அதேபோல் கல்யாணோற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சகஸ்ர தீப அலங்கார சேவை, ஜேஷ்டாபிஷேகம் ஆகிய சேவைகளுக்கான தரிசன டிக்கெட்டுகள் 21-ந்தேதி காலை 10 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும்.

மெய்நிகர் சேவைகள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட தரிசன ஒதுக்கீடுகள் 21-ந்தேதி மாலை 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும். அங்கப்பிரதட்சண டோக்கன்கள் 23-ந் தேதி காலை 10 மணிக்கு வெளியி டப்படும். ஸ்ரீவாணி அறக்கட்டளை தரிசன டிக்கெட்டுகள் 23-ந் தேதி காலை 11 மணிக்கு வெளியிடப்படும்.

மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நீண்டகால நோயால் அவதிப்படும் பக்தர்களுக்கான இலவச சிறப்பு தரிசனத்துக்கான டோக்கன்கள் 23-ந்தேதி மாலை 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும். சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட்டான ரூ.300 கட்டண டிக்கெட் 24-ந்தேதி காலை 10 மணிக்கு வெளியிடப்படும். திருமலை மற்றும் திருப்பதியில் தேவஸ்தானத்துக்கு சொந்தமான விடுதி களில் உள்ள அறைகளுக்கான முன்பதிவு 24-ந்தேதி மாலை 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும். பக்தர்கள் https://ttdevasthanams.ap.gov.in என்ற இணையதளம் மூலம் ஸ்ரீவாரியின் ஆர்ஜித சேவைகள் மற்றும் தரிசன டிக்கெட்டுகளை முன்ப திவு செய்யலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உகாதி ஆஸ்தான விழா: திருப்பதி கோவிந்தராஜ சுவாமி கோவிலில் ஆழ்வார் திருமஞ்சனம்



**திருப்பதி, மார்ச் 18:**

திருப்பதி கோவிந்தராஜ சுவாமி கோவிலில் வரும் 19-ம் தேதி உகாதி ஆஸ்தானம் விழா நடைபெற உள்ளது. இவ்விழாவை முன்னிட்டு கோவில் மரபுகளின்படி இன்று காலையில் 'கோவில் ஆழ்வார் திருமஞ்சனம்' எனப்படும் தூய்மைப்பணி நடைபெற்றது.

இதன் ஒரு பகுதியாக, அதிகாலையில் சுப்ரபாதம் இசைத்து பகவானை துயிலெழுப்பி, அதனைத் தொடர்ந்து தோமால சேவை மற்றும் சஹஸ்ரநாம அர்ச்சனை ஆகியவை நடைபெற்றன. பின்னர், காலை 7 மணி முதல் 9 மணி வரை, ஸ்ரீ கோவிந்தராஜ சுவாமி, ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி, ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீ கல்யாண வெங்கடேஸ்வர சுவாமி மற்றும் ஸ்ரீ புண்டரிகவல்லி தாயார் சன்னதிகள் உள்பட கோவில் வளாகம் முழுவதும் முழுமையாக சுத்தம் செய்யப்பட்டது. பின்னர் நாமகோபு, ஸ்ரீசூர்ணம், கஸ்தூரி மஞ்சள், கற்பூரம், சந்தனப் பொடி, குங்குமம் மற்றும் பிற புனிதப் பொருட்கள் ஆகிய நறுமண கலவை கலந்த புனித நீர், கோவில் முழுவதும் தெளிக்கப்பட்டது.

இப்பணிகள் நிறைவடைந்த பின், காலை 9.30 மணி முதல் பக்தர்கள் சர்வ தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், கோவில் துணை நிர்வாக அதிகாரி சாந்தி, உதவி நிர்வாக அதிகாரி நாராயண சௌத்ரி, கண்காணிப்பாளர் சிரஞ்சீவி மற்றும் கோவில் அர்ச்சகர்கள் பங்கேற்றனர்.

## வேதாரண்யம்: சிவன் கோவில்களில் பிரதோஷ வழிபாடு



**வேதாரண்யம், மார்ச் 18:**

பிரதோஷத்தை முன்னிட்டு சிவாலயங்களில் இன்று சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறு கின்றன. வேதாரண்யம் வேதாரண்யேஸ்வரர் சுவாமி கோவிலில் சுவாமிக்கும், நந்திகேஸ்வரருக்கும் சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. பின்னர் வண்ணமலர்களால் சுவாமியும், நந்திகேஸ்வரரும் அலங்கரிக்கப்பட்டு ஒரே நேரத்தில் தீபாராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

இதேபோல் வேதாரண்யம் வேதமிர்த ஏரியில் அமைந்துள்ள தடாக நந்தீஸ்வரர், தோப்புத்துறை கைலாசநாதர் கோவில், வடமறைக்காடர் கோவில், தேத்தாகுடி வடக்கு அழகியநாதர் கோவில், கோடியக்காடு குழவர் கோவில், அகஸ்தியன்பள்ளி அகஸ்தீஸ்வரர் கோவில், நாலுவேதபதி அமராபதீஸ்வரர் கோவில், வெள்ளப்பள்ளம் சிவன் கோவில், புஷ்பவனம் சுகந்தனேஸ்வரர் கோவில், ஆயக்காரன்புலம் எழுமேஸ்வரரமுடையர் கோவில், அகரம் அழகியநாதர் கோவில், கரியாப்பட்டினம் கைலாசநாதர் கோவில், வடகட்டளை சோமநாதர் கோவில் மற்றும் ருத்ரசோமநாதர் கோவில், மறைஞாயநல்லூர் மேலமறைக்காடர் சிவன்கோவில், கத்தரிப்புலம் கோவில்குத்தகை காசிநாதர் கோவில் தாணிக்கோட்டகம் மேற்கு பார்த்த சிவன் ஆலயம் ஆகிய சிவன் கோவில்களிலும் பிரதோஷ வழிபாடு நடைபெற்றது.

இந்தசிறப்பு வழிபாடுகளில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### மைக்ரோ கிரீன்ஸ் என்றால் என்ன?

மைக்ரோ கிரீன்ஸ் என்பது காய்கறி அல்லது கீரை விதைகள் முளைத்து, சில நாட்களிலேயே அறுவடை செய்யப்படும் இளம் தாவரங்கள் ஆகும். பொதுவாக விதை போட்ட 7 முதல் 10 நாட்களுக்குள் சிறிய இலைகள் வெளிவரும். அந்த நிலையிலேயே அவற்றை அறுவடை செய்து உணவாகப் பயன்படுத்துகிறார்கள். இதை முழு கீரையாக வளர விடாமல், அதன் ஆரம்ப வளர்ச்சி நிலையிலேயே பயன்படுத்துவது இதன் சிறப்பம்சமாகும்.

முள்ளங்கி, புரோக்கோலி, முட்டைக்கோஸ், பாசிப்பயறு, கொத்தமல்லி, வெந்தயம் மற்றும் கடுகு போன்ற விதைகளைப் பயன்படுத்தி இவை வளர்க்கப்படுகின்றன.

ஊட்டச்சத்து நன்மைகள்

இந்தச் சிறிய மைக்ரோ கிரீன்ஸ் கீரைகளில் உடலுக்குத் தேவையான பல சத்துக்கள் ஒளிந்துள்ளன:

வைட்டமின்கள்: வைட்டமின் A, C, E மற்றும் K ஆகியவை இதில் மிக அதிகம்.

தாதுக்கள்: இரும்புச் சத்து, மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ்.

ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள்: நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் மற்றும் பைட்டோ நியூட்ரியன்ட்ஸ் இதில் நிறைந்துள்ளன.

உடல் எடை குறைப்பு: இதில் நார்ச்சத்து அதிகமுள்ளதால், உடலில் உள்ள தேவையற்ற கெட்ட கொழுப்பைக் குறைக்க உதவுகிறது. குறைந்த கலோரிகள் கொண்டிருப்பதால் உடல் எடையைக் குறைக்க விரும்புவோருக்கு இது ஒரு வரப்பிரசாதம்.

உணவில் சேர்க்கும் முறை

மைக்ரோ கிரீன்ஸை உணவில் பயன்படுத்துவது மிகவும் எளிது. பெரும்பாலும் இவற்றைச் சமைக்காமல் நேரடியாகச் சாப்பிடலாம்:

சாலட், சாண்ட்விச் மற்றும் சூப் போன்றவற்றில் சேர்க்கலாம்.

சாதாரண உணவின் மேல் தூவி அலங்கரித்துச் சாப்பிடலாம். இது உணவின் சுவையை அதிகரிப்பதோடு, உடலுக்கும் அபரிமிதமான சத்துக்களைத் தருகிறது.

ஒரு லாபகரமான சுயதொழில்

இன்று ஆரோக்கிய உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள் மைக்ரோ கிரீன்ஸை வாங்க அதிக ஆர்வம் காட்டுகின்றன. குறைந்த முதலீட்டில் தொடங்க முடியும் என்பதால், இது பலருக்கு ஒரு புதிய தொழிலாகவும் மாறி வருகிறது. ஆரோக்கியத்தையும் வருமானத்தையும் ஒரே நேரத்தில் தரக்கூடிய சிறந்த வாய்ப்பு இது.

வீட்டிலேயே வளர்ப்பது எப்படி?

மைக்ரோ கிரீன்ஸை வளர்க்க அதிக இடம் தேவையில்லை. வீட்டின் ஒரு சிறிய மூலையிலேயே இதை வளர்க்கலாம்.

## பெண்களை அச்சுறுத்தும் மெனோபாஸ்: மாரடைப்பு முதல் எலும்பு முறிவு வரை...ஆய்வு தகவல்கள்

மெனோபாஸ்என்பதுஎல்லா பெண்களும் எதிர்கொள்ள வேண்டிய பிரச்னை. நம் நாட்டு பெண்களுக்கு 46 முதல் 51 வயதில் மெனோபாஸ் எனப்படும் மாதவிடாய் நிரந்தரமாக நிற்கலாம். 40 வயதுக்கு முன் மாதவிடாய் வருவது நின்றால் அதற்கு பிரிமெச்சூர் மெனோபாஸ் என்று பெயர். 5 சதவீதத்திற்கும் குறைவான பெண்களுக்கு இது இருக்கும்


குறிப்பாக பெருநகரங்களில் வாழும் பெண்களும் அந்நகரங்களில் குடிசைப் பகுதிகளில்வாழும்பெண்களும் விரைவாகவே மெனோபாஸ் நிலையை அடைந்து விடுகின்றனர். தொடர்ச்சியாக ஒருவருடம்மாதவிடாய்வராமல் இருந்தால்மெனோபாஸ்என்று புரிந்து கொள்ளலாம் .

எதனால் இந்த மாற்றம் ஏற்படுகிறது?

பெண் குழந்தை பிறக்கும்போதே குறிப்பிட்ட எண்ணிக்கையில் கருமுட்டை உற்பத்தி நிர்ணயம் ஆகிறது. குறிப்பிட்ட வயதில் கருமுட்டை உற்பத்தி குறைந்ததும் கருப்பைசுரப்பும்ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்டிரோன் ஹார்மோன்ஸ் சுரப்புகளும் படிப்படியாக குறைந்து விடுகின்றன. இதனால் ஒவ்வொரு மாதமும் முதிர்ச்சி அடைந்து உடைந்து வெளிவருவதும் முழுவதுமாக நின்று விடுகிறது. இதனால் ஏற்படும் பாதிப்புகள் எலும்பில் ஈஸ்ட்ரோஜன் குறைவதால், எலும்பு திடத்தன்மைக் குறைந்து குழவி கூடு போல ஆகிவிடும்.

ஆஸ்டியோபோரோசிஸ் இதில் லேசாக தடுக்கி விழுந்தாலும் எலும்பு முறிவு ஏற்படும் அபாயம் அதிகம் உள்ளது.

எலும்பில் உள்ள தாதுக்கள் குறைவதால் ஆஸ்டியோபீனியா வரலாம். இதனால் வயதான பெண்களுக்கு முதுகு தண்டின் உயரம் இரண்டு முதல் மூன்று அங்குலம் குறைவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளன.



கூன் விழுவதற்கான காரணமும் தண்டுவடத்தில் உள்ள எலும்புகள் சுருங்கி வளைந்து விடுவது தான். தசைகள் வலிமை இழக்கும் சார்கோபீனியா பிரச்னையும் வரலாம்.

இதயத்தில் ஏற்படும் மாற்றங்கள்

ஈஸ்ட்ரோஜன் என்பது நம் இதயத்தை பாதுகாக்கும் ஹார்மோன் உடலில் உள்ள நல்ல கெட்ட கொழுப்பின் அளவை சரியாக பராமரிக்கவும் இது உதவுகிறது. இந்த சமச்சீர் தன்மை குறிப்பிட்ட வயது வரை பெண்களுக்கு மாரடைப்பு வராமல் தடுக்கிறது. மெனோபாஸ் வயதில் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் சுரப்பு குறைந்து விடுவதால் கெட்ட கொழுப்பின் அளவு அதிகமாகி மாரடைப்பு வரும் அபாயம் உள்ளது.

பொதுவான மாரடைப்பு அறிகுறிகள் ஆன மார்பு வலி, அதிக வியர்வை என்று இல்லாமல் வேறு விதமாக கூட வரலாம். இதனால் கண்டுபிடிக்க முடியாமல் போவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. 50 முதல் 57 வயது பெண்கள் தங்களின் இதயத்தை சரியாக பராமரிப்பது இல்லை. முறையாக பரிசோதனை செய்து கொள்வதில்லை. இதனால் ஆஞ்சியோபிளாஸ்டி செய்யாமல் நேரடியாக பைபாஸ் அறுவை சிகிச்சை தேவைப்படும் அளவுக்கு முதல் முறையே தீவிர இதய பாதிப்புகளுடன் வருவதை சமீப ஆண்டுகளில் அதிகம் பார்க்கப்படுகிறது.

இடுப்பு கை பகுதிகளில் கொழுப்பு அதிகம் சேர்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. பெண்ணுறுப்பில் உலர்வு தன்மை ஏற்பட்டு, சிறுநீரகத்தை அடக்க முடியாமல் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உந்துதல், சிறுநீர் கசிவது, இருமும் போதும் தும்மும் போதும் தன்னிச்சையாகவே சிறுநீர் கசிவது, உலர்ந்த தன்மையால் உடலுறவின்போது அதீத வலி எரிச்சல், நமைச்சல் என்ற பல விதமான பிரச்னைகள் வரலாம். இதை தவிர்க்க ஈஸ்ட்ரோ ஜன் கலந்த களிம்புகளை தடவலாம்.

அவரவர் உடலுக்கு தேவையான அளவில் தண்ணீர் குடிப்பதுப்ரோபயோடிக் அதிகம் உள்ள தயிர் மோர் அதிகமாக சேர்த்துக் கொள்வது சிறுநீர் கடுப்பை தடுக்க உதவும்.

பரிசோதனைகள்

மெனோபாஸ் சமயத்தில் கொழுப்பு அளவு சீராக இல்லாதது, உடல் பருமன் அதிகமாவது, இன்சுலின் ஹார்மோன் சரியானபடி செயல்படாமல் சர்க்கரை நோயாளியாக மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். எனவே ரத்த சர்க்கரை அளவையும் கொழுப்பையும் பரிசோதித்து தெரிந்து கொள்ள வேண்டும். டாக்டரின் ஆலோசனைப்படி முழு உடல் பரிசோதனை, மேமோகிராம், கர்ப்பப்பையில் பிரச்னை உள்ளதா என அறிய ஸ்கேன் பரிசோதனைகளை செய்து கொள்வது அவசியம்.

வாழ்க்கை முறை மாற்றத்தால் மெனோபாஸ் பிரச்னைகளை சமாளிக்கலாம். உடல் எடைக்கு ஏற்ப, 60 கிலோ உடல் எடை இருந்தால் 69 டு 65 கிராம் புரதம், முழு தானியங்கள், தயிர், பால், மோர், எள், கேழ்வரகு, முருங்கைக்கீரை போன்ற கால்சியம் சத்து நிறைந்த உணவுகளை தினமும் உணவில் சேர்க்க வேண்டும். ஸ்ட்ரென்த் டிரெய்னிங் (STRENGTH TRAINING) உடற்பயிற்சிகளை செய்வதால் தசை பகுதிகள் நன்கு வலுவடைந்து எலும்பின் திடம் குறையாமல் பாதுகாக்க முடியும்.

# "நன்மை என்றும் நன்மை தரும்"



அது அவன் வேலை இல்லையென்ற போதிலும், அதனால் அவனுக்கு எந்த சுயலாபமும் இல்லையென்ற போதிலும் சுரேஷ் அதைச் சளைக்காமல் செய்தான்.

அதிகாலையில் எழுந்து, தனது தெருவை சுத்தம் செய்வான். குப்பைகளை ஒரு ஓரமாய சேகரிப்பான். குப்பை வண்டிக்காகக் காத்திராமல் அவனே ஒரு மினிடோர் வண்டி பிடித்து அதை நகருக்கு வெளியே கொண்டு போய்க் கொட்டுவான். மழையால் சாலையில் ஏற்படும் குழிகளை மண் கொட்டி அடைப்பான். விழுந்து கிடக்கும் கற்களையும் மரக் கிளைகளையும் அப்புறப்படுத்துவான்.

“இதுக்கு உனக்குத் தேவையா?... யார் பார்க்கணும்னு இதையெல்லாம் செய்யறே?"என்று யாராவது கேலி செய்தால், சுரேஷ் சிரித்துக் கொண்டே, “யாராவது பார்க்கணும்னு இல்ல... நல்லது செய்யலாம்னு தோணுது...செய்யறேன்,” என்பான்.

ஆனால் அந்த கிராமத்துக்கு அடிக்கடி வரும் ஒரு அரசியல் தலைவர். தினமும் சுரேஷ் செய்யும் செயல்களைக் கவனித்து வந்தார். யாரும் பாராட்டாத அந்த உழைப்பும், எந்த எதிர்பார்ப்பும் இல்லாத சேவையும் அவரை ஆழமாகக் கவர்ந்தது.

ஒரு நாள் கட்சித் தலைமையிடம் அவர் சொன்னார், "எங்கள் தொகுதிக்கு பெரிய பேச்சாளன் வேண்டாம். மக்களுக்காக அமைதியாக வேலை செய்யும் மனிதன் வேண்டும். அந்த சுரேஷ்க்குத்தான் சீட் கொடுக்கணும்.”

அவரது பரிந்துரையால் சுரேஷ்க்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைத்தது.

கிராம மக்கள், “நமக்காக எப்போதும் வேலை செய்தவன் இவன்தான்,” என்று நினைத்து அவனை ஆதரித்தார்கள்.

தேர்தல் முடிவில் சுரேஷ் வெற்றி பெற்றான். அந்த விநாடியில் அவன் மனதில் தோன்றிய ஒரே எண்ணம், “நல்ல செயல்களுக்கு உடனே பார்வையாளர்கள் கிடைக்காமல் இருக்கலாம்... ஆனால் ஒரு நாள் அந்த செயல்களே நம்மை மேடைக்கு அழைத்துச் செல்லும்.”



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# சிவகாமியின் கோபம் !



“ மீனா..அடியே மீனா !” அடுக்களைக்குள் இருந்து சிவகாமி தொண்டைக் கிழிய கத்தினாள். மீனா வராது போகவே அடுக்களையை விட்டு வெளிப்பட்டாள். வீட்டில் மகளைக் காணவே இல்லை. உடனே பதற்றம் வந்து தொற்றிக்கொள்ள வாசலுக்கு விரைந்தோடினாள். எதிரில் இருந்த காலி கிரவுண்டில் இரண்டு பையன்கள் பட்டம் விட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் அருகில் நின்று கை தட்டி குஷியோடு வானத்தில் காற்றில் அங்கும் இங்கும் ஆடி பறந்து கொண்டிருக்கும் பட்டத்தைக் கண்டு களித்துக் கொண்டிருந்தாள் மீனா. சிவகாமிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. விடு விடு வென்று அருகில் சென்று மீனாவின் தோளில் ஒரு அறை விட்டு அவளை தர தர வென்று இழுத்துச் சென்றாள்.

“ பாவி மகளே ! இன்னிக்கோ நாளைக்கோ உட்காரப்போறே. உன்னை வீட்டை விட்டு வெளியே போகாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். ஏண்டி இப்படி செய்யுறே..” மீனா அம்மா அடித்த அடியின் வலியால் அழுதபடி சென்றாள். “ பாவம்டா மீனா ! அது பாட்டுக்கு நாம பட்டம் விடுறத வேடிக்கை பார்த்துக்கிட்டிருந்தது. அத்த அடிச்சு இழுத்துக் கிட்டுப் போறாங்க அந்த ஆண்டி ! அது என்ன பெரிய குத்தமா ?” பட்டத்தை விட்டுக் கொண்டிருந்த பையன் கேட்டான்.“ விடுடா..மீனாவாச்சு, அவங்கம்மாவாச்சு ! நமக்கு அந்தக் கவலையெல்லாம் வேணாம். நம்ம வேலைய மட்டும் பார்ப்போம்.” என்றான் கூட இருந்தேன். ஆனால், சிவகாமியின் கவலையில் நியாயம் இருந்தது. மீனாவுக்கு பனி ரெண்டு வயதாகிறது. அவளின் நல்ல துக்கோ, கெட்டதுக்கோ சிவகாமி ஒருவள்தான் பொறுப்பு ! மீனாவுக்கு இரண்டு வயதான போது அவளின் அப்பா வேறு ஒருத்தியை இழுத்துக் கொண்டு ஓடினவன் ஓடினவன்தான். இன்று வரை அவன் எங்கு இருக்கிறான்,என்ன செய்கிறான் என்பது யாருக்கும் தெரியாது. புருஷன் தன்னை ஏமாற்றி விட்டு ஓடியது சிவகாமி நெஞ்சில் அழியாத வடுவை ஏற்படுத்தியது. இதனை கருத்தில் கொண்டுதான் சிவகாமி மகளைப் பொத்தி பொத்தி வளர்க்கிறாள். மகளுக்கு ஏதாவது ஒன்று என்றால் துடித்துப் போவாள். அதனால்தான் மகள் எப்போதும் தன்னருகில் இருக்க வேண்டும்; கூப்பிட்ட குரலுக்கு உடனே வர வேண்டும் என விரும்பினாள். இன்று அப்படி நடக்காது போகவே ஏமாற்றம் அடைந்து மகளை அடிக்கும்படி ஆயிற்று. சிவகாமியின் கோபம் நியாயமே !



- வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116



# ஊர்மிளையின் ஊமைமனம்

மூன்றாம் பாகம்.. 4



▪கே.பானுமதி நாச்சியார்
சிவகிரி

## உறக்கத்தில் லக்குவன்..

தன் அரண்மனைக்கு வந்தவள் அன்பரின் உறக்கத்தை ரசித்தாள். எத்தனை நாட்கள் நாம் உறங்கி உள்ளோம். ஆனாலும் ஆழ்மனதில் பதிந்த சில காட்சிகள் அடிக்கடித் தோன்றி தோன்றி மறைந்தன. எல்லா காட்சிகளும் தெரிந்தாலும், சில காட்சிகள் மட்டுமே நம் மனதை விட்டு அகலுவதில்லை. இது வாழ்ந்த காலங்களில் நடந்த நிகழ்வானாலும், ஆழ்மனதில் பதிந்த பதிவுகளாக இருந்தால்தான் நமக்கு அவை ஞாபகத்தில் வருகின்றன.

காலம் தான் மாமருந்து என்று சீதையிடம் சொன்னோம். ஆனால் அந்தக் காலம் நமக்குக் கற்றுத் தரும் அனுபவங்கள் தான் எத்தனை எத்தனை! அன்று சீதையின் மனநிலைக்கும், ஏன் நம் மனநிலையும் தான், இன்றைய மனநிலைக்கும் எத்தனை மாற்றம்! இதற்குக் காலம்தானே காரணம். எதற்கும் ஒருகாலம் உண்டு பொறுத்திரு மகளே!” என்ற தந்தையின் வாக்கியம் எவ்வளவு உண்மை!

ஆனால் இதற்குக் கூடத் தந்தை வராதது ஏன்? என்ற கேள்வியும் எழுந்தது ஊர்மிளையிடம்.

விடை கொடுத்து அனுப்பும் போது ராமன் ஈந்த பொருட்களை மகிழ்வுடன் வாங்கிச் செல்லும்போது “நம் தந்தை இதனை ஏற்றுக் கொள்வாரா? இதனைத் தவிர்க்கவே வரவில்லையோ?” என்று எண்ணியது ஊர்மிளையின் மனம். உடன் அவளது மனம் அன்பரின் உறக்கத்திற்குச் சென்றது.

“என்ன இவரும் நம்போல் உறங்கிக் கொண்டே இருப்பாரோ?” நாம்தான் இவரது உறக்கத்தை வாங்கிக் கொண்டோமே, l அப்படியானால் இன்றைய பொழுதுடன் அவரின் உறக்கம் கலைந்து விட வேண்டியதுதானே! நாளை வரை பொறுத்து இருந்து பார்க்கலாமா? என்று எண்ணியபடியே அருகில் வந்தவள் அன்பரின் பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொள்ள, இலக்குவனின் பாதங்களைப் பிடித்தாள்.

மென்மையான ஸ்பரிசத்தால் திடுக்கிட்ட லக்குவன் “என்ன! இங்கும் சூர்ப்பநகை வந்து விட்டாளா?” என்று புலம்பினான்.

“அன்பரே நீர் இருப்பது அயோத்தி அரண்மனையில், உமது மஞ்சத்தில்!” என்றாள் மெதுவாக ஊர்மிளை. ஆனால் ஆழ்மனதில் எந்தக் குரல் பதிந்து இருந்ததோ இவ்வளவு நாட்கள், அதனையே சுற்றி சுற்றி வருவதுதான் உளவியல் சிந்தனை. லக்குவனுக்குச் சூர்ப்பநகையின் நினைவுகள் அழியவில்லை என்பது தெரியாமல் ஊர்மிளை, அவன் அருகில் செல்ல, அழுத்தமாகப் பிடித்துக் கொண்டான் இலக்குவனன்.

அன்னை சீதையை மீட்டுக் கொண்டு வரும்பொழுது அனுமன் இடத்தில் கூறினேன் “எல்லா அரக்கிகளையும் அழித்து விடுவேன்!” என்று அன்னை சீதை தான் சொன்னார்கள் “இவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? எய்தவன் ஒருவன் இருக்க அம்பை



நோவதேன்!” என்று. அதனால்தான் “நீயும் உயிர் பிழைத்தாய்! ஆனாலும் உன் கெட்ட எண்ணம் மாறாது என்பது எனது அபிப்பிராயம். அப்போது விட்டுச்சென்ற செயலை, இப்பொழுது நிறைவேற்றிக் கொள்கிறேன். இதோ! இப்பொழுது என் கைகளால் உன்னைக் கொன்று விடுகிறேன்!” என்று பலம் கொண்டு மட்டும் ஊர்மிளையின் கழுத்தைப் பிடிக்க, அவனிடமிருந்து தப்புவது ஒன்றும் எளிதான காரியம் அல்ல என்று நினைத்த ஊர்மிளை, சீதையின் குரலில் “அவளை விட்டு விடு!” என்றாள்.

மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவன் போல் தன் கையை உதறினாலும் லக்குவனன், “சூர்ப்பநகையின் காதலின் ஆழம் மிகவும் கொடியது!” என்றான். “அவளை இலங்கையில் உயிரோடு விட்டு வந்தது தவறு!” என்று திரும்ப திரும்பக் கூறினான்.

அவனுக்குப் பழச்சாறு கொடுக்குமாறு தாதியரிடம் சொல்ல, அவர்கள் அதனை எடுத்து வரச் சென்றனர். இலக்குவன் உறக்கத்துள் சென்றான்.

ஆழ்மன நினைவுகளில் சூர்ப்பனகை முகம் கூட மறக்கவில்லை. காலம் சிலவற்றை நமக்குப் பொக்கிஷமாகத் தந்துவிட்டு செல்கிறது. அவளுக்குத்தான் எத்தனை காதல் ராமன் மீது! காதல் தன் விருப்பம் நிறைவேறுமா நிறைவேறாதா என்றெல்லாம் பார்ப்பதில்லை. இந்தக் காதல் நோய் பிடித்துக் கொண்டால் நினைவுகள் தாறுமாறாகத் தான் ஓடுகின்றன. ராமண்ணா தன்னைக் கையைக் காட்டி ஆசை கொள்ளும்படிச் செய்து விட்டார். அன்றே நான் அவளது மூக்கினை அறுத்திருக்கக் கூடாது. அரக்கி என்று தெளிந்து அவளை வதம் செய்திருந்தால், சீதைக்குப் பின்னால் வரும் துன்பம் இருந்திருக்காது. ராமண்ணாவிற்கும் எத்தகைய துன்பம் அது!

ஆம்! அப்போதுதானே நமக்கும் ஊர்மிளையின் நினைவு வந்தது. நினைவுகளில் தெளிவில்லை எனில் வார்த்தைகளில் கோவை இருக்காது.

“ஊர்மிளை நீ ஏன் அப்படி நடந்து கொண்டாய்?”

வந்த நாளில் ராமனும் நானும் இரு கிளிகள் வாங்கி வந்தோமே! அதனைக் கூண்டில் அடைத்தாள் சீதாபிராட்டி. ஆனால் நீ அதனைச் சுதந்திரமாகப் பறக்க விட்டாய்! அதற்கு ஒரு பெயரும் வைத்தாயே, என்ன பெயர் ஞாபகம் வரவில்லையே!” என்றவன் மறுபடியும் மௌனமானான்.

“ஆனால் சீதையிடத்து உன் நிதானம் இல்லை ஊர்மிளா! அந்தப் பொன்மானைக் கண்டு அண்ணியார் பிடித்த பிடிவாதத்தைப் பார்க்கும்போது ராமண்ணாவிற்கே கோபம் வந்துவிடும் என்றே நினைத்தேன். ஆனாலும் அந்தச் சூர்ப்பனகையைக் கொல்லாமல் விட்டது என்னுடைய தவறுதான்!”.

உறக்கம் கூட ஒரு போகம் தான். உறக்கத்திற்கு மற்றொரு அர்த்தம் உண்டு இறத்தல். ஆம் மரணிக்கும் தருவாயில் தன் தவறை உணர்ந்த ராவணன்.

அப்போது நாம் செய்த தவறுகளை நினைத்துப் பார்ப்போமோ அல்லது அது இடித்துக் காட்டுமோ? வாழும் போதே நல்லவற்றைச் செய்து நேர்மையாக வாழ்ந்தால் அந்த மரண வலி குறையும் தானே!

எண்ணங்கள் நாலா பக்கமும் சுழல வார்த்தைகள் குளற ஆரம்பித்தன. இதனை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஊர்மிளா, பழச்சாறுக்காகக் காத்திருந்தாள். பழச்சாறு வந்தவுடன் அவனது பசியை முதலில் போக்க வேண்டும்.

உறங்கினால் உறங்கட்டும் என்று விட்டு விடலாம். ஆனால் இதுவே தொடரக்கூடாது. அப்படியானால் இதனை நான் யாரிடம் கேட்க வேண்டும்?

அன்பர் அழைத்தவுடன் நித்ராதேவி வந்தாள். தனக்காக வருவாள் என்ற நம்பிக்கை அவளுக்கு இல்லை. ஆதலால் இதனை யாரிடம் முறையிடுவது?

பிரபஞ்சத்தில், உள்மனப் பிரார்த்தனைக்குப் பிரபஞ்சமே செவி சாய்க்கும் என்பது உண்மையானால், இவரின் உறக்கம் இன்றுடன் சாதாரணமாகட்டும் என்று வேண்டிக் கொண்டாள். ஆம் அன்பரிடம் பேசுவதற்கு ஏகப்பட்ட விஷயங்கள் உள்ளன.

முதலில் சூர்ப்பனகை பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்; பொன்மான் வடிவில் வந்தவன் யார்? என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஜடாயு யார்? இங்கு எவ்வளவு பேர் வந்தார்கள் அவர்களெல்லாம் யார்? என்று தெரிந்து கொள்ள வேண்டும். தங்களின் நட்பு எவ்வாறு அவர்களுக்குக் கிடைத்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தான் உறங்கிய காரணத்திலும் ஏதாவது கடமை இருந்ததா என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கெல்லாம் இலக்குவன் உறக்கத்திலிருந்து எழ வேண்டும்.

இன்னும் இன்னும் எத்தனை நிகழ்வுகள் இவன் இடத்தில் பேச வேண்டும்! ஆதலால் இவனது உறக்கம் களைய வேண்டும் என்று மனதார வேண்டிக் கொண்டாள்.

- தொடரும்

# கௌசிக சுப்ரமணியர் ஆலயம்

பாண்டிச்சேரி பெயர் கூறியவுடன் பரவலாக அனைவரும் அறியப்பட்டது மதுபானம் ஆகும். ஆனால் அதை எல்லாம் தாண்டி ஆன்மீகம், கடவுள் நம்பிக்கை, மதமற்ற நிலை, மக்களிடையே பாசம், விருந்தோம்பல் என் நிறைய உண்டு.

அதை பற்றிய தெளிவான ஒரு தகவல் தான் இங்கு பதிவிடுகிறேன்.

இங்கு ரயில் நிலையம் அருகில் கௌசிக சுப்ரமணியர் ஆலயம் உள்ளது.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் இந்த முருகன் கோவிலுக்கு நிலத்தை கொடுத்தவர் இஸ்லாமிய மதத்தை சேர்ந்த " முகமது கௌசி" என்பவர். இளவயதில் முருகன் மீது தீராக்காதல் கொண்டமையால் வருடந்தோறும் இங்கு மாசிமகத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். எந்த கிழமையில் மாசி மகம் வந்தாலும் அன்று உள்ளூர் விடுமுறை அறிவிப்பார்கள்.

திரு. கௌசிக் அவர்கள் இளவயதில் மாசி மக விழாவில் முருகன் வழிபாட்டிற்காக எந்த ஊர் முருகனாக இருந்தாலும் சரி முன்னிலையில் நின்று முருகன் தனக்கே உரியவன் என்று ஆராதிப்பார்.





அப்போது இங்கு பாண்டிச்சேரி மேயராக இருந்த திரு. எதுவார் குபேர்( கிறிஸ்தவ மதம்) அவர்கள் இவரிடம் என்ன வேண்டும் என கேட்க முருகனுக்கு கோவில் கட்டும் தனது அவாவினை கூறியுள்ளார்.

ஆளுநர். திரு. பி.டி. ஜாட்டி என்பவர் அடிக்கல் நாட்டி இம்முருகன் கோவில் கட்டி முடிக்கப்பட்டது. இவ்விஷயங்கள் அனைத்தும் கேள்விப்பட்ட காஞ்சிபுரம் சங்கராச்சாரியார் இக்கோவிலுக்கு "கௌசிக பாலசுப்பிரமணியர் திருக்கோவில்" என் பெயர் சூட்டினார்.

பாண்டிச்சேரி மக்களால் ," கௌச் கோவில்; பாய் முருகன் கோவில்" இன்றும் அழைக்கப்படுகிறது.

2003ல் திரு. கௌஸ் அவர்கள் வயது மூப்பின் காரணமாக உயிரிழந்தார். அன்று முதல் அவரின் மகன் இக்கோவிலை நிர்வகித்து வருகின்றார்.

இன்றும் கோவிலின் பிரகாரத்தில் திரு. கௌஸ் அவர்களின் புகைப்படம் காணலாம்.

இக்கோவிலுக்கு திருமணமாகாதவர்கள் வந்தால் விரைவில் சுபசெய்தி கிடைக்கும்.. குழந்தை பேறு, குழந்தைகள் படிப்பு, வீடு கட்ட என அனைத்திற்கும்.....

மூன்று வேளைகளிலும் நேரம் மற்றும் தேவைக்கு தகுந்தது போல நைவேத்தியங்கள் செய்யப்படுகிறது.

இங்கு மூலவரை பார்க்க சுவாமிமலை முருகன்( மூலவர்) மாதிரி இருக்கும். சுவாமிமலை யில் உயரம் அதிகம் மூலவர்.

நாள் கிழமை என்றால் நல்ல கூட்டம் இருக்கும்.. மிக முக்கியமாக நேரத்தை சரியாக கடைபிடிக்கிறார்கள். அவ்வளவு சுத்தம்........

அல்லா/ முருகன்/ இயேசு என யாரை வேண்டுமானாலும் நினையுங்கள். அந்த பக்தியில் உள்ள தூய்மையோடு நேர்மையாக வேண்டினீர்கள் என்றால் கண்டிப்பாக அவன் துணை உண்டு. கை கொடுப்பான்...


நன்றி



-பானு ஸ்ரீ
பாண்டிச்சேரி..

# தினம் ஒரு தலைவர்கள் கேளப்பன் நாயர் வரலாறு

கோயப்பள்ளி கேளப்பன் நாயர் (24 ஆகஸ்ட் 1889 - 7 அக்டோபர் 1971) ஒரு இந்திய அரசியல்வாதி, சுதந்திர ஆர்வலர், கல்வியாளர் மற்றும் பத்திரிகையாளர் ஆவார். இந்திய சுதந்திர இயக்கத்தின் போது, அவர் கேரளாவில் இந்திய தேசிய காங்கிரஸின் முன்னணி நபராக இருந்தார் , மேலும் கேரள காந்தி என்று பிரபலமாக அறியப்பட்டார். இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, அவர் காந்திய அமைப்புகளில் பல்வேறு பதவிகளை வகித்தார். அவர் நாயர் சேவை சங்கத்தின் இணை நிறுவனர் மற்றும் முதல் தலைவராகவும் , கேரள க்ஷேத்திர சம்ரக்ஷண சமிதியின் (கோயில் பாதுகாப்பு இயக்கம்) நிறுவனராகவும் இருந்தார்.



ஆரம்ப கால வாழ்க்கை

கேரள மாநிலம் கோழிக்கோட்டில் உள்ள கோயிலாண்டியில் உள்ள முச்சுகுன்னு என்ற சிறிய கிராமத்தில் , நீதிமன்றத்தில் எழுத்தராகப் பணியாற்றிய தென்போயில் கனாரன் நாயர் மற்றும் கோயப்பள்ளி குஞ்சம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார் கேளப்பன். கேளப்பனுக்கு தாய்வழி வாரிசுரிமை மூலம் கோயப்பள்ளி என்ற குடும்பப் பெயர் கிடைத்தது . அவர் கோழிக்கோடு மற்றும் சென்னையில் கல்வி பயின்றார், மேலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார், பின்னர் சங்கனாசேரியில் உள்ள செயிண்ட் பெர்ச்மன்ஸ் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார் . கேளப்பன் நாயர் சேவை சங்கத்தின் நிறுவனத் தலைவராக இருந்தார் , பின்னர் அந்த சங்கத்தால் நடத்தப்படும் ஒரு பள்ளியின் முதல்வரானார்.




சீர்திருத்தவாதியாக ஒருபுறம் சமூக சீர்திருத்தங்களுக்காகவும் மறுபுறம் ஆங்கிலேயர்களுக்காகவும் அவர் போராடினார். தீண்டாமை மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு எதிராக அவர் இடைவிடாமல் போராடினார். கே. குமாருடன் சேர்ந்து , கேரளாவில் சாதி நிலையைக் குறிக்கும் தனது பெயருக்குப் பின்னொட்டை நீக்கிய முதல் நபரானார். அவர் கேரள காந்தி என்று அழைக்கப்பட்டார்.

அனைத்துப் பிரிவு மக்களின் சமத்துவத்திற்காகவும் கேளப்பன் அயராது பாடுபட்டார். வைக்கம் சத்தியாக்கிரக இயக்கத்தில் அவர் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார், பின்னர் 1932 இல் குருவாயூர் சத்தியாக்கிரகத்தை வழிநடத்தினார். கோயில் நுழைவு பிரகடனத்தை நினைவுகூரும் வகையில் காந்தி திருவிதாங்கூருக்கு விஜயம் செய்தபோது , காந்திஜியின் தலைமையிலும், சமூக சமத்துவத்திற்கான நடவடிக்கையின் உணர்வை மொழிபெயர்க்க காந்திய அணுகுமுறைக்கு இணங்க எடுக்கப்பட வேண்டிய முன்னோக்கிய நடவடிக்கைகளிலும் நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டும் மிக முக்கியமான தீர்மானத்தை அவர் ஆதரித்தார். வைக்கம் சத்தியாக்கிரகத்தின் தலைவர்களில் ஒருவரான திருவிதாங்கூரை சேர்ந்த கே. குமார் இந்தத் தீர்மானத்தை முன்வைத்தார் , பின்னர் மக்களாலும் வரலாற்றாசிரியர்களாலும் மறக்கப்பட்டார்.

சுதந்திரத்திற்குப் பிந்தைய பங்கு சுதந்திரத்திற்குப் பிறகு அவர் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறினார். அவர் கிசான் மஸ்தூர் பிரஜா கட்சியில் சேர்ந்தார் மற்றும் 1952 இல் பொன்னானி மக்களவைத் தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தனது பதவிக் காலத்தின் முடிவில், அவர் தீவிர அரசியலை விட்டுவிட்டு சர்வோதய ஊழியரானார் மற்றும் கேரளாவில் பூதான் இயக்கத்துடன் தீவிரமாக தொடர்புடையார். கேளப்பன் மாத்ருபூமியைத் தொடங்க உதவினார் , மேலும் பல ஆண்டுகள் அதன் ஆசிரியராகவும் இருந்தார். கேரளாவை ஒரு புதிய மொழியியல் மாநிலமாக ஒன்றிணைக்க அவர் பாடுபட்டார். கேரள சர்வோதய சங்கம், கேரள காந்தி ஸ்மாரக் நிதி, கேரள சர்வோதய மண்டல் மற்றும் கோழிக்கோடு காந்தி அமைதி அறக்கட்டளை உள்ளிட்ட பல காந்திய அமைப்புகளின் தலைவராகவும் இருந்தார். கேரளாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மலப்புரம் மாவட்டம் உருவாவதை கேளப்பன் எதிர்த்தார், அது ஒரு 'மினி பாகிஸ்தானை' உருவாக்கும் என்று வாதிட்டார். மலப்புரத்தில் உள்ள அங்கடிப்புரத்தில் உள்ள ஒரு மசூதிக்கு அருகில் ஒரு கோயில் மறுமலர்ச்சியை நோக்கமாகக் கொண்ட தாலி கோயில் இயக்கத்தில் அவர் ஈடுபட்டார், இது சில வகுப்புவாத பதட்டங்களை ஏற்படுத்தியது. தாலி கோயில் இயக்கத்தில் கேளப்பன் முக்கிய பங்கு வகித்தார். ஆனால் அது நிறைவடைவதற்கு முன்பே, அக்டோபர் 7, 1971 அன்று கேளப்பன் இறந்தார். அவரது ஆதரவுடன் கட்டப்பட்ட கோயில் மசூதியுடன் இணைந்து நிற்கிறது, இது வெவ்வேறு சமூகங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தைக் குறிக்கிறது.

விருதுகள் மற்றும் அங்கீகாரம்

அவரது நினைவாக இந்தியா போஸ்ட் 1990 இல் ஒரு நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டது .

# விஜய் ஆண்டனியின் 'நூறு சாமி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது




தமிழ் திரையுலகில் இசையமைப்பாளராக வலம் வந்த விஜய் ஆண்டனிக்கு கதாநாயகனாக மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்த படம் 'பிச்சைக்காரன்'. இயக்குநர் சசி இயக்கிய இப்படம் ரசிகர்களிடம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றதுடன் வசூலையும் குவித்தது.

இதனை தொடர்ந்து விஜய் ஆண்டனி பல படங்களில் நடித்தாலும், அவர் இயக்குநர் சசியுடன் மீண்டும் எப்போது இணைவார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே நிலவி வந்தது. அதனை பூர்த்தி செய்யும் விதமாக இயக்குநர் சசியுடன் விஜய் ஆண்டனி மீண்டும் இணைந்துள்ளார்.

அந்த வகையில், இருவரும் இணைந்துள்ள படத்திற்கு 'நூறு சாமி' என தலைப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு படத்திற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் 'நூறு சாமி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை இயக்குநர் வெற்றிமாறன் வெளியிட்டுள்ளார். போஸ்டரில் விஜய் ஆண்டனி, ஸ்வாசிகா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மேலும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் லிஜோமோல், கருணாஸ், காவ்யா அனில் ஆகியோர் நடித்துள்ளனர்.

செல்லமா சீரியலில் கதாநாயகியாக நடித்து பிரபலமானவர் நடிகை அன்ஷிதா. இதன்பின் பிக் பாஸ் சீசன் 8ல் போட்டியாளராக களமிறங்கினார். இதன்மூலம் நல்ல வரவேற்பையும் பெற்றார். இதை தொடர்ந்து இவர் நடிப்பில் தற்போது விஜய் டிவியில் அழகே அழகு என்கிற சீரியல் ஒளிபரப்பாகி வருகிறது. ரசிகர்களின் மனம் கவர்ந்த சின்னத்திரை நடிகைகளில் ஒருவரான அன்ஷிதா, சமீபத்தில் சேலையில் எடுத்துக்கொண்ட லேட்டஸ்ட் கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் பதிவு செய்துள்ளார்.



# அந்தோனி திரைவிமர்சனம் (2.5/5)



இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போருக்குப் பிறகான மக்களின் வாழ்க்கையை மையமாக வைத்து உருவாகியிருக்கும் படம் தான் 'அந்தோனி'. போரின் வலி, இழப்பு, புலம்பெயர்வு, மீண்டும் வாழ வேண்டும் என்ற மனிதர்களின் போராட்டம் ஆகியவற்றை அமைதியான கதையாக்கத்தில் சொல்ல முயற்சித்திருக்கிறார்கள் இயக்குநர்கள் சுகிர்தன் கிறிஸ்துராஜா மற்றும் ஜெனோசன் ராஜேஷ்வர்.

ஆழ்கடலில் மீன் பிடித்து வாழும் அந்தோனி, கடலை தாயைப் போல நேசிக்கும் மனிதன். ஒருநாள் கடலில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் நளினியை காப்பாற்றுகிறார். அவர்களுக்குள் உருவாகும் உறவு குடும்பமாக மாறுகிறது. மகள் நிலா பிறந்த பிறகு வாழ்க்கை அமைதியாக சென்று கொண்டிருக்கும்போது, மனைவிக்கும் மகளுக்கும் உயிருக்கு ஆபத்தான நோய் இருப்பது தெரிய வருகிறது. அந்த உண்மையை உள்ளத்தில் புதைத்து வைத்து, குடும்பத்தை காப்பாற்ற போராடும் ஒருவனின் மன வேதனையே படத்தின் மையமாகிறது.

**நடிகர்கள்**

அந்தோனி கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் கயல் வின்சென்ட், அதிகமான வசனங்களின்றி உணர்ச்சிகளை முகபாவனைகளில் வெளிப்படுத்தி கவனம் ஈர்க்கிறார். மனைவி மீது அன்பு, மகள் மீது பாசம், உள்ளுக்குள் உடைந்து போகும் மனிதன் என்ற பல நிலைகளை அமைதியான நடிப்பில் காட்டியிருக்கிறார்.

நளினியாக நடித்திருக்கும் டிஜே பானு, மிக இயல்பான நடிப்பில் கதைக்கு உயிர் கொடுக்கிறார். மகளாக வரும் சிறுமி ஆஷனா, சின்ன சின்ன காட்சிகளிலேயே மனதில் நிற்கும் அளவுக்கு நடித்திருக்கிறார்.

நிழல்கள் ரவி, அருள்தாஸ், சுதர்சன் உள்ளிட்டவர்கள் கதைக்கு தேவையான அளவில் வந்து இயல்பாக நடித்திருக்கிறார்கள். படத்தில் பெரும்பாலும் உள்ளூர் மனிதர்களையே பயன்படுத்தியிருப்பது காட்சிகளுக்கு நம்பகத்தன்மை கொடுக்கிறது.

**இயக்கம்**

முதல் பாதி மெதுவாக நகர்ந்தாலும், இரண்டாம் பாதியில் உணர்ச்சி அதிகரித்து கதையை பிடிப்பாக கொண்டு செல்கிறது. சில இடங்களில் காட்சிகள் நீளமாக இருப்பதும், வட்டார மொழி புரிய சிரமம் இருப்பதும் சிறிய குறையாக தெரிகிறது.

மொத்தத்தில், போருக்குப் பிறகு வாழ முயலும் மனிதர்களின் மனநிலையை அமைதியான உணர்ச்சி கதையாக சொல்லியிருக்கும் படமாக 'அந்தோனி' கவனம் ஈர்க்கிறது. பெரிய சம்பவங்கள் இல்லாமல், மனித உணர்வுகளை மட்டும் நம்பி நகரும் படமாக இது அமைந்துள்ளது.

**ஒளிப்பதிவு**

ரிஷி செல்வத்தின் ஒளிப்பதிவு படத்தின் பெரிய பலமாக உள்ளது. இலங்கை கடற்கரை, கிராமங்கள், தெருக்கள், இயற்கை காட்சிகள் அனைத்தும் அழகாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

**இசை**

இசைஞானி இளையராஜாவின் இசை படத்திற்கு மிகப்பெரிய பலம். பாடல்களும் பின்னணி இசையும் காட்சிகளின் உணர்ச்சியை அதிகரிக்க உதவுகிறது.

## பெண்களிடம் உஷாராக இருங்கள்...

# ஆண்களை எச்சரிக்கும் Poonam Bajwa

உங்களுடன் தோழியாக, காதலியாக, மனைவியாக பயணிக்கும் பெண்கள் எந்த ஒரு தேசத்துக்கும் மகாராணியாக இல்லாமல் இருக்கலாம்.

'தெனாவட்டு', 'கச்சேரி ஆரம்பம்', 'சேவல்', 'தம்பிக்கோட்டை' போன்ற படங்களில் நடித்தவர் பூனம் பாஜ்வா. ஒரு கட்டத்தில் பட வாய்ப்புகள் குறைய தொடங்க சிறிய கதாபாத்திரங்களில் நடித்தார். தற்போது சினிமாவில் இருந்து ஒதுங்கி இருக்கும் பூனம் பாஜ்வா, சமூக வலைதளங்களில் தனது கவர்ச்சி படங்களை வெளியிட்டு கவனம் ஈர்த்து வருகிறார். அமுல்பேபி போல இருக்கும் அவரை இன்ஸ்டாகிராமில் கிட்டத்தட்ட 40 லட்சம் பேர் பின் தொடருகிறார்கள்.

இதற்கிடையில் ரசிகர்களிடையேயான ஒரு கலந்துரையாடலில் பூனம் பாஜ்வா பேசும்போது, "உங்களுடன் தோழியாக, காதலியாக, மனைவியாக பயணிக்கும் பெண்கள் எந்த ஒரு தேசத்துக்கும் மகாராணியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்களை ராணிகளாக போற்றி கொண்டாடுங்கள். அவர்களின் அழகையும். அன்பையும், ஆளுமையையும் பாராட்டுங்கள். ஓ.கே. எல்லாத்தையும் மறந்துடலாம் என்று சொல்லும் பெண்களிடம் உஷாராக இருங்கள்.

ஏனெனில் பெண்கள் எதையும் மறப்பதில்லை. குறிப்பாக உங்கள் வாழ்க்கையில் வரும் மற்ற பெண்கள் சார்ந்த விஷயங்களை மறக்கவே மாட்டார்கள். எனவே பெண்களிடம் உஷாராக இருங்கள், ஜாக்கிரதை" என்று குறிப்பிட்டார்.





# விருதும் கையுமாக வந்து சர்ப்ரைஸ் கொடுத்த ஸ்ருஷ்டி டாங்கே

தமிழ் திரையுலகில் காதலாகி என்ற திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர் நடிகை ஸ்ருஷ்டி டாங்கே. அதன்பிறகு இவர் யுத்தம் செய், ஏப்ரல் ஃபூல், மேகா, டார்லிங், எனக்குள் ஒருவன் என தொடர்ச்சயாக தமிழ், தெலுங்கு மற்றும் மலையாள திரைப்படங்களில் நடித்து வருகிறார். திரைப்படங்கள் மட்டுமின்றி இணைய தொடர் மற்றும் தொலைகாட்சி நிகழ்ச்சிகளிலும் ஸ்ருஷ்டி டாங்கே பங்கேற்றுள்ளார்.


இந்த நிலையில், நடிகை ஸ்ருஷ்டி டாங்கே கையில் விருதுடன் நிற்கும் புகைப்படத்தை தனது அதிகாரப்பூர்வ இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில் தனக்கு தனியார் நிறுவனம் ஒன்று விருதளித்து கவுரவப்படுத்தி இருப்பதாக அவர் தெரிவித்தார். பெண்கள் ஒரு துறையில் சிறந்து விளங்குதோடு, மற்றவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் செயல்படுவதை பாராட்டி இந்த விருது தனக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஸ்ருஷ்டி குறிப்பிட்டுள்ளார்.

ஜனய்-முக்தய் சமஜ்பூஷன் என்ற இந்த விருது தனக்கு கிடைத்திருப்பது பற்றி பதிவிட்டுள்ள ஸ்ருஷ்டி டாங்கே, "இத்தகைய ஓர் உன்னதமான மற்றும் ஊக்கமளிக்கும் விருதுக்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதை, எனது பெரும் நற்பேறாக கருதுகிறேன்," என குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் பகிர்ந்துள்ள புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்படுகிறது.

பிக் பாஸ் 9ம் சீசன் டைட்டில் ஜெயித்தவர் திவ்யா கணேஷ். சீரியல் நடிகையாக தமிழ் சின்னத்திரையில் கலக்கி வரும் அவர் பிக் பாசில் வைல்ட் கார்டு எண்ட்ரியாக நுழைந்து டைட்டில் ஜெயித்தார். அவருக்கு 50 லட்சம் ரூபாய் பரிசு மட்டுமின்றி 25 லட்சம் ருபாய் மதிப்புள்ள கார் பரிசாக தரப்பட்டது. திவ்யா கணேஷ் தற்போது சேலையில் அழகாக போஸ் கொடுத்திருக்கும் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார்.




என்று தணியும் மனிதன் போர்களின் தாகம்?
என்று கலையும் வானில்.. போர்களின் மேகம்?
என்று அமைதியாய் விலங்குகள் தூங்கும்?
என்று ஓயும் அந்த வெடியோசை யாவும்?

சிறு குருவிகள் கூடுகளில் தன் குஞ்சுகளைக் கொஞ்சும்..
சிறகுகள் விரித்தே.. மைனாக்கள் பறக்கும்..
அமைதியின் கீதம் குயில் வந்து இசைக்கும்..
என்று பறக்கும் அங்கே வெண்புறாக்கள் கூட்டம்!



பசி வந்தால் மட்டுமே.. விலங்குகள் மோதும்.. பசி
தணிந்த பின்னே மகிழ்ச்சியாய் குலவும்..
மனிதனின் பசியினில் போர்மேகம் சூழும்..
இறைவா கானகத்தில் சொல்.. எங்களினம்
வாழும்.?

**வே.கல்யாண்குமார்.**

---



1. கழுத்தில் தாலி ஏறும் வரை
யார் என்றே தெரியாத
ஒருவனுடன் வாழ்க்கை
பயணத்தை தொடங்கும்
பெண்களை விடவா
தன்னம்பிக்கைக்கு நல்ல
உதாரணம் இருக்கப்
போகிறது

2. யாரும் புரிந்து
கொள்ளவில்லை என்று
கவலைப்படுவதை விட
நம்மளை புரிஞ்சிக்க
யாருக்கும் அறிவு இல்லை
என்று போய்க்கொண்டு
இருக்கணும்

3. ஒரு ஆண் தன்
வாழ்நாளில் அதிகமாக
யோசித்த விஷயம்
மனைவி இப்போது என்ன
காரணத்திற்காக கோபமாக
இருக்கிறாள் என்பதே

4. கதவு பூட்டை விட பெரியது
பூட்டு சாவியை விட பெரியது
ஆனால் முழு வீட்டையும்
திறப்பது ஒரு சின்ன சாவி
தான்



5. நம் நாட்டில்
நடிப்பவனுக்கு
இருக்கும் மரியாதை
உழைப்பவனுக்கு
இல்லை

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

## கருணைக் கொலை

கருணைக் கொலையா?
கருணையால் ஒருவிடுதலை!
காத்திருந்தவருக்கும்
காப்பாளருக்கும்!
காத்திருப்பவருக்கு
வேதனையில்லை;
காப்பாளரின் வேதனை
அறிவார் யார்? கண்ணீரில்
கரைந்த இரவுகளுக்கு
கணக்குண்டா?
அச்சத்துடன் அடிக்கடி
பார்த்துச் செல்லும்
கடமையின் பொழுதுகள்!
பீ, மூத்திரம் அள்ளும்
நேரங்கள்; இமை நனையும் ;
காத்திருப்பவரின் இயலாமை
நினைந்து; வீட்டை விற்று
நடுத்தெருவில் நிற்கும்
கொடுமை! இறுதி நேரத்தில்
ஒரு இமையசைவு
சொல்லுது; நிறைவான
நன்றி!நெஞ்சுக் குழியில்
மிஞ்சும் வார்த்தை;
புரியுது எனக்கு.
"என் பாரம் நீ சுமக்க;
நான் பட்ட வேதனை
எவர் அறிவார்?" என்றே



சொல்லுது;
என் நிலையில்
நீ இருக்க;
புரியும்
உனக்கும்.

**சசிகலா**
**விஸ்வநாதன்**

---

## உண்மை முகம் !

முன்னும், பின்னும்
பாதுகாவலர்கள் படைசூழ
குளிரூட்டப்பட்ட
கருப்புக் கண்ணாடி
மறைப்பினுள்...
காரில் அமர்ந்து
கையசைத்து செல்லும்
அரசியல் தலைவர்களே...
ஒரு நிமிடம்...
காரை விட்டு கீழே
இறங்கி...
மக்கள் அன்றாடம் நடக்கும்



பாதையில்
ஒரு முறை
பயணித்து
பாருங்கள்....
வறுமையின்
கோரமுகம்
அப்போது
தான்
உங்களுக்கு தெரிய வரும் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

---



## "அலுவலகப்பெண்டிரின் மாலைப் பயணங்கள்"

மாலைச் சூரியன்
அலுவலகச் சாளரத்துள்
பொன்னிறத்தைக்கொட்ட...

கோப்புகளை மறந்து
கனவுகளைத் தூக்கியபடி
வெளியேறுகிறார்கள்
பணிபுரியும் பெண்கள்!

பேருந்து நிறுத்தத்தின்
நிமிடங்கள் கூட
மணி நேரமாய் நீளும்!
கூடடையும் பேருந்தில்
மூச்சும் கூட இடம் கேட்கும்!

தள்ளாட்டமாய் நின்றபடியே
கைப்பிடியில் தொங்குவர்...
குழந்தையின்
ஹோம் வொர்க்
நினைவில் நெருடும்!
சமையல் அவசரம்
காலடியில் ஓடும்!

பேருந்துக் கலவரத்திலும்
குழந்தையின் குரலை
மொபைலில் கேட்கும்
தாயின் இதயம்!

அலுவலகக் கதாபாத்திரம்
முடித்து...அடுத்து
அம்மாவாக, மனைவியாக,
மகளாக மாற வேண்டிய
பயணமது!

ஒரு தோளில் பை,
மற்றொரு தோளில்
நாள் முழுவதின் சோர்வு!
மனதில் மட்டும்
வாசலில் காத்திருக்கும்
பிஞ்சு முகங்கள்!



மாலைப்
பயணம்
பெண்டிரின்
அன்பும்
பொறுப்பும்
நிரம்பிய
இல்லத்தை நோக்கிய
இதயப் பயணங்கள்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

---

1. இன்றைய நவீன
வீடுகளில்வைஃபை
சிக்னல்கள் நிரம்பி
வழிகின்றன ஆனால்
உறவுகளின் சிக்னல்கள்
கிடைப்பதில்லை
ஒரே கூரையில் வசித்தாலும்
தனித்தனித் தீவுகளில்
வாழ்ந்து வருகிறோம்

2. முட்டாள் முடிவு எடுக்க
யோசிக்க மாட்டான்
அறிவாளி முடிவு எடுத்தபின்
யோசிக்க மாட்டான்

3. அழகான கட்டிடத்தை
பாதுகாக்கும் அஸ்திவாரம்
யாருடைய கண்களுக்கும்
தெரிவது இல்லை

4.பணமும் ஒரு சுயநலவாதி
தான் பணக்காரனிடம்
செல்லும்போது குட்டிபோடுது
இல்லாதவனிடம் வரும்போது
வட்டி போடுது

5. நாம சொல்லுறது பொய்
என்று தெரிந்தும் நம்புறவங்க
அம்மா நாம் சொல்வது
உண்மை என்று தெரிந்தும்
நம்பாதது மனைவி

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

## ஒற்றை நிலா....

குளிர் ஒளியில் விழித்துக்
கிடந்தோம்...

அன்பைப் பொழியும்
பேச்சில்...உலகம்
மறந்தோம்...

செவிகளில் தேன் நதி
பாயக்கண்டோம்

வானத்து விண்மீன்கள்
முகத்தில்ஒளிரக்கண்டோம்...

வெகுதூரம் ஆயினும் நம்
அறைகள்... இணையக்
கண்டோம்...

பெருங் காதலை
இணையத்தில்... வளர்த்துக்
கொண்டோம்...



ஓர் நாள்
ஒளிந்து
கொண்டாய்...

என் வானம்
முழுவதும்....
சப்பாத்திக்
கள்ளிகள்....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

---



## எத்தனை இன்பம்


எத்தனை மகிழ்ச்சி
கொடுத்தாய் இறைவா..
விடியலில் பிரகாசமாய்
ஆதவன் உதிப்பதும்
மகிழ்ச்சியே.... தென்றல்
காற்று முகத்தை வருடுவதும்
மகிழ்ச்சியே..மலர்கள் மலர்ந்து
மணம் வீசுவதும்
மகிழ்ச்சியே ..
புள்ளினங்கள் விடியலில் குரல்
கொடுப்பது மகிழ்ச்சியே .....
அன்பு நிறைந்த இல்லத்தில்
வாழ்வது மகிழ்ச்சியே ...
தோழமைகள் அன்புடன்
அழைப்பதும் மகிழ்ச்சியே ....
செய்யும் செயலில் மன
நிறைவு காண்பதும்
மகிழ்ச்சியே...இறைவன்
படைத்த இயற்கையை
ரசிப்பதும் மகிழ்ச்சியே ....
மனநிறைவைத் தரும்
வாழ்வில் என்றென்றும்
மகிழ்ச்சி.....



மகிழ்ச்சி....
மகிழ்ச்சி....
மகிழ்ச்சி....
மகிழ்ச்சி தான்....

**உஷா**
**முத்துராமன்**

---



தேவதைகள் எல்லாம்
மல்லிப்பூ சூடுவதற்கு
தடை விதியுங்கள்
வீசும் காற்றில்
விஷம் பரவுவது
தடுக்கப்படட்டும்!

தோற்ற காதலையெல்லாம்
காவியமாக்கியது போதும்
ஒரு ஜென்மத்திலாவது
காதலை காதலோடு
வாழ வையுங்கள்!

உஜாலா வெண்மையாய்
குஜாலாய் வந்தாள்
ஒரு தேவதை!
அவள் வெள்ளை நிற
ஆடையுடுத்தி தான்
தேவதையென நிரூபிக்க
வேண்டிய எந்த அவசியமும்
இல்லை!

விட்டு தொலைக்க
நினைத்தாலும் அவ்வளவு
சீக்கிரத்தில் விடாது
இந்த பொல்லாத காதல்!

இதயம் தொலைக்கும்
அளவுக்கு மட்டுமல்லாமல்
துளைக்கும் அளவுக்கும்
இம்சை செய்யும்
இந்த பாழாய் போன
காதல் ஒரு தீவிரவாதம் தான்!

துணையாய் வர வேண்டும்
ஆசைக்கு அல்ல
ஆயுளுக்கும்!

நீ என்ன குளிர்சாதன
பெட்டியா? பார்க்க தானடி
செய்தேன் பத்தே நிமிடத்தில்
உறைய வைத்து விட்டாயடி!
தனிமை மட்டுமே
இவ்வுலகில் நிலையானது
உனக்கு பிடித்ததை
இயற்கையும் சரி,
இறைவனும் சரி
நிரந்தரமாய் தருவதில்லை.
மாற்றம் மட்டுமே வாழ்க்கை
என்பதை மடப்புத்தி
அவ்வளவு சீக்கிரத்தில்
உணர்வதே இல்லை!


**லி.நௌஷாத் கான்**

---

# நூல் விமர்சனம்

**முத்தையா மோகனின்**
**நூல் சுவை வள்ளுவம் வகுத்த**
**வாழ்வியற் கதைகள்**
**சிறுகதைகளின் தொகுப்பு.**
**தொகுப்பாசிரியர்,**
**பைம்பொழில்**
**அருண்தாஸ் மணி.**
**நூலாக்கம்: கவித்தேடல்**
**பதிப்பகம். நூல் உரிமை:**
**தமிழ்நாடு முத்தமிழ் சங்கம்.**
**பக்கங்கள்: 642.**
**விலை: 700. மட்டும்.**

1330 குறட்பாக்களுக்குமான மிகத் தேர்ந்த சிறுகதை களின் தொகுப்பு. 133 அதிகாரங்கள், 133 எழுத்தாளர்கள், 133 சிறுகதைகள்... ஒவ்வொரு அதிகாரங்களிலும் இருக்கின்ற பத்து குறட்பாக்களை மையப்படுத்திய அந்தக் குறட்பாக்களுக்குள் இன்றளவும் நடைமுறையில் இருக்கின்ற மனிதர்களின் மன இசங்களை புளப்படுத்துகின்ற ஆழமான சிந்தனையில் மிகத் திறந்த பார்வையில் எழுதப்பட்டிருக்கின்ற சிறுகதைகளின் தொகுப்பு.




அடித் தொட்டு முடி வரை இருக்கின்ற வாழ்வியலின் இகம் அகம் சார்ந்த பொருண்மைகளை நிலை நிறுத்தக்கூடிய மிக யதார்த்தமான மக்களின் வாழ்க்கை நடைமுறையை உள்ளடக்கிய கதைகளின் தொகுப்பு. வானுயர்ந்து நிற்கின்ற வள்ளுவப் பெருந்தகையின், ஏழு அடிகளைக் கொண்ட ஒவ்வொரு குறட்பாக்களிலும் இந்த உலகத்தில், அன்று தொட்டு இன்று வரை இருக்கின்ற உண்மையான தெளிவுகளை உண்மையான சுழிவுகளை , இன்பம் ,துன்பம், கோபம் ,பொறாமை ,காதல், களிப்பு, என்பனவையையெல்லாம் இந்த உலகத்திற்கு எடுத்து இயம்பும் விதமாக வள்ளுவனின் எழுத்தாணி நமக்கு அளித்த வரம் திருக்குறள். திருக்குறள் என்கிற அதிசயத்தை பள்ளிகளில் பயின்ற காலங்களோடு மறந்து போகின்ற மனிதர்களுக்கு மத்தியில், அதை காலம் காலத்திற்கும் நிலைத்து நிற்கும்படியாக சிறுகதைகளாக தொகுத்தளிப்பது என்பது ஒரு பெரும் செயல்தான். வள்ளுவ பெருந்தகையின் குறள்கள் என்பது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அவனைச் சார்ந்து இருக்கின்ற ஒன்றுதான் ஆனால் அதை அவனுடைய வாழ்வில் கடைபிடிக்கின்றானா என்கிற கேள்விதான் முக்கியம். அப்படி கடைப்பிடிக்க வேண்டும் என்பதை முன் நிறுத்துகிற முயற்சி தான் இந்த பனுவல்.

133 எழுத்தாளர்கள் அவரவர்களுக்கு பிடித்த ஒவ்வொரு அதிகாரங்களை தெரிவு செய்து அந்த அதிகாரங்களுக்கு இன்றைய நடைமுறை வாழ்வின் சிக்கல் சிணுங்கல்களை பக்கம் பக்கமாய் சொல்லுகின்ற சிறுகதைகளின் தொகுப்பு இந்த வள்ளுவம் வகுத்த வாழ்வியற் கதைகள்.

நம் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை அன்றாடம் நாம் எதிர்கொள்ளும் இன்னல்களையும் இடர்பாடுகளையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவமறியாத ஒரு உத்தமக்கிழவன் எழுத்தாணி கொண்டு ஏழு அடிகளில் இவ்வுலகை அளந்து வானுயர்ந்து நிற்கும் வள்ளுவனாம் எள்ளுக்குள் இமயக்கதைகளை அறக்கயிறு கொண்டு கிழித்து அறுத்துத் தைத்த அற்புதம் என்னவென்று அறிய முயலுகையில் கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே கனநேரத்தில் காதலுற்றேன். ஆதலால் வந்த தாக்கம் தான் இந்த பனுவல் உருவானதன் நோக்கம். என்கிறார் இந்த நூலின் தொகுப்பாசிரியர் தோழமைக்குரிய, பைம்பொழில் அருண்தாஸ் மணி. இவர் தமிழ்நாடு முத்தமிழ் சங்கத்தின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் நல்லுலகம் அறிந்த தெரிந்த பல நல்ல எழுத்தாளர்களைக் கொண்டு புனையப்பட்டிருக்கும் இந்த பனுவல், தமிழ்நாடு முத்தமிழ் சங்கத்தின் சீரிய முயற்சியாலும், அதனுடைய பொறுப்பாளர்களின் தீவிரமான செயல்பாட்டாலும் சேகரிக்கப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பு.

இதுவரை யாரும் செய்திடாத இந்த அரும்பணியை தமிழ்நாடு முத்தமிழ் சங்கமும், தோழர் பைம்பொழில் அருண்தாஸ் மணியும், தமிழ்நாடு முத்தமிழ் சங்கத்தின் சிறப்பான செயற்பாட்டாளர்களும், ஒன்றிணைந்து 133 எழுத்தாளர்களை ஒன்று சேர்த்து 133 சிறுகதைகளை உருவாக்கி வள்ளுவனின் 1:33 அதிகாரங்களுக்கும் அணிகலன் சேர்த்திருக்கிறார்கள்.

என்பதை நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த சிறுகதைகளின் பனுவலுக்காக சிரமேற்கொண்டு அரும் பணியை செய்திருக்கின்ற தொகுப்பாசிரியர், தோழர் பைம்பொழில் அருண்தாஸ் மணி அவர்களுக்கும், தமிழ்நாடு முத்தமிழ் சங்கத்திற்கும், மகிழ்ச்சியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எழுத்தாளர்**
**முத்தையா மோகன்**

---



காலை கண் விழித்த நொடி
முதல்உன் ஞாபகங்கள்!


உன் நினைவுகள் என்
மனதில் அழியா
சுவடாய் பொதிந்துள்ளன!

நீ இல்லா வாழ்க்கை
நரகமாய்உள்ளது !

உன்னை பிரிந்த நாள் முதல்
இன்று வரைஉன் அன்பிற்கு
இணை யாருமில்லை!

உன் பாசத்திற்கு ஏங்கும்
எனது ஏக்கங்கள்
உணர முடியாத வலியாய்
என்னை கொல்கிறது!

நீ வேண்டும், உன்னுடன்
வாழ்ந்த அந்த



பொக்கிஷமான
நாட்கள்
மீண்டும்
வேண்டும்!

திரும்பி
என்னிடம்
வா உயிரே!!!

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

---

பனைமரத்து பாட்டின் தாக்கம்
இன்றும் விடவில்லை

ஞாபகங்கள் அதிகம்தான்
மறதியும் உண்டுதானே...

நிறைய படித்த மாதிரி
இருக்கிறது

எனவே என்கற்பனைச்
சொற்களைப் போட்டு அதனை
நிறைவு செய்கிறேன்

#தருகின்றநன்மைகளை
இன்னும் சொல்வேன்
கேளுங்களேன்

பங்குனி சித்திரை
வெயிலுக்குக்
குளிர்நுங்கு நான் தருவேன்

காற்றிற்கு ஈடாக
நித்திரைக்குப்
பனைவிசிறி நான்தருவேன்

சுட்டு சுட்டு தின்பதற்குப்
பனம்பழமும் நான் தருவேன்

வேகவைத்த உணவாகப்
பனங்கிழங்கை நான் தருவேன்

சுடு தணிப்பதற்குக்
கற்கண்டாய் பனங்கற்கண்டை
நான் தருவேன்

மருந்துப் பொருளாகச்



சேர்ப்பதற்குக்
கருப்பட்டி நான் தருவேன்

கார்மழைக்கு வெயிலுக்குத்
தாழைகுடை நான் தருவேன்

இடைச்செங்கல் கூரைக்கு
உத்திரத்தை நான் தருவேன்

அரிசிதானியம் அத்தனையும்
புடைப்பதற்குச் சொளகாவேன்

பளிமாங்காய்
விற்பவர்களுக்குப்
பனங்கூடை நானாவேன்

சிரிக்கும் குழந்தைகளுக்குக்
கிலுகிலுப்பை நான் தருவேன்

எண்ணி இறைவழி பாட்டிற்குக்
குருத்தோலை நானாவேன்

இன்னும் என்ன. சொல்வதற்கு
என்னைப்போல் நீ
வாழ்வதற்கே..

**பானுமதி நாச்சியார்**
சிவகிரி.




## காலக்கண்ணாடி

அறுசீர் மண்டிலம்.

காலத்தைக் காட்டிடும்
கண்ணாடி காவியமே
தீட்டிடும் முன்னாடி
கோலமுற முன்வரும்
பொன்னாடி கொஞ்சுதமிழ்
இலக்கியம் நல்லாடி!
பாலமென அமைந்திடும்
காவியம் பளிங்கெனவே
சமைத்திடும் ஓவியம்
ஆலமென படர்ந்திடும்
இலக்கணம் அன்பென்றே
நட்ந்திடும் கலைகளே!

இலக்கியத்தின்
தொகுப்புதான் கண்ணாடி
ஈடில்லாச் சரித்திரம்
பின்னாடி மலையன்ன
நிகழ்வுகள் முன்னாடி
மாண்புடனே வந்திடும்
நல்லாடி! தலைமகளாம்
தமிழ்மகள் கண்ணாடி
தக்கநல்ல உயர்வெலாம்
பொன்னாடி நலம்பலவே
காட்டிடும் கண்ணாடி
நாடோறும் நன்னயம்
தன்னாடி!

முனைவர்
இராம.வேதநாயகம்.



## திருப்பம்

வட்டமடித்து வட்டமடித்து
பின் சட்டென்று தாழ்வாகப்
பறந்து தண்ணீரின்
மேற்பரப்பில் தலை காட்டிய
மீனைக் கவ்விக்கொண்டு
பறந்தபின், அது ஒரு மீன்
குஞ்சு என்றறிந்ததும்
திரும்பி ஒரு வட்டமடித்து,
தண்ணீரிலேயே இட்டுச்
சென்றது,
தன்
குஞ்சுக்கு
இரை
தேடிவந்த
நீர்ப் பறவை .



கே. பி.
ஜனார்த்தனன்



## பேப்பர் பையன் !


’ தம்பி, அமெரிக்கா ஈரான்
யுத்தம் எந்த அளவுல
இருக்கு !" என்று நான்
கேட்டபோது, உதட்டை
பிதுக்கினான்... உள்ளூர்
செய்திகள் முதல் உலகச்
செய்திகள் வரை.. வீடு
வீடாய் கொண்டு போய்
சேர்க்கும் பேப்பர் போடும்
பையன் !

## தனிமை !

பூங்காவில் தனிமையை
ரசித்து அமர்ந்திருப்பவனை
எழுந்து போகச்
சொல்லும் காவலர்கள்...
கண்டுகொள்வதே இல்லை...
புதர்மறையில்
சில்மிஷம்
செய்யும்
(கள்ள)காதல்
ஜோடிகளை !



எம்.பி.
தினேஷ்.
கோவை



## தாத்தாவின் பாசம்

என் சிறு விரல் பிடித்து
நடக்கக் கற்றுத் தந்த
நடைவண்டி என் தாத்தா!
அந்த விரலில் ஒட்டிய
அன்பின் வெப்பம் இன்னும்
அப்படியே இருக்கின்றது!

தோளில் தூக்கிக்
கொஞ்சும் போது
எனக்காகவே உலகம்
உள்ளதென்று உணர
வைத்தவர் தாத்தா!

மாலைத் திண்ணையில்
நிலாக் கதைகள் கூறுகையில்
கதை வீரர்களை விட
பெரிய வீரனாய்
இருப்பாரென் தாத்தா!

நான் கீழே விழுந்தால்
மண்ணை உதைத்து
என் பேரனைத் தள்ளிட்டியா?
என பூமி மேல்
கோபம் காட்டியவர்
என் தாத்தா!

என் சின்ன ஆசைகளைக்
கூட பெரிதாய்க் கொண்டு
நிறைவேற்றும் மனிதர்
என் தாத்தா!

இன்று... அவர் தோளும்
இல்லை குரலும் இல்லை
திண்ணைக்
கதைகளுமில்லை!

ஆனாலும் வாழ்க்கை
கஷ்டமாகும் போத்கெல்லாம்
காதிலின்னும் ஒலிக்கிறது
"பயப்படாதே பேராண்டி
நீ
விழுந்தாலும்
எழுந்தோடக்
கற்றவன்..."
எனும்
தாத்தாவின்
ஊக்கக் குரல்!



முகில் தினகரன்
கோயமுத்தூர்



## அது ஒரு பொற்காலம்...

அன்று...
அழுக்குச்சட்டை
அரைக்குட்டைபாவடை....
காதறுந்த மஞ்சப்பையோடு...
அம்மாவிடம் அடம்பிடித்து
வாங்கிய அஞ்சுப்பைசாவை
ஓட்டமும் நடையுமாய்
பள்ளிக்கூட வாசலில் ...
ஆராயிப்பாட்டி பொட்டலமாய்
காகிதத்தில் மடித்து விற்கும்
சவ்வு (கல்கோனா) மிட்டாயை
சக தோழிகளுடன்
பகிர்ந்து உண்டதை
நினைத்தால் சிரிப்புத்தான்
வருகிறது... ஆனால்,

இன்று...

என் மகளுக்கு வீட்டருகே
மஞ்சள் நிறப்பேருந்து
ஐம்பது ரூபாய்க்கு
குறையாமல் தின்பண்டம்
குளிர்பானங்கள்..!

ஏ.எம்.ஷெரீஃப்,
புதுக்கோட்டை.

## வாழ்நாள் முழுவதும் நினைவிருக்கும் நண்பன் !

உயிர் காப்பான் தோழன்
உண்மைஉயிர் கொடுத்தும்
காப்பான் நண்பன்

அம்மா அப்பா மனைவிக்குச்
சொல்லாத ரகசியம்
அன்பு நண்பனுக்குச்
சொல்லலாம் காப்பான்

சொந்த பந்தம் பணம் பார்த்து
பழகும் சொந்த நண்பன்
மனம் பார்த்து பழகுவான்

நமக்கு ஒரு சோகம் என்றால்
உடன் நம்மைத் தேடி வரும்
ஆறுதல் நண்பன்

நமக்கு ஒரு கவலை என்றால்
நம் கவலையைத் தீர்ப்பவன்
நண்பன்

நம் கண்ணில் கண்ணீர்
வழிந்தால் நமக்காக துடைக்க
கரம் நீடுபவன் நண்பன்

நம் வளர்ச்சி கண்டு பெருமை
கொள்வான் நம் மகிழ்ச்சி
கண்டு பூரிப்பான் நண்பன்

போட்டி வந்தால் விட்டுக்
கொடுப்பான் போட்டியில்
இருந்து விலகிடுவான்
நண்பன்

தியாகம் செய்த நண்பன்
உண்டு துரோகம் செய்தவன்
நண்பனே அல்ல துரோகி

சாதனைக்குத் துணை
நிற்பான் நண்பன்
சோதனையை தூர
விரட்டுவான் நண்பன்

பணத்தைப் பெரிதாக
நினைக்காதவன் பண்பில்
சிறந்த பாசக்கார நண்பன்

நண்பனை யாரும் இகழ்ந்தால்
துடிப்பான் நண்பனின்
பெருமையைப் பேசும் நண்பன்

நாம் செய்த சிறு உதவி
மறக்க மாட்டான் நமக்கு
அவன் செய்த பேருதவி
மறந்திடுவான் நண்பன்

மறக்க முடியாதவன் நண்பன்
மறக்கக் கூடாதவன் நண்பன்



வருடத்தில்
ஒரு நாள்
மட்டுமல்ல
நினைவு
வாழ்நாள்
முழுவதும்
நினைவிருக்கும்
நண்பன்.

கவிஞர் இரா.இரவி

## மகத்தானவன்...!

உலகில் தோன்றிய
உயிர்கள் அனைத்திலும்
அரிதினும் அரிதானவன்
மனிதன்... விதிகளை மீறி
விளைந்து வீரிய வரலாறு
நிகழ்த்திய வியப்பின் உச்சம்
மனிதன்...

தரணி உதித்தநாள் முதலாய்
தடைகளை யெல்லாம்
தகர்த்தெறிந்து, தாண்டி
தடம் பதித்தவன் மனிதன்...

மன வேகப் பயணத்தில்
மண்ணையும் விண்ணையும்
மகத்துவ கம்பீரத்தில்,
ஆண்டு அனுபவிக்கும்
ஆறறிவு சுரங்கம் மனிதன்...

நினைத்த மாத்திரத்தில்
நெஞ்சம் மாற்றி புத்தம்புது
மலராய் நித்தம் நித்தம்
பூக்கும் நேர்த்தியின்
விருட்சம் மனிதன்...

ஊழல், கொலை, கொள்ளை,
உள் குத்து, வெளி குத்து
என்று எதிர்மறை பேய்கள்
இங்கே ஏராளமாய்
இருந்தாலும், நேர்மறை
தேவதைகளால்,காலம்
காலமாய் நீடூழி நிலைத்து
நிற்பவன், மனிதன்...

அதீத அணுகுண்டு
யுகத்திலும் அன்பென்னும்
மூன்றெழுத்து மந்திரத்தால்,
அகிலத்தின் ஆயுளுக்கு,
அன்றும் இன்றும் என்றும்
ஆபத்பாந்தவனாய்
இருப்பவன், மனிதன்...!


நெல்லை குரலோன்
பொட்டல்புதூர்

## போரே:

போரெனப் பட்டதோ
பூமியை அழிக்கும்
பாரென தென்றே
போட்டியில் உலகை
சீர்கெடச் சிதைப்பது
சிறிதும் முறையன்றோ
வேர்முதல் தொடங்கி
விதையையும் அழிக்கும்
வேடிக்கை மனிதர்கள்
விவரமில் தலைவர்கள்
கேடித்தனம்
நிறைந்த
கோணல்
புத்தியே!!



வைரமணி
சென்னை



குளத்தை வெட்டி
விலங்கினத்தை வாழ
வைத்தான்...

ஆற்றை உருவாக்கி
விவசாயத்தை
பெருக்கினான்....

மரங்களை நட்டு மழையை
பெருக்கினான்...

பண்டங்களை பரிமாறி
பகையில்லாமல் வாழந்தான்...

வாக்குறுதி கொடுத்து
மானஸ்த்தனா வாழந்தான்...

குற்றங்கள் செய்ய மறுத்து
நேர்மையாய் வாழ்ந்தான்...

மதுவை அருந்தி இதை
அத்தனையும் அழித்தான்...

வாழ வேண்டிய வயதில்
விபத்தில்
சிக்கி
செத்தான்...!!



பொன்.
கருணா
நவி மும்பை

## சொந்தச்சிறகுகள்

பாரதம் வல்லரசாகக்
கனவு காணுங்கள்
என்றால் பலர்
வல்லரசுகளில்
குடியுரிமை வாங்கிடக்
கனவு காண்கிறார்கள்!

அயல்நாடுகளில்
அடிமைகளாய் வாழ்வது
யோகமன்று மோகம்!
தாயகத்தில் திரவியம்
இல்லை எனில் திரைகடல்
ஓடலாம் திரைகடல்
ஓடுவதே தீர்வாகுமா?

தாயகத்தின் தயவில்
பெற்ற கல்விச்சிறகுகளை
அந்நிய தேசம் உயர
அர்ப்பணிக்கிறார்கள்!

பெரும்பான்மைப்
பெற்றோர்கள் பெருமிதம்
கொள்வது மூத்தமகன்
அமெரிக்காவில்
வசிக்கிறான் இளையமகன்
இலண்டனில் வசிக்கிறான்
செல்லமகள் கனடாவில்
வசிக்கிறாள் நாங்கள்
முதியோர் காப்பகத்தில்
வசிக்கிறோம் புண்ணியம்
செய்த புத்திரபாக்கியம்
அல்லவா?

ஆடையை வெட்டி ஒட்டி
தைத்திடும் ஒரு
தையல்காரனின்
பணியை ஆள்பவர்கள்
மட்டுமல்ல வாழ்பவர்களும்
செய்திட வேண்டும்!

இங்கே
எப்போதும்
அவசரத்தில்
ஆனந்தம்
காண
துடித்திடும்
நாம்
தயார் நிலை ஆடைகளுக்கே
தவமிருப்பது தகுமோ?



கவிஞர் த.அனந்தராமன்
துறையூர்

குழந்தைப் பாடல்

## விடியற்காலை!

விடியற் காலை எழுந்திரு
வினைகள் எல்லாம்
முடித்திடு படிப்பை முதலில்
தொடங்கிடு பண்பை
அதிலே பதித்திடு!

ஒழுக்கம் தம்மில் உயர்ந்திடு
ஒற்றுமை தம்மில் நிலைத்திடு
பழக்க வழக்காம் காத்திடு
பாசந் தன்னில் சேர்ந்திடு!

பெற்றோர் தம்மை
வணங்கிடு பெருமை
தம்மில் சிறந்திடு கற்றோ
ராக மாறிடு கனிவாய் நீயும்
வாழ்ந்திடு!



குழந்தைப் பாடல்!

## கொக்கு!

ஒற்றைக் காலில் நிற்கிறாய்
உணவுக் காகப் பார்க்கிறாய்
வற்றாக் குளத்தில்
வாழ்கிறாய் வயலில் எங்கும்
சூழ்கிறாய்!

மீனை தவளை உண்கிறாய்
மிதக்கும் நீரைக்காண்கிறாய்
காண அழகைத் தருகிறாய்
கருத்தாய் இரையைப்
பெறுகிறாய்!

எலியைக் கூடப் பிடிக்கிறாய்
ஏற்ற உணவாய் அடைகிறாய்
வலசை நன்கே போகிறாய்
வரிசை காட்டி மகிழ்கிறாய்!



குழந்தைப் பாடல்

## அணிலே!

அணிலே அணிலே
அழகிய அணிலே
அழகுக் குட்டி
அழகிய அணிலே!
உணவே பழமும்
உள்ள கொட்டையும்
உண்டு மகிழ்வாய்
உன்னத அணிலே!

முதுகில் மூன்று
கோடு பெற்றாய்
முடியை மென்மை
யாகக் கொண்டாய்!
இதயம் ஈர்க்கும்
அழகிய அணிலே
இனத்தைப் பெருக்கும்
எங்கள் அணிலே!

கொறித்து உண்ணும்
கொஞ்சும் அணிலே
கூர்மைப் பற்கள்
கொண்ட அணிலே!
திறமை உடைய
தேர்ந்த அணிலே
தீட்டும் பல்லைத்
தெளிவாய் அணிலே!



குழந்தைப் பாடல்!

## அன்பாய்ச் சாப்பிடு!


தம்பிப் பாப்பா தம்பிப் பாப்பா
இங்கே வாங்கோ
அம்மா செய்யும் காய்கறியை
அன்பாய்ச் சாப்பிடுங்கோ!

தம்பிப் பாப்பா தம்பிப் பாப்பா
இங்கே வாங்கோ
அம்மா செய்யும் கீரைவகை
அழகாய்ச் சாப்பிடுங்கோ!

தம்பிப் பாப்பா
தம்பிப் பாப்பா
இங்கே
வாங்கோ
அம்மா
செய்யும்
கிழங்குகளை
கேட்டுச் சாப்பிடுங்கோ!



முனைவர்
இராம.வேதநாயகம்



## விண்மீன்கள்

நிலாப் பெண்ணோடு
இரவின் நிழலில்
உலாவரும் நட்சத்திர
நாயகனே...

இமையின்றி ஒளிர்கிறாய்
இதழின்றி சிரிக்கிறாய்
ஓசையின்றி அழைக்கிறாய்

உன்னழகைக் கண்டு
ரசித்து, திகைத்து, பிரமித்த
என்னை அழைத்து என்ன
வேண்டுமென நீ கேட்டால்...
உன்னைத் தவிர வேறென்ன
கேட்பேன் நான்.


கனவின் கதவுகள் திறந்து
காற்றின் கரங்களில் ஏறி
உன் உலகத்துக்குள்
வந்தால்...

ஓர் நொடி பார்வையில்
ஒரு யுகம் வாழ்ந்தது போல
என் உள்ளம் நிரம்பி
வழியுமே...

நீ சிரிக்கும் அழகில்...
நிலவும்
பொறாமை
கொள்ளுமே
என்னுயிரே
உன்னில்
கரையுமே...



நா.பத்மாவதி
கொரட்டூர்



வாழ்க்கையின் அருமை
மனைவி பிரியும் போது...
பாசத்தின் அருமை
குழந்தைகள் பிரியும்போது...
நண்பனின் அருமை
பணம் இல்லாத போது...
சுகத்தின் அருமை
பொருள் இல்லாத போது...
சமூகத்தின் அருமை
மதிப்பு இல்லாத போது...
உடலின் அருமை
நோய் இல்லாத போது...
மனதின் வலிமை
சச்சரவுகள்
இல்லாதபோது...
எல்லாம் இழந்த பின்பும்
மாறாத அன்பு கிடைக்கும்
ஒரே இடம் தாயின்
அன்புதான். அம்மா...
அம்மா... என்றைக்கும்
நிலைக்கும், கொடுக்கும்
எதையுமே எதிர்பார்க்காமல்
இறுதிவரை
அது
அம்மாவின்
அன்பு,
அம்மாவின்
அன்புதான்



Dr Harish
Kumar D

## புதிய வாழ்க்கை

என்னெஞ்சை உனக்கு நான்
எப்போதோ தந்துவிட்டேன்

உன் கண்ணீர் அதனை
அபிஷேகிக்கவில்லை

இளகிய உணர்வுகள் குளுமை
செய்யவில்லை

உன் கழுத்துக்கு
மாலையாகாமலே
மலர்கள் காய்ந்து
போயின

உனது பார்வையில்தான்
இருந்தது ஈரம் கொஞ்சம்,
அதுவும் உலர்ந்த பூக்களுடன்
உதிர்ந்து விட்டது.

இந்த மண்ணை
மிதிக்கும்போது

உன் கையில் இருந்து ஒரு
விதை விழுமாயின் அது
அழிவற்ற கனியாக (புதிய
வாழ்க்கை) உன்னிடமே
வந்துசேரும்.



எஸ். தயாளன்
காட்பாடி சேவூர்.



குணாக்களின்
உண்மைக் காதலை
உயிரோடு இருக்கும்
வரையில் எந்த
அபிராமிக்களுக்குமே
புரிந்து கொள்வதே இல்லை!

வெற்றுக் காகித
பணங்களுக்கு
கிடைக்கிற மரியாதை
வெறும் பய மனங்களுக்கு
கிடைப்பதில்லை.
உயிரில்லாத பணத்திடம்
உயிருள்ள மனிதன்
தோற்று தான் போகிறான்!

கண்களால் திண்கிறாய் நீ
மென்று முழுங்குகிறேன்
நான்! இப்படியெல்லாம்
சுனாமி பார்வையாலே
அடிக்காதே
பச்ச உடம்பு தாங்காது!
விட்டு விட்டு போனாலும்
கெட்டு போகாமல்
தான் இருக்கிறது உன்
நினைவுகள்.
அவ்வளவு சீக்கிரத்தில்
தூக்கியெறிய உன்
நினைவுகள் என்னகுப்பையா?
சப்பையாய் நினைத்து
தூக்கி போட்டுச் சென்றாலும்
உன் நினைவுகளை வாழும்
அற்ப ஜென்மம் வரை

பொக்கிஷமாய்
பாதுகாப்பேன்!
எத்தனை,எத்தனையோ
கதைகள் வந்தாலும்
தேவதை கதைகளை போல
எந்த கதைகளும்
இனிப்பதில்லை!

Love in First Sightல்
இதுவரை நம்பிக்கை
இருந்ததில்லை
உன்னை என்று பார்த்தேனோ
அன்று முதல் உன் இதயம்
என்னும் Love Lock Up ல்
மாட்டிக் கொண்டேனடி!

எத்தனையோ பேருக்கு
அவன் ஆறுதலாய்
இருந்திருக்கிறான் ஏனோ
அவன் ஆறுதலுக்கு மட்டும்
யாருமே துணை இல்லை.
பழி சொல்பவர்களால்
ஒரு போதும் வழி சொல்லிட
முடியாது. அவன் ஆணாம்
உங்கள் முன் அழுவதற்கு
இப்போது மனமில்லை
அந்த கடைசி அறையில்
வலிகள் குறையும் வரை
அழுது தீர்க்கச்சொல்லுங்கள்
அவன் இன்னும்
கொஞ்சம் காலமாவது
வாழ்ந்து கொள்ளட்டும்!

லி.நௌஷாத் கான்

























## Special Invitation

to retired seniors **house wives businessmen bankers**
CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your **second Innings with a career business opportunity**

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided

For successful business.

**Contact Mr. Irudaya Raj**
**Ph.9486634780**












## WANTED

Needed female staff
to look after
children, patients.

Contact

9150989424




## WANTED

Retd, VRS, Home Makers,
NRIs, Business Person

Contact

8248951872

## WANTED

Site Supervisor required
for construction work in Ambattur



Contact:
8428872887










தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE








கங்கோத்ரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real
Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500
per day
Work From Home
Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000
per month
9337501889
7789941009


WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247



WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள்
தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998



# பல்சுவை களஞ்சியம்




# கணவன் என்பவன் யார்



சில மனைவிமார்களின் வார்த்தைகள்
அவர் என்ன வேண்டாலும் செய்யட்டும் ...பெண்களோடு போகாமல் இருந்தால் அதுவே போதும்.
அவர் என்ன வேண்டும் என்றாலும் செய்யட்டும் ....குடிக்காமல் வீட்டிற்கு வந்தால் போதும்.
அவர் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் ....குடும்ப நடத்த நாலு காசு சம்பாதித்து கொடுத்தால் போதும்.
அவர் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் ....அதை வாங்கி வா, இதை வாங்கி வா என்று துன்புறுத்தாமல் இருந்தால் போதும்.
அவர் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்.... சண்டை போடட்டும் ஆனால் கை தொட்டு அடிக்காமல் இருந்தால் போதும்.
அவர் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் ...நான்கு அடி அடிக்கட்டும் ஆனால் அசிங்கமாக பேசாமல் இருந்தால் போதும்.
அவர் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் ....என்னை கூட பார்க்க வேண்டாம் இந்த குழந்தைக்கு தேவையானதை செய்தால் மட்டும் போதும்.
அவர் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் ...இரவில் என் ஆசையை தீர்த்தல் போதும்.
அவர் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் ... என்னை நன்றாக பார்த்துக் கொண்டால் போதும்.
அவர் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் ....என்னோடு சேர்த்து என் தாய் தந்தையையும் பார்த்துக் கொண்டால் போதும்..,
அவர் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் ....என்னை சந்தோசமாக பார்த்துக் கொண்டால் போதும்..
அவர் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்..... தொடரும் தொடர்ந்து கொண்டே இருக்கும்..!
ஆனால் தினம் தினம் வேண்டாம்... வாரம் ஒரு முறை வேண்டாம்... காலாண்டுக்கு ஒரு முறை வேண்டாம்... அரையாண்டுக்கு ஒரு முறை வேண்டாம்... வருடம் ஒருமுறையாவது .. உங்களுக்கு என்ன வேண்டும் ? என்ன பிடிக்கும் ? உங்கள் ஆசை என்ன ? நான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று மனைவி கணவனிடம் ஒரு முறையேனும் கேட்டிருந்தால் ... !
கணவன் உங்களுக்காக மட்டும்% சதவீதம் கணவனாக இருந்திருப்பான்..,
ஒன்றை புரிந்து கொள்ளுங்கள்
கணவன் தனக்காக மட்டுமே உழைப்பதும் இல்லை ஓடுவதும் இல்லை சம்பாதிப்பதும் இல்லை..! அனைத்தும் அவனுக்காக மட்டுமே இல்லை என்று தெரிந்தும்... உலகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் ஒரே ஜீவன் கணவன் ..!
அவனைப் புரிந்து கொள்ளாத மனைவிகளே இந்த உலகத்திலேயே ஏராளம்.
கணவன்களை சிரிக்க வைக்கும் மனைவிமார்கள் கிடைத்துவிட்டால் கணவன் ஒருபோதும் கோவிலுக்கு செல்ல மாட்டான் ..!
மனைவிகளே நீங்கள் தெய்வமாக மாறுங்கள்...! வாழ்க்கை வாழ்வதற்கே..

# 63 நாயன்மார்கள் பெயர்கள்.. அறுபத்தி மூவர்-மாதம்-நட்சத்திரம்...

அதிபத்தர். ஆவணி-ஆயில்யம்.
அப்பூதி அடிகள். தை-சதயம்.
அமர் நீதியார். ஆனி-பூரம்.
அரிவாட்டாயர். தை-திருவாதிரை.
ஆனாய நாயனார். கார்த்திகை-அஸ்தம்.
இசைஞானியார். சித்திரை-சித்திரை.
இடங்கழியனார்.ஐப்பசி-கார்த்திகை.
இயற்பகையார். மார்கழி-உத்திரம்.
இளையான்குடிமாறர். ஆவணி-மகம்.
உருத்திரா பசுபதியார். புரட்டாசி-அஸ்வினி.
எறிபத்தர். மாசி-அஸ்தம்.
ஏயர்கோன்கலிக்காமற். ஆனி-ரேவதி.
ஏனாதி நாதர். புரட்டாசி-உத்திராடம்.
இயடிகள் காடவர்கோன். ஐப்பசி-மூலம்.
கணநாதர். பங்குனி-திருவாதிரை.
கணம்புல்லர். கார்த்திகை-கிருத்திகை.
கண்ணப்பர். தை-மிருகசீரிஷம்.
கலிக்கம்பர். தை-ரேவதி.
கலியர். ஆடி-கேட்டை.
சேரமான் பெருமான். ஆடி-சுவாதி.
கழற்சிங்கர். வைகாசி-பரணி.
காரியார். மாசி-பூராடம்.
காரைக் காலம்மையார். பங்குனி-சுவாதி.
குங்குலியக்கலயர். ஆவணி-மூலம்.
குலச்சிறையார். ஆவணி-அனுஷம்.
கூற்றுவநாயனார்.ஆடி-திருவாதிரை.
கோட் செங்கோட் சோழன். மாசி- சதயம்.
கோட்புலியார். ஆடி-கேட்டை.
சடையனார். மார்கழி-திருவாதிரை.
சண்டேஸ்வரர். ஆடி-கேட்டை.



சத்தியார். ஐப்பசி-பூசம்.
சாக்கியார். மார்கழி-பூராடம்.
சிறப்புலியார். கார்த்திகை-பூராடம்.
சிறுத்தொண்டர். சித்திரை-பரணி.
சுந்தரர். ஆடி-சுவாதி.
செருத்துணையார். ஆவணி-பூசம்.
சோமாசிமாறர். வைகாசி-ஆயில்யம்.
தண்டயடிகள். பங்குனி-சதயம்.
திருகுறிப்புத் தொண்டர். சித்திரை-சுவாதி.
திருஞானசம்பந்தர். வைகாசி-மூலம்.
திருநாவுக்கரசர்.சித்திரை-சதயம்.
திருநாளைபோவார்(நந்தனார்). புரட்டாசி-ரோகிணி.
திருநீலகண்டர். தை-விசாகம்.
திருநீலகண்ட யாழ்ப்பாணர். வைகாசி-மூலம்.
திருநீலநக்கர். வைகாசி-மூலம்.
திருமூலர். ஐப்பசி-அசுவதி.
நமிநந்தியடிகள். வைகாசி-பூசம்.
நரசிங்க முனையரையர். புரட்டாசி-சதயம்.
நின்ற சீர்நெடுமாறர். ஐப்பசி-பரணி.
நேசர். பங்குனி-ரோகினி.
புகழ்ச்சோழர். ஆடி-கிருத்திகை.
புகத்துணையார். ஆவணி-ஆயில்யம்.
பூசலார். ஐப்பசி-அனுஷம்.
பெருமிழலைக்குறும்பர். ஆடி-சித்திரை.
மங்கையர்க்கரசியார். சித்திரை-ரோகிணி.
மானக் கஞ்சாறர். மார்கழி-சுவாதி.
முருகர். வைகாசி-சுவாதி.
முனையாடுவார். பங்குனி-பூசம்.
மூர்க்கர். கார்த்திகை-மூலம்.
மூர்த்தியார். ஆடி-கிருத்திகை.
மெய்ப் பொருளாளர். கார்த்திகை-உத்திரம்.
வாயிலார். மார்கழி-ரேவதி.
விறன் மிண்டர்.சித்திரை-திருவாதிரை.

# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன? | கொசு |
| மழையில் பிறந்து வெயிலில் காயுது? | காளான் |
| அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான், அவன் யார்? | பந்து |
| வட்ட வட்ட நிலவில் வரைஞ்சிருக்கு; எழுதியிருக்கு. அது என்ன? | நாணயம் |
| ஓடையில கருப்பு மீனு துள்ளி விளையாடுது அது என்ன ? | கண் |
| பூ பூப்பது கண்ணுக்குத் தெரியும். காய் காய்ப்பது கண்ணுக்குத் தெரியாது. அது என்ன? | வேர்கடலை |
| பட்டுப்பை நிறைய பவுண் காசு. அது என்ன? | வத்தல் மிளகாய் |



# ஜோக்ஸ்

உன் ஆசிரியர் ரொம்ப நல்லவர்னு எப்படி சொல்ற?


ஞாயிற்றுக்கிழமை கூடாது டியூஷன் வைத்து பாடம் நடத்தி எங்கள தூங்க வைச்சிடுவார்.

=================

எங்க அப்பாவை நினைச்சா பாவமா இருக்குடா!

ஏன்டா?

எங்க வாத்தியார் கூட “முட்டாள் பையன்




மகனே” னு சொல்றாரு டா.

=================

உங்க தாத்தா பாஸ், பாஸ்னு சந்தோஷத்தில் குதிக்கிறார். நீ பரிட்சையில் பாஸ் ஆனதாக குதிக்கிறாரா?

இல்ல. அவர் முதியோர் கல்வி தேர்வில் பாஸ் ஆகிட்டார். அதுக்கு தான்.

=================

மகாராஜாவின் மனைவி காற்றடிச்சா பறந்து விடுவார்கள்!

மகாராணி அவ்வளவு ஒல்லியா?

இல்ல அவங்க தான் “பட்டத்து” ராணி ஆச்சே!


=================

நமது மன்னர் போர் புரிவது போல் அடிக்கடி கனவு வருவதாக சொல்கிறார். ஏன்?

கனவில்கூட போருக்கு செல்ல மாட்டார் என்று யாரும் சொல்லிவிடக் கூடாது என்பதற்காக தான்.




# யார் முட்டாள்??



சோழபுரம் எனும் ஊரில் ராமு என்பவர் வாழ்ந்து வந்தார். அவரை அவ்வூர் மக்கள் அனைவரும் முட்டாள் என்றே கூறுவார்கள். அந்த ஊர் மக்கள் அனைவருக்கும் ராமு ஒரு விளையாட்டு பொருளாகவே இருந்தான்.

அவனிடம் உடைகளை கொடுத்து அணிந்து வரச் சொன்னால், காலில் அணிய வேண்டிய துணியை மேல் உடம்பிலும், மேற்சட்டையை காலிலும் அணிந்து வருவான்.

யார் அவனை அந்த நிலையில் பார்த்தாலும் சிரித்து விடுவார்கள். அந்த ஊருக்கு விருந்தினர் யார் வந்தாலும் முதலில் ராமுவை வரவழைத்து, இவனைப் போன்ற முட்டாள் உங்கள் ஊரில் உண்டா? என்று கேட்பார்கள்.

ஒருநாள் குமார் என்பவர் வீட்டிற்கு வெளியூரிலிருந்து அவரது நண்பர் சக்தி பண்டிகைக்கு வந்திருந்தார். பின்னர் குமார் இந்த ஊரில் முட்டாள் ஒருவன் இருக்கிறான். அவனை வரவழைத்தால், நமக்கு நேரம் கடப்பதே தெரியாது என்றார். உடனே அவனை வரவழைக்க ஆள் அனுப்பினான்.

சிறிது நேரத்திற்குள் அந்த முட்டாள் ராமு அங்கு வந்து சேர்ந்தான். குமார் அவனிடம் தன் இரண்டு கைகளையும் நீட்டி, நன்றாகப் பார். ஒரு கையில் ஐந்து ரூபாய் நாணயம் உள்ளது. மற்றொன்றில், ஒரு ரூபாய் நாணயம் உள்ளது. உனக்கு எது வேண்டுமோ அதை எடுத்துக் கொள் என்றான். ராமு இரண்டு கைகளையும் மாறி மாறிப் பார்த்தான். 'ஆ! ஒரு ரூபாய் பெரிய காசு!" என்று சொல்லிக் கொண்டே ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்துக்கொண்டான்.

பின்னர் குமார் அவரது நண்பர் சக்தியிடம் இவனைப் போன்ற முட்டாளை நீ பார்த்ததுண்டா? ஒரு ரூபாயை விட ஐந்து ரூபாய் எவ்வளவு மதிப்புள்ளது? விலை குறைவான மதிப்புடைய நாணயத்தை எடுத்துக்கொண்டு இவ்வளவு சந்தோஷமடைகிறான் என்றார்.

குமாரின் நண்பர் சக்திக்கும், ராமுவுடன் விளையாட வேண்டும் என்று ஆசை வந்தது. தன் இரண்டு கைகளையும் அவன் முன் நீட்டி, வலது கையில் வைர மோதிரம் உள்ளது. இடது கையில் வெறும் ஐம்பது பைசா உள்ளது. ஏதாவது ஒன்றை எடுத்துக்கொள் என்றார், சக்தி.

ராமு இரண்டு கைகளையும் மாறி மாறிப் பார்த்து சற்று நேரம் சிந்தித்தான். அவன் இறுதியாக ஐம்பது பைசாவைத்தான் எடுத்தான். குமார் தன் நண்பரிடம் நீங்கள் ராமுவிடம் பேசிக் கொண்டிருங்கள். எனக்கு வேலை இருக்கிறது என்று உள்ளே சென்றுவிட்டார்.

பிறகு சக்தி, ராமுவிடம் நீ ஏன் முட்டாள்தனமாக நடந்து கொள்கிறாய்? அதிக விலை மதிப்புடைய வைர மோதிரத்தை விட்டுவிட்டு வெறும் ஐம்பது பைசாவை எடுத்துக் கொண்டாயே! இனியாவது சிந்தித்து, அறிவுள்ளவனாக நடந்து கொள் என்று அறிவுரைக் கூறினார்.

ராமுவோ ஐயா! நான் மிகக் குறைந்த மதிப்புடைய நாணயங்களையே எடுக்கிறேன். எல்லோரும் என்னை முட்டாள் என்று நினைத்து என்னிடம் நாணயங்கள் உள்ள கைகளை நீட்டுகின்றனர். இதிலேயே எனக்கு ஒரு நாளில் நான்கு அல்லது ஐந்து ரூபாய் கிடைக்கிறது.

நீங்கள் சொல்வது போல ஒரே ஒரு நாள் விலை குறைவான நாணயத்தை எடுக்காமல், அதிக மதிப்புடைய நாணயத்தை நான் எடுத்துக் கொண்டால், அதன் பிறகு யாரும் என்னிடம் கையை நீட்டி விளையாட மாட்டார்கள் என்றான், ராமு. இதைக்கேட்ட சக்தி வியந்து போனார்.

நீதி :
ஒருவரின் வெளித்தோற்றத்தைப் பார்த்து அவர்களை எளிதில் நிர்ணயிக்கக்கூடாது. யாரையும் முட்டாள் என்று எண்ணுவது தவறு.



சித்திரம் வரையக்
கற்றுக்கொள்
சிந்தையைச் சிறப்பாய்
வைத்துக்கொள்
வண்ணங்கள் குழைப்பது
கலையன்றோ
எண்ணங்கள் மணப்பது
சுவையன்றோ...

நிற்கும் மரங்கள் அழகன்றோ
பறக்கும் பறவை அழகன்றோ
மிதக்கும் படகு அழகன்றோ
தாவும் தவளை அழகன்றோ...

சித்திரம் வரையக் கற்றுக்கொள்
சிந்தையைச் சிறப்பாய்
வைத்துக்கொள்
தூரிகைப் பிடிப்பது திறனன்றோ
தூய்மைக் குணமும் உயர்வன்றோ..

சின்னப் பூக்கள் சித்திரமாய்
சிரிக்கச் சிரிக்க வரையலாம்
குட்டி குட்டிச் செடிகளை
எட்டி எட்டி வரையலாம்..
சித்திரம் வரையக் கற்றுக்கொள்
சிந்தையைச் சிறப்பாய்
வைத்துக்கொள்
எதையும் கற்க இன்பந்தாம்
ஏற்றம் வாழ்வில்
நிச்சயந்தாம்...

# நேர்மை உயர்வு தரும்




மரியாதை ராமன் வசித்து வந்த ஊரில் சோமன் என்ற ஒரு பணக்காரன் இருந்தார். அவர் மிகவும் பொல்லாதவர், பணத்தாசைப் பிடித்தவர். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு சரியான கூலி கொடுக்கமாட்டார்.

ஒருமுறை சோமன் தன் தோட்டத்தில் விளைந்த தேங்காய்களை சந்தையில் விற்று விட்டு, கிடைத்த பத்தாயிரம் ரூபாயுடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டு வழியாக வீட்டுக்கு வரும் போது தனது பணப்பையைத் தொலைத்துவிட்டார்.

வீட்டுக்கு வந்ததும் வண்டியில் பணப் பையை தேடி பார்த்து கிடைக்காமல் புலம்பி தள்ளினார். மாட்டு வண்டி ஓட்டி வந்தவர் முதல் அனைவரையும் கேட்டு பார்த்து கிடைக்காமல் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்.

அப்போ அவரது மனைவியார் 'உங்க பணப்பையை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்க, கண்டிப்பாக யாராவது கொண்டு வந்து கொடுப்பாங்க' என்றார்.

ஆகா இது நல்ல திட்டமாக இருக்கிறதே என்று நினைத்து அடுத்த நாளே ஊர் முழுவதும் தண்டோரா போட்டு சொல்லிவிட்டார். ஊரு மக்களும் பணப்பை கிடைத்தால் கொடுத்து சன்மானம் வாங்கலாம் என்று நினைத்தார்கள். அப்படி தேடி பார்த்தும் யாருக்கும் பணப்பை கிடைக்கவில்லை.

இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்பு அருகில் இருந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஒரு வழிப்போக்கர் வந்தார். அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர். ஏழையாக இந்தாலும் கவுரவமாக வாழ பிரியப்படுபவர். தன்னால் முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவுபவர்.

அவர் விவசாயம் செய்த நிலத்தில் நிலத்தடி நீர் கிடைக்காததால் விவசாயம் சரியாக செய்ய முடியவில்லை வேறு தொழில் செய்யவோ தன்னிடம் பணமும் அனுபவமும் இல்லை என்பதால் பக்கத்து ஊருக்கு சென்று ஏதாவது வேலை செய்து சம்பாதித்து பின்னர் தொழில் தொடங்க நினைத்து வந்தார். போகிற வழியில் காட்டுப் பாதையில் இருந்த அம்மன் கோயிலுக்கு போய் வேண்டிக் கொண்டார்.

சோமனோ விடாமல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார். பூபாலன் பணப்பை கொண்டு வந்த செய்தியை ஊராருக்கு சொன்ன கடைக்காரர், கஞ்சப்பயல் சோமன் அப்படி என்னத்தான் பரிசு கொடுக்கப் போறான் என்று பார்ப்போம் என்று அனைவரையும் அழைத்து வந்தார். வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல நிற்பதை கண்ட ஊரார் சோமனை சும்மா விடக்கூடாது, இந்த பிரச்சினையை மரியாதை ராமனிடம் தான் கொண்டு சென்று தீர்ப்பு கேட்க வேண்டும் என்று சொன்னார்கள்.

சிறிது நேரத்தில் சோமன், பூபாலன், ஊர்மக்கள் அனைவரும் மரியாதை ராமன் முன்னால் போய் நின்றார்கள். சோமன் தான் பணப்பையையும், அதில் இருந்த வைர மோதிரம் தொலைத்த கதையையும, பூபாலன் தான் பணப்பை கண்டுபிடித்த கதையையும் சொன்னார்கள்.

ஆக இது சோமனின் பையே இல்லை, வேறு யாரோ தொலைத்த பை. அப்படி தொலைத்தவர் இதுவரை யாரும் புகார் கொடுக்கவில்லை, அவ்வாறு யாரும் புகார் கொடுக்காதவரை நம்ம ஊரு வழக்குப்படி கிடைத்த பணத்தில் 10 பங்கு அம்மன்கோயிலுக்குக் கொடுத்துவிட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக்கொள்ளலாம்.

ஆக பூபாலன் அந்த பணத்தை தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளலாம், சோமனின் பணம் மற்றும் வைர மோதிரம் கொண்ட பையை கண்டுபிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார், சபை கலையலாம்.'

மரியாதை ராமன் தீர்ப்பு சொன்னதும் சோமனுக்கு இதயமே நின்று போனது போல் ஆகிவிட்டது.

பூபாலன் கிடைத்த பணத்தில் 10 சதவீதம் அம்மன் கோயிலுக்கு கொடுத்துவிட்டு, மீதியை தன் சொந்த ஊருக்கு கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.

## காலணி!



காலணியே காலணியே
காலமெல்லாம்
உழைப்பாயே
கோலமுடன் நீயும்தான்
கூடவேதான் வருவாயே!

வெயிலுக்கும்
மழைக்குந்தான்
வீறுகொண்டு
உழைப்பாயே
நயன்மையோடு
எப்போதும்
நாளெல்லாம்
உழைப்பாயே!

பாதுகாப்பாய்
எங்களையே
பார்த்திடவே நடப்பாயே
ஓதிடுவோம்
உம்மைத்தான்
உள்ளன்பால்
வாழ்த்திடுவோம்!

முனைவர்
இராம.
வேதநாயகம்.

## வெல்ல கட்டி...

செல்ல சின்ன வெல்ல
கட்டி.....

எல்லோருக்கும் பட்டு
கன்னு குட்டி.....

தூளியில் ஆடும் வெண்(
ணை )
நிலவு....
நீ எல்லோருக்கும்
பிள்ளை உறவு.....
யசோதைக்கு கிடைத்த
வரம்.....

ஒரு நாளேனும்...
நாங்களும்...
உணர்ந்திடணும்....
நந்தன் போலே உன்னை
கொஞ்சி...
நாங்களும் கூட..
மகிழ்ந்திடணும்.....

மாலோலா.. உனை
தாலாட்டி.......

மரகத பச்சை
பட்டுடுத்தி.....

மணி முத்தாரம் மயில்
தோகை
வைத்து....
உன் மின்னும் கண்ணில்



கரு..
மையெழுதி....
சீராட்டி......
பாராட்டிடவே......
சந்தர்ப்பம் தருவாய்....
சாரங்கா....

உன் முன்னாடும் கிளி
போலே.......
என்னையும் பார்ப்பாய்....
ஶ்ரீனிவாசன் என்னும்
......
பிரியரங்கா.........



குட்டி மானே சுட்டி மானே
எங்கப் போறே?

புல்லிருக்கு, குளமிருக்கு
மேயப் போறேன்...

குட்டி ஆமை சுட்டி ஆமை
எங்கப் போறே?

மான் குட்டி அண்ணாவுக்குத்
துணைக்குப் போறேன்...

குட்டி முயலே சுட்டி முயலே
எங்கப் போறே..

மான் குட்டி மாமாவோட
மேயப் போறேன்...

குட்டிக் குரங்கே சுட்டிக்
குரங்கே
எங்க போறே?

புலிவந்தா மான் தம்பிக்குச்
சொல்லப் போறேன்...

காடு ரொம்ப அழகு
காடு ரொம்ப அழகு

கேடு இல்லாம கெட்டத
செய்யாம இருந்தா
எல்லாம்
அழகு...

ஹரணி
தஞ்சாவூர்-

# பொதுஅறிவுப் பூங்கா

(1)செஞ் சிலுவை சங்கத்தை நிறுவியவர் "ஹென்றி டுனன்ட்"


2) "கொடிகாத்தக் குமரன்" பிறந்த ஊர் திருப்பூர்.

3.)29நாடுக ளுடன் "உலக வங்கி" 27.12.1945ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது

4). தேம்ஸ் நதி லண்டனில் ஓடுகிறது.

5). "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்ற நீதிநூலை இயற்றியவர் "உலகநாதன்" என்னும் புலவர்.

5) அறம் செய்ய விரும்பு என்னும் ஒளவையாரின் ஆத்திசூடி அகரவரிசை யில்எழுதப்பட் டுள்ளது.




6). வெனிஸ் திரைப்பட விருதைப் பெற்ற முதல் இந்தியர் "மீரா நாயர்"

7). புத்தர்போதனைகளை "பாளிமொழி" யில் உபதேசம் செய்தார்.

8). பூகோள அமைப்பின்படி உலகத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளது இந்தியாவின் நாக்பூர் .

9). பிரான்ஸ் நாட்டின் தேசிய மலர் லில்லி மலர்.

10). ஆரம்பத்தில் "நிப்போன்" என்று அழைக்கப்பட்ட நாடு "ஜப்பான்".



குடந்தை
பரிபூரணன்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

# நேர்க்காணல்



திமுக சார்பில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (மார்ச் 17) நேர்க்காணல் நடத்தினார். அப்போது வேட்பாளராக யார் அறிவிக்கப்பட்டாலும் அனைவரும் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும் என்று அவர் அறிவுரை வழங்கினார். குறிப்பாக, "அமைச்சரை எதிர்த்து நீங்கள் போட்டியிட்டாலும் வெற்றி பெறுவீர்களா?" என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# ஷிவாலிக்




'ஷிவாலிக்' கப்பலைத் தொடர்ந்து, மற்றொரு எல்பிஜி கப்பலான 'நந்தா தேவி', 47,000 மெட்ரிக் டன்களுக்கும் அதிகமான திரவ பெட்ரோலிய வாயுவுடன் ஹார்முஸ் ஜலசந்தியைக் கடந்து குஜராத்தின் வதினார் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. அண்மையில் 'ஷிவாலிக்' எல்பிஜியை ஏற்றிக் கொண்டு இந்தியா வந்தடைந்தது. இதன் மூலம் படிப்படியாக சிலிண்டர் வினியோகம் இந்தியாவில் அதிகரிக்கப்படும் என கூறப்படுகிறது. வணிக சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக பல்வேறு இடங்களில் ஹோட்டல்களில் விறகு அடுப்பை பயன்படுத்தி வருகின்றனர்.

## 3 மாதத்துக்கும் குறைவான வயதுடைய குழந்தையை தத்தெடுத்தால் தான் தாய்க்கு பேறு கால விடுப்பு



3 மாதத்துக்கும் குறைவான வயதுடைய குழந்தையை தத்தெடுத்தால் தான் தாய்க்கு பேறு கால விடுப்பு வழங்கப்படும் என்ற சட்டத்தை ரத்து செய்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், தத்தெடுக்கப்பட்ட குழந்தைக்கு எந்த வயதானாலும் 12 வாரம் வரை பேறுகால விடுப்பு பெற தாய்க்கு உரிமை உண்டு என தெரிவித்த உச்சநீதிமன்றம், ஆண்களுக்கும் பேறுகால விடுப்பு வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

## அதிமுக கூட்டணியில் பாஜகவுக்கு 27 தொகுதிகள்




சட்டமன்ற தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், அரசியல் கட்சிகள் தொகுதிப்பங்கீடு பேச்சுவார்த்தையை தீவிரப்படுத்தியுள்ளன. இந்நிலையில், அதிமுக கூட்டணியில் பாஜகவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பாஜக 35 தொகுதிகள் வரை கேட்ட நிலையில் 27 தொகுதிகள் கொடுக்க அதிமுக முன்வந்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த கூட்டணி ஒப்பந்தம் வரும் 20ம் தேதி கையெழுத்தாகவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# ஆதவ் அர்ஜூனா முன்னிலையில் ரஜினிக்கு ஆதரவு... த.வெ.க. மேடையில் சலசலப்பு

**சென்னை, மார்ச் 18:**
த.வெ.க. நிர்வாகி ஆதவ் அர்ஜூனா கடந்த சில தினங்களுக்கு முன்பு பேசும் போது, நடிகர் ரஜினிகாந்த் தி.மு.க. மிரட்டலால் தான் அரசியலுக்கு வரவில்லை என்று கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த விவகாரத்திற்கு அரசியல் தலைவர்கள் தொடங்கி திரைத்துறையினர் வரை பலரும் கருத்து தெரிவித்து வந்தனர்.

பெரும் புயலை கிளப்பிய இந்த விவகாரத்தில் நடிகர் ரஜினிகாந்த் நேற்று (மார்ச் 17) அறிக்கை ஒன்றை வெளியிட்டு, "தனக்கு இந்த விவகாரத்தில் ஆதரவு தெரிவித்த அனைவருக்கும் நன்றி என குறிப்பிட்டு காலம் பேசாது, ஆனால் காத்திருந்து பதில் சொல்லும்," என்று தெரிவித்து இருந்தார்.




இந்த நிலையில், கொளத்தூரில் நேற்று நடைபெற்ற த.வெ.க. பொதுக்கூட்டத்தில் அக்கட்சி நிர்வாகியும், ரஜினி ரசிகருமான அசோக் பேசும் போது, "ரஜினிகாந்த் பற்றி த.வெ.க.வில் யார் எது பேசினாலும், நான் கேள்வி கேட்பேன். ரஜினியை பற்றி நீங்கள் பேசியது குறித்து மேடையில் விளக்கம் கொடுக்க வேண்டும்.

நான் இன்று நல்ல நிலைமையில் நேர்மையாக இருக்கிறேன் என்றால் அதற்கு காரணம் ரஜினிகாந்த்," என்று தெரிவித்தது சலசலப்பை ஏற்படுத்தியது.

# சட்டமன்ற தேர்தலில் பா.ம.க.வுக்கு எதிராக ராமதாஸ் போட்டி வேட்பாளரை நிறுத்த திட்டமா?- திலகபாமா பேட்டி

**சென்னை, மார்ச் 18:**
உச்சநீதிமன்றத்தில் பா.ம.க.,ராமதாஸ் மாம்பழம் சின்னத்தை முடக்கி வைக்க வழக்கு போட்டிருப்பது குறித்து கவலைப்பட வேண்டியதில்லை. உறுதிப்படுத்தப்பட்ட சின்னம், தலைவராக அன்புமணி உள்ளார். எல்லாம் சரியாக அமையும்.

தேர்தலில், ஒவ்வொரு பகுதி மக்கள் பிரச்சனைகளின் அடிநாதம் தொட்டு பிரசாரம் செய்யப்படும். உரிமை காக்க, தலைமுறை மீட்க நடைப்பயணத்தில் குடகனாறு, குண்டாறு இணைப்பு பிரச்சினை உள்ளிட்ட ஏராளமான விஷயங்களை பற்றி விளக்கி பேசப்பட்டுள்ளது.

தமிழகத்தில், பாலியல் வன்கொடுமை தொடர்கிறது. பெண்கள் வெளியே நடமாடமுடியாத நிலை உள்ளது. போதையால் சீரழிந்துவிட்ட சமுதாயமாக தமிழகம் மாறிவிட்டது. அதற்கு தி.மு.க. முழு பொறுப்பேற்க வேண்டும்.

தலைமை கட்டளையிட்டால் தி.மு.க.வை வெளியேற்றுவதற்கு



எந்தக்களத்திலும் பணியாற்ற தயாராக உள்ளேன். பா.ம.க.வில் எந்த தொய்வும் இல்லை. அனைத்து நிர்வாகிகளும் அன்புமணியின் தலைமையில் களப்பணியாற்றி வருகின்றனர்.

அரசு அதிகாரிகள் ஒருதலைப் பட்சமாக இயங்குகின்றனர். நாங்குநேரி பிரச்சனையில் உண்மையான குற்றவாளியை பிடிப்பதை விட்டு, ஆதரவு தெரிவிக்க செல்பவர்களை தடுத்து நிறுத்துகின்றனர்.

மக்களுக்காக அதிகாரிகள் செயல்பட வேண்டும். இல்லையெனில் தூய்மை பணியாளர்கள், அரசுப்பணியாளர்கள், செவிலியர்கள் ரோட்டுக்கு வந்து போராடியது போல் அவர்களையும் தி.மு.க., ரோட்டில் உட்கார வைத்துவிடுவார்கள். திண்டுக்கல் கோம்பை, ஒட்டன்சத்திரம் வனப்பகுதியில் வன அத்துமீறல், சட்டவிரோத தடுப்பணை கட்டியது உள்ளிட்ட சுற்றுச்சூழலுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து கேள்விகளை முன்வைக்கிறேன். நிச்சயம் தவறு செய்யும் அதிகாரிகள் மீது புகார் அளிப்பேன்.

அ.தி.மு.க., தே.ஜ., கூட்டணியில் பா.ம.க., வேட்பாளர்கள் களமிறங்கும் தொகுதிகளில் போட்டி வேட்பாளர்களை பா.ம.க., ராமதாஸ் நிறுத்துவார் என நினைக்க வேண்டியதில்லை. அங்கிருப்பவர்கள், அவர் மீதான பாசத்தில், விட்டுக்கொடுக்க முடியாமல் நிற்கிறார்களே தவிர, பா.ம.க., தலைவர் அன்புமணியை தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இல்லை என்றார்.

# 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் அலுவல் நேரத்தில் அரசியல் விவாதங்களில் ஈடுபட தடை

**சென்னை, மார்ச் 18:**
மாநிலம் முழுவதும் மொத்தமாக 1,353 ஆம்புலன்ஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆம்புலன்ஸ் வாகனங்கள் அனைத்திலும் தேர்தல் கட்டுப்பாட்டு விதிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பாக 108 நிர்வாகத்தின் மாநிலத் தலைவர் செல்வகுமார், மண்டலத் தலைவர் முகமது பிலால் ஆகியோர் கூறியதாவது: தேர்தல் காலத்தில் ஆம்புலன்ஸ் வாகனங்களில் மருத்துவ உபகரணங்கள் தவிர வேறு எதையும் எடுத்துச் செல்ல அனுமதியில்லை.

அனுமதி இல்லாத எவரும் ஆம்புலன்ஸில் ஏறக் கூடாது. அங்கீகாரம் பெற்ற ஊழியர்கள், தமிழக அரசு மற்றும் காவல் துறை அதிகாரிகள், தேர்தல் கண்காணிப்பாளர்கள் மட்டுமே ஆம்புலன்ஸ் வாகனங்களை ஆய்வு செய்ய வேண்டும்.

நோயாளி அல்லது அவருடன் வரும் நபர்கள் ஆம்புலன்ஸில் உள்ள பெட்டிகள், உபகரணங்களை திறக்காமல் இருப்பதை கண்காணிக்க வேண்டும். ஆம்புலன்ஸில் வருவோர் தேர்தல் தொடர்பான பொருள்களை வைத்திருந்தால் அவற்றை அனுமதிக்கக்கூடாது.

நோயாளி மற்றும் அவருடன் வரும் நபர்கள் வைத்திருக்கும் பணம் பற்றிய விவரத்தை ஆவணத்தில் பதிவு செய்ய வேண்டும். பணி நேரத்தில் கட்சிகள் மற்றும் சின்னங்கள் சார்ந்த பொருள்களை வைத்திருக்கக் கூடாது.

ஆம்புலன்ஸில் தேர்தல் பிரச்சார ஸ்டிக்கர்கள் அல்லது சின்னங்களை ஒட்டக்கூடாது. அலுவல் நேரத்தில் அரசியல் விவாதங்களில் ஈடுபடுவதற்கு ஊழியர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தேர்தல் பிரச்சார பொருட்கள் உள்ள இடங்களுக்கு அருகே அவசர சேவை வாகனங்களை நிறுத்தக்கூடாது.

ஆம்புலன்ஸ் நிர்வாகத்தின் முன் அனுமதி இல்லாமல் நோயாளியின் புகைப்படம் அல்லது வீடியோ எடுக்க அனுமதிக்கக்கூடாது என பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளோம். இதனை மீறினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளார்.

# புதுவையில் என்.ஆர். காங்கிரஸ் - தவெக கூட்டணி?



**புதுச்சேரி, மார்ச் 18:**
புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் - தமிழக வெற்றிக் கழகம் இடையே கூட்டணிப் பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதுச்சேரியில் தற்போது என்.ஆர். காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகின்றன. வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தலிலும் என்.ஆர். காங்கிரஸ் - பாஜக கூட்டணி தொடரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இரு கட்சிகளின் தலைவர்களிடையே கடந்த வாரம் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தை நடைபெற்ற நிலையில், உடன்பாடு எட்டப்படவில்லை.

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்துக்கான உறுதிமொழியை வழங்க வேண்டும், ஜோஸ் சார்லஸ் மார்ட்டினால் தொடங்கப்பட்ட லட்சிய ஜனநாயகக் கட்சியை தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்க்கக் கூடாது என்ற இரு முக்கியமான நிபந்தனைகளை பாஜக தலைமைக்கு என்.ஆர். காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி முன்வைத்துள்ளார்.

இந்த நிலையில், லட்சிய ஜனநாயகக் கட்சி தொடர்பான என்.ஆர். காங்கிரஸின் நிபந்தனையை பாஜக மறுத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால், புதுச்சேரி தனியார் விடுதியில் இன்று காலை நடைபெறவிருந்த கூட்டணிப் பேச்சுவார்த்தையை ரங்கசாமி புறக்கணித்துள்ளார். சுமார் இரண்டு மணிநேரம் காத்திருந்த புதுச்சேரி பாஜக தேர்தல் பொறுப்பாளரும் மத்திய அமைச்சருமான மன்சுக் மாண்டவியா புறப்பட்டுச் சென்றார்.

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் இன்று முதல் தொடங்கியிருக்கும் சூழலில், நிபந்தனைகள் குறித்து முடிவெடுக்க பாஜகவுக்கு 24 மணிநேரம் ரங்கசாமி கெடு விதித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே, தமிழக வெற்றிக் கழகத்துடன் என்.ஆர். காங்கிரஸ் நிர்வாகிகள் பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

என்.ஆர். காங்கிரஸின் நிபந்தனைகளை பாஜக ஏற்காவிட்டால், தவெகவுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்க என்.ஆர். காங்கிரஸ் ஆயத்தமாகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழ்நாடு உள்பட 5 மாநிலங்களுக்கு 1,111 தேர்தல் பார்வையாளர்கள்!

**சென்னை, மார்ச் 18:**
தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி உள்பட 5 மாநிலங்களுக்கான தேர்தல் பார்வையாளர்களை நியமித்து இந்திய தேர்தல் ஆணையம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஏப்ரல் 23-ஆம் தேதியும், புதுச்சேரி யூனியன் பிரதேசம், கேரளம், அஸ்ஸாம் மாநிலங்களுக்கும் ஏப்ரல் 9-ஆம் தேதியும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. மேற்கு வங்கத்தில் இரு கட்டங்களாக ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 29 ஆகிய தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இந்த 5 மாநிலங்களிலும் ஞாயிற்றுக்கிழமை முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டு, தேர்தல் ஆணையம் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றது.




தமிழ்நாட்டுக்கு 136 பொதுப் பார்வையாளர்கள், 40 காவல் பார்வையாளர்கள், 151 செலவினப் பார்வையாளர்கள் என மொத்தம் 327 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் நடைபெறவுள்ள 5 மாநிலங்களில் உள்ள 832 தொகுதிகளுக்கு மொத்தம் 1,111 பார்வையாளர்களை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. இவர்கள் அனைவரும் அந்தந்த மாநிலங்களில் நாளை (மார்ச் 18) முதல் முகாமிட்டு தேர்தல் பணிகளை கண்காணிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுச்சேரி தேர்தல்: 2-ம் நாளாக யாரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை!

**புதுச்சேரி, மார்ச் 18:**
புதுச்சேரியில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், 2ம் நாளான இன்றும் (மார்ச் 17) யாரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை.

தமிழகம், கேரளம், புதுச்சேரி, அசாம், மேற்குவங்கம் ஆகிய 5 மாநிலங்களுக்கு கடந்த மார்ச் 15 ஆம் தேதி தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டன.

இதில் அசாம், கேரளம் ஆகிய மாநிலங்களுக்கும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு ஏப்ரல் 9ஆம் தேதி ஒரேகட்டமாக தேர்தல் நடைபெறும் என்றும் 5 மாநில பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் மே 4 ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் புதுச்சேரியில் நேற்று முதலே வேட்புமனு தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நேற்று எந்த கட்சியில் இருந்தும் எந்த வேட்பாளரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை.

தொடர்ந்து 2-ம் நாளான நேற்று யாரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை. மார்ச் 23 ஆம் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும். மார்ச் 24 ஆம் தேதி வேட்புமனுக்கள் மீதான



பரிசீலனை நடைபெறும், வேட்புமனுவை வாபஸ் பெற மார்ச் 26 கடைசி நாளாகும்.

அதேநேரத்தில் நேற்று புதுச்சேரியில் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை முறையாக தாக்கல் செய்வது குறித்து, தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

புதுச்சேரியைப் பொருத்தவரை திமுக - காங்கிரஸ் கூட்டணியில் யார் தலைமை வகிப்பது என்ற மோதல் போக்கு நிலவுவதால் இன்னும் கூட்டணி மற்றும் தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்படவில்லை. அதேபோல பாஜக கூட்டணியில் இருந்து ரங்கசாமியின் என்.ஆர். காங்கிரஸ் விலகுவதாகவும் தவெகவுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெறுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்னும் ஓரிரு நாள்களில் கூட்டணி, தொகுதிப் பங்கீடு, வேட்பாளர்கள் என அனைத்தும் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ரவுசு மணி

எதிரியை
பேச விட்டு
கவனிக்கவும்
வேண்டும்...

துரோகியை
பேச விடாமல்
கவனிக்க
வேண்டும் ..



V. முத்து ராமகிருஷ்ணன்

# "பேரவைத் தேர்தலோடு இபிஎஸ் அரசியல் வாழ்க்கை முடிந்துவிடும்" - ஓபிஎஸ் கணிப்பு

**திருநெல்வேலி, மார்ச் 18:**
வரும் சட்டப்பேரவை தேர்தலோடு பழனிசாமியின் அரசியல்வாழ்க்கை முடிந்துவிடும் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நாங்குநேரி தொகுதி ஆலோசனை கூட்டம் நாங்குநேரி அருகே செங்குளத்தில் நடைபெற்றது. திருநெல்வேலி கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் தலைமை வகித்தார். கூட்டத்தில் தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேசியது: "அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தமிழக மக்களுக்கு துரோகம் செய்து வருகிறார். எனவேதான் திமுகவில் இணைந்துள்ளேன். கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் தமிழகம் வளர்ச்சி பாதையில்




சென்று கொண்டிருக்கிறது.

தொலைநோக்கு பார்வையுடன் பல்வேறு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றியுள்ளார். நாட்டிலேயே சிறந்த மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. அதேநேரத்தில் மத்திய அரசு, தமிழகத்துக்கு தர வேண்டிய நிதியை தராமல் வஞ்சிக்கிறது. இந்த நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் சிறப்பான ஆட்சியை மு.க.ஸ்டாலின் தந்து கொண்டிருக்கிறார். தாலிக்கு தங்கம், இலவச மடிக்கணினி போன்ற திட்டங்களை கடந்த 2019-ம் ஆண்டிலேயே பழனிசாமி நிறுத்திவிட்டார். தன்னை முதல்வராக்கிய சசிகலாவுக்கே துரோகம் செய்தவர் பழனிசாமி. ஒரு தேர்தலிலும் அவர் வெற்றிபெறவில்லை. மக்கள் அவரை புறக்கணித்துவிட்டனர். கடந்த எம்.பி. தேர்தலில் நான் போட்டியிட்டபோது எனக்கு எதிராக என்னுடைய பெயரில் 6 பேரை நிறுத்தினர். ஆனால் அத்தனை பேரும் டெபாசிட் இழந்தனர். துரோகத்தை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

பழனிசாமிக்கு எதிராக சட்டப் பேரவையில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்தபோது, நான் அவருக்கு ஆதரவாக வாக்களித்தேன். அது நான் செய்த மிகப் பெரிய தவறு. ஆபத்து காலத்தில் உதவி செய்தவர்களை அவர் ஒரு நாளும் நினைத்து பார்த்தது கிடையாது. வரும் சட்டப் பேரவை தேர்தலோடு பழனிசாமியின் அரசியல் வாழ்க்கை முடிந்துவிடும்" என்று தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் எம்.பி.க்கள் ரவிந்திரநாத், கோபாலகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ. ஐயப்பன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ். ஏ. கே. சித்திக் உள்ளிட்டோர் பேசினர். பாளையங்கோட்டை தெற்கு ஒன்றிய செயலர் சுபாஷ் தங்கபாண்டியன் வரவேற்றார். தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அழகுமுத்து நன்றி கூறினார்.

# சுற்றுலா: மேகாலயாவின் ‘செவன் சிஸ்டர்ஸ்’ அருவி



இந்த கோடைக்காலத்தில் ஏதேனும் குளிர்ச்சியான இடத்திற்கு போகவேண்டும் என்று தோன்றுவது சகஜமே. அப்படி நினைப்பவர்களை ‘குளுகுளு’ வென்று உணர வைக்கும் நான் சொல்லும் இடத்திற்கு சென்றால், அப்படி எந்த இடம் என்று கேட்கிறீர்களா? சாதாரணமாக ஒரு அருவியை பார்த்தாலே மனம் மகிழ்ச்சியில் துள்ளும். அப்படியிருக்க ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் ஏழு அருவிகளை ஒருசேர பார்த்தால் குளு குளுன்னு தானே இருக்கும்.

இந்தியாவில் மேகாலயாவில் தெற்கு மவுஸ்மாய் கிராமத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிலே அமைந்திருப்பது தான் சவென் சிஸ்டர்ஸ் அருவி. இந்த அருவி 1033 அடி உயரத்தை கொண்டது 230 அடி அகலத்தை கொண்டது. இந்தியாவிலே உயரமான அருவிகளுள் இதுவும் ஒன்றாகும். இந்த அருவி இயற்கை அழகு கொஞ்சும் இடத்தில் அமைந்துள்ளது.

இந்த அருவியின் மீது சூரிய ஒளி பட்டு ஏழு வண்ணங்களில் அழகாய் ஜொலிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

செவன் சிஸ்டர்ஸ் என்று பெயர் வர காரணம் அருகருகே ஏழு அருவிகள் அமைந்திருப்பதனால் ஆகும். இந்த ஏழு அருவிகளும் ஏழு மாநிலங்களை குறிக்கிறது. அசாம், அருணாச்சலபிரதேசம், மணிப்பூர், நாகாலேந்த், திரிபுரா, மிஸோரம், மேகாலயா ஆகியவையாகும்.



தனித்தனியாக ஏழு அருவிகள் அடுத்தடுத்து விழுவது பார்ப்பதற்கு திரைச்சீலை போல அழகாக காட்சியளிக்கிறது. செவன் சிஸ்டர்ஸ் அருவியை மழைக் காலங்களில் காண வருவதே சிறந்ததாகும்.

ஜூன் முதல் செப்டம்பர் வரை வருவது நல்லது. இந்த அருவியின் கம்பீரமான அழகை மவுஸ்மாய் கிராமத்திலிருந்து காண முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

சுற்றுலாப்பயணிகள் இந்த அருவியின் அழகை எக்கோ பார்க்கில் (ECO PARK) இருந்தும் பார்த்து ரசிக்க முடியும். இந்த செவன் சிஸ்டர்ஸ் அருவி மிகவும் பிரபலமான சுற்றுலாத்தலமாகும். புகைப்பட பிரியர்களும், இயற்கை விரும்பிகளுக்கும் ஏற்ற இடமாக இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இந்த அருவி மட்டுமில்லாமல், இங்கு சுற்றிப்பார்க்க பல இடங்கள் உள்ளது. மவுஸ்மாய் குகை, லிவிங் பிரிட்ஜ், நோகாலிக்காய் அருவி, சிரப்புஞ்சி போன்ற இடங்களையும் தவறாமல் பார்க்கலாம்.

இயற்கை அழகு கொஞ்சும் இடத்தில், அமைதியான சூழ்நிலையில், மனதிற்கு இதமாக இருக்கும் இதுபோன்ற சுற்றுலாத்தலத்திற்கு இந்த கோடைக்காலத்தில் சென்று வருவது மிகவும் அவசியமாகும். கூட்டம் அதிகமாக இருக்கும் சுற்றுலா இடங்களை தவிர்த்து, இதுபோன்றுவளர்ந்துவரும்சுற்றுலா இடங்களுக்கு செல்லும்போது எந்த தொந்தரவுகளும் இல்லாமல் நிம்மதியாக இயற்கையை ரசித்துவிட்டு வரலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே ஒரே இடத்தில் இருக்கக்கூடியஏழுஅருவிகளையும் ஒருமுறையாவது வாழ்வில் பார்த்து ரசித்துவிட்டு வாருங்கள்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### மத்திய காவல்படையில் வேலை: 827 பணியிடங்கள்




மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் காவல் அமைப்புகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப எஸ்.எஸ்.பி (SSB) அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இது பற்றிய விவரங்களை பார்க்கலாம்.

பணியிடங்கள்: கான்ஸ்டபிள் (டிரைவர், டெய்லர், பார்பர், வெயிட்டர், கார்பெண்டர் , தோட்ட பராமரிப்பளர்) என 11 வகையான பிரிவுகளில் மொத்தம் 827 பணியிடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு முடித்து இருக்க வேண்டும். துறைசார்ந்த பிரிவில் 1 ஆண்டு பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு; 18 வயது முதல் 27 வரை

சம்பளம்: ரூ.21,700- 69,100 வரை

தேர்வு முறை: உடல் தகுதி தேர்வு, திறன் தேர்வு, எழுத்து தேர்வு, சான்றிதழ் சரிபர்ப்பு உள்ளிட்டவைகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

விண்ணப்ப கட்டணம்: ரூ.100, எஸ்சி/எஸ்டி பிரிவினருக்கு கட்டணம் கிடையாது.

விண்ணப்பிப்பது எப்படி? https://ssb.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்க அவகாசம் தொடங்கும் நாள்; 21.03.2026

விண்ணப்பிக்க கடைசி நாள்; 20.04.2026 கடைசி நாளாகும். தேர்வு அறிவிப்பினை படிக்க: https://ssb.gov.in/

## இனி அலுமினிய பாத்திரங்களுக்கும் ஐ.எஸ்.ஐ. தரச்சான்று கட்டாயம்: அக்டோபர் 1-ந் தேதி முதல் அமல்

**கோவை, மார்ச் 18:**

நாம் சமையலறையில் அன்றாடம் பயன்படுத்தும் குக்கர், மிக்சி, கிரைண்டர், கியாஸ் அடுப்பு போன்றவற்றுக்கு ஐ.எஸ்.ஐ. தர நிர்ணய சான்று பெறும் நடைமுறை இருந்து வருகிறது. இதன் மூலம் பொருட்களின் தரமும், பயன்படுத்துவோரின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், சமையலறையில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் அலுமினிய பாத்திரங்களுக்கு ஐ.எஸ்.ஐ. தரச்சான்று பெறும் நடைமுறை அக்டோபர் 1-ந் தேதி முதல் கட்டாயமாக்கப்பட உள்ளன. அதாவது, ஐ.எஸ். 1660: 2024 என்ற தர நிலைகளை பராமரிப்பது கட்டாயமாக்கப்படுகிறது. அலுமினிய பாத்திரங்களின் தடிமன், அளவு, கைப்பிடிகளின் எடை தாங்கு திறன், தட்பவெப்ப தாங்குதிறன் என பல்வேறு நிலைகளில் தர நிர்ணயம் அடிப்படையில் இந்த சான்றிதழ் வழங்கப்படுகிறது.



இதன் மூலம் பாத்திரத்தில் 99.5 சதவீதம் அலுமினியம் இருப்பது கட்டாயமாகிறது. வரும் அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் அலுமினிய பாத்திரங்கள் உற்பத்தி செய்யும் பெரிய நிறுவனங்கள், ஐ.எஸ்.ஐ. முத்திரையை பயன்படுத்த வேண்டும். ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத அலுமினிய பாத்திரங்களை உற்பத்தி செய்யவோ, இறக்குமதி செய்யவோ, விநியோகம் செய்யவோ, சேமிக்கவோ, வாடகைக்கு எடுக்கவோ, குத்தகைக்கு விடவோ கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

## விசாரணைக் கைதி உயிரிழந்த வழக்கு: டிஎஸ்பி உள்ளிட்ட 11 பேருக்கு சிபிசிஐடி சம்மன்

**மானாமதுரை, மார்ச் 18:**

மானாமதுரை சியோன் நகரில் ஜெயக்குமார், அழகரை அரிவாளால் வெட்டிய சம்பவத்தில் தொடர்புடைய மானாமதுரை கிருஷ்ணராஜபுரம் பகுதியைச் சேர்ந்த ஆகாஷ் டெலிசனை (26) போலீசார் பிடிக்கச் சென்றனர். அப்போது, அவர் தப்பிச்செல்ல முயன்றதால் கீழே விழுந்ததில் அவருக்கு கால் முறிவு ஏற்பட்டு, மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர், கடந்த 8-ஆம் தேதி அதிகாலை மூச்சுத் திணறல் ஏற்பட்டு ஆகாஷ் உயிரிழந்தார். போலீசார் தாக்கியதால்தான் ஆகாஷ் உயிரிழந்து விட்டதாகவும், அவரை தாக்கிய போலீசார் மீது கொலை வழக்குப் பதிவு செய்து அவர்களைக் கைது செய்யக் கோரி ஆகாஷின் உறவினர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் விசாரணைக் கைதி ஆகாஷ் உயிரிழந்த விவகாரத்தில் 6 போலீசார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டர். ஏற்கெனவே ஆகாஷ் மரண வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் விசாரணைக் கைதி உயிரிழந்த வழக்கு தொடர்பாக டிஎஸ்பி உள்ளிட்ட 11 பேருக்கு சிபிசிஐடி சம்மன் அனுப்பி உள்ளது. இதன்படி மானாமதுரை டிஎஸ்பி ராஜா, தனிப்பிரிவு எஸ்.ஐ. முத்துராஜா, காவலர் முத்துப்பாண்டி உள்ளிட்ட 11 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. மதுரை சிபிசிஐடி அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது. விசாரணையின் அடிப்படையில் டிஎஸ்பி உள்ளிட்டோரை வழக்கில் சேர்ப்பது குறித்து முடிவுசெய்யப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

## கோடை வந்தாச்சு... நீர்ச்சத்து மிகுந்த வெள்ளரிக்காயை சாப்பிடுங்க..!

**சென்னை, மார்ச் 18:**

தமிழகத்தில் கோடை காலம் தொடங்கிவிட்டது. வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்கட, காபி பிரியர்கள் கூட, இப்போது இளநீர், ஜூஸ், தர்பூசணி, வெள்ளரிக்காய் பக்கம் திரும்பிவிட்டனர். இதில், நீர்ச்சத்து மிக்க வெள்ளரிக்காயை பற்றி அறிந்துகொள்வோம்.

கோடையில் நீர்ச்சத்து நிரம்பிய உணவு பொருட்களை உட்கொள்ள விரும்புபவர்களுக்கு வெள்ளரிக்காய் சிறந்த தேர்வாக அமையும். வெள்ளரிக்காயில் பல வகைகள் உள்ளன. இருப்பினும் பாம்பு போன்று நீளமாக காட்சியளிக்கும் ‘ஸ்னேக் குக்கும்பர்’ எனப்படும் சுருள் வெள்ளரிக்காய்தான் அதிகம் விற்பனை செய்யப்படுகின்றன.

சாதாரண வெள்ளரிக்காய், சுருள் வெள்ளரிக்காய் இந்த இரண்டில் எது கோடையில் உங்களை குளிர்ச்சியாக உணர வைக்கும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். மற்ற வெள்ளரிக்காயைப் போலவே பாம்பு வெள்ளரியும் ஆரோக்கியத்திற்கு நலம் சேர்க்கும். இதுவும் தாகத்தை கட்டுப்படுத்தும். புத்துணர்ச்சியுடன் செயல்பட தூண்டும். பாம்பு வெள்ளரியில் இலையில் நரம்பியல் பண்புகள் உள்ளன. அவை



நீரிழிவு நோயால் ஏற்படும் ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்திலிருந்து மூளையைப் பாதுகாக்கும் என்பது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் பாம்பு வெள்ளரியில் 15 சதவீதம் புரதமும், 22 சதவீதம் எண்ணெயும் உள்ளடங்கி உள்ளது.

இருப்பினும் பாம்பு வெள்ளரிக்காயை விட சாதாரண வெள்ளரிக்காயில்தான் அதிக நீர்ச்சத்து நிரம்பியுள்ளது. வெப்பமான காலநிலையில் உடலை குளிர்ச்சியாக வைத்திருப்பதற்கும் உதவுகிறது. அதேவேளையில் இரண்டிலும் வைட்டமின்கள் ஏ, சி, பி6, ஈ, கால்சியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், துத்தநாகம், இரும்புச்சத்து போன்றவை நிரம்பி இருக்கின்றன.

பாம்பு வெள்ளரிக்காய் சந்தையில் குவிந்து கொண்டிருந்தாலும் அதனை குறைவாகவே உட்கொள்கிறார்கள். உடலில் கொழுப்பின் அளவை குறைக்க விரும்புபவர்கள் பாம்பு வெள்ளரிக்காயை தாராளமாக உட்கொள்ளலாம்.

சாதாரண வெள்ளரிக்காய் 24 அங்குலம் வரைதான் நீளம் கொண்டிருக்கும். ஆனால் பாம்பு வெள்ளரி 15 முதல் 36 அங்குலம் வரை நீண்டிருக்கும். சாதாரண வெள்ளரியை வளர்ப்பதற்கு குறைவான நீர் போதுமானாது. ஆனால் பாம்பு வெள்ளரி குளிர்ச்சியான நீர் நிலை கொண்ட பகுதியில்தான் நன்றாக வளரும்.

சாதாரண வெள்ளரியின் தோல் பகுதி சற்று கசப்பு தன்மை கொண்டிருக்கும்.

அதனால் தோலை நீக்கி விட்டு சாப்பிட வேண்டியிருக்கும். ஆனால், பாம்பு வெள்ளரியை அப்படியே சாப்பிட்டு விடலாம். பாம்பு வெள்ளரி நன்கு வளர்ந்து பழமாக மாறுவதற்கு 50-60 டிகிரி வெப்ப நிலை தேவைப்படுகிறது. இந்தியா வெப்பமண்டல நாடு என்பதால், இந்த வகை வெள்ளரியை உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது.

## அறந்தாங்கி அருகே 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு கண்டுபிடிப்பு

**புதுக்கோட்டை, மார்ச் 18:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் மற்றும் வரலாற்று ஆய்வாளர் காளிதாஸ் மற்றும் ஆய்வு மாணவர்கள் விஜயலெட்சுமி, அபினேஷ் ஆகியோர் கொண்ட குழுவினர் அறந்தாங்கி அருகே நெய்வத்தளியில் உள்ள சிவன் கோவிலில் ஆய்வு மேற்கொண்டனர். மேலும் கோவில் கல்வெட்டுகளை ஆய்வு செய்தபோது 11-ம் நூற்றாண்டு பராக்கிரம பாண்டியன் கல்வெட்டை கண்டுபிடித்தனர்.

இதுகுறித்து வரலாற்று ஆய்வாளர் காளிதாஸ் கூறியதாவது:- இந்த கல்வெட்டு கோச்சடைய பன்மரான திருவாசகர் வட்தன் வீர பராக்கிரம பாண்டியனின் (1153) கல்வெட்டாகும்.

இதில் நெய்வேலி நாதர் கோவிலுக்கு இறையிலியாகக் கொடுத்த நிலத்தில் வீட்டுக்கு ஒரு ஆளும், ஒரு ஏரும் சென்று உழவு செய்து கொடுக்க வேண்டும். மீறுபவர்கள் சிறைத்தண்டனை பெறுவார்கள் என்ற செய்தி உள்ளது.

சிறை சென்றவரை மீட்க சிறைப் பணம் ஒன்று செலுத்த வேண்டும் என்ற செய்திகள் அந்த கல்வெட்டில் உள்ளது. அன்றைய காலத்தில் உழவுத் தொழிலை சிறப்படைய செய்ய மன்னர்கள் கடுமையான தண்டனை விதித்தனர். வீட்டுக்கு ஒரு ஆள் போருக்கு வரவேண்டும் என்பது போல், பராக்கிரம பாண்டியன் ஆணைப்படி வீட்டுக்கு ஒரு ஆள், ஒரு ஏர் என்ற முறையில் வேளாண்மை செய்து நாட்டை வளப்படுத்தி உள்ளனர். இது மாதிரியான பழைய பண்பாட்டுச் சின்னங்களை பாதுகாப்பது நம் அனைவரின் கடமை என்றார்.

## 5ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை: கொத்தனார் போக்சோவில் கைது

**திருநெல்வேலி, மார்ச் 18:**

திருநெல்வேலி மாவட்டம், மானூர் தாலுகா, மாவடி பகுதியைச் சேர்ந்த முருகன் (வயது 36), கொத்தனாராக வேலை செய்து வருகிறார். இவர் 5-ம் வகுப்பு படிக்கும் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாகக் கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த அந்த மாணவி, பள்ளியில் தனது ஆசிரியையிடம் நடந்தவற்றைக் கூறி அழுதுள்ளார்.

உடனடியாக அந்த ஆசிரியை, மாவட்டக் குழந்தைகள் நல அலுவலர்களுக்கு தகவல் அளித்தார். குழந்தைகள் நல அலுவலர்கள் மாணவியிடம் முதற்கட்ட விசாரணை நடத்தி, நடந்ததை உறுதி செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, குழந்தைகள் நலத் துறையினர் நெல்லை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

அந்த புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், தீவிர விசாரணை மேற்கொண்டனர். சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை இழைத்ததாக உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கொத்தனார் முருகன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தலைமறைவாக இருந்த முருகனை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# நடிகை பெயரைக் குறிப்பிட்டு பேசிய சி.வி.சண்முகம் மீது கனிமொழி, ஜோதிமணி சரமாரி தாக்கு

**சென்னை, மார்ச் 18:**

ஒரு நடிகையின் பெயரைக் குறிப்பிட்டு சர்ச்சைக்குரிய வகையில் பேசிய அதிமுக முன்னாள் அமைச்சரும், எம்.பி.யுமான சி.வி.சண்முகத்துக்கு திமுக எம்.பி. கனிமொழி மற்றும் காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி ஆகியோர் காட்டமாக கண்டித்துள்ளனர்.



விழுப்புரத்தில் இன்று நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சி.வி. சண்முகம் பேசியது சர்ச்சையாகி இருக்கிறது. 'அப்துல் கலாம் கனவு காணுங்கள் என்று சொன்னார். ஆனால், தமிழக முதல்வர் ஸ்டாலின் அதை விட ஒரு படி மேலே போய் உங்கள் கனவை சொல்லுங்கள் எனக் கூறுகிறார். எனக்கு இவர் (ஒரு நடிகையின் பெயர்) வேண்டும், கனவை நிறைவேற்றுவாரா?' என பேசியது சர்ச்சைக்கு வழிவகுத்துள்ளது.

இது குறித்து கனிமொழி எம்பி தனது எக்ஸ் தள பக்கத்தில், "அரசியல் நாகரிகமோ, அடிப்படை அறமோ அதிமுகவினருக்கு என்றும் இருந்ததில்லை. அதனால், பெண்களை இழிவுபடுத்துவதையே வாடிக்கையாக வைத்திருக்கும் தனது கட்சியைச் சார்ந்த இந்த நபரின் அருவருக்கத்தக்கப் பேச்சுக்கு எதிர்க்கட்சித் தலைவர் நடவடிக்கை எடுப்பார் என்று எதிர்பார்ப்பது வீண்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், ஜோதிமணி எம்.பி தனது எக்ஸ் தள பக்கத்தில், "அதிமுகவின் சி.வி.சண்முகம், ஒரு நடிகை குறித்துப் பொதுவெளியில் பேசிய பேச்சு கடுமையான கண்டனத்திற்குரியது. ஒரு பெண்ணை பொதுவெளியில் இப்படி அப்பட்டமாக, ஆபாசமாகப் பேசுவதை நாம் இயல்பாகக் கடந்து போய்விட முடியாது.

திரைத்துறையில் ஒரு வெற்றிகரமான பெண், இன்னொருவரின் மனைவி, இரண்டு குழந்தைகளின் தாய் பல்வேறு போராட்டங்களைக் கடந்து, தொடர்ந்து பயணிக்கும் ஒரு பெண்ணை மிகவும் மோசமான பார்வையோடு அணுகுவது, பேசுவது எவ்விதத்திலும் ஏற்புடையது அல்ல. சட்டப்படியும் தவறு.

அரசியல் மேடைகளில் பெண்களை எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்கிற மனநிலை ஆபாசமானது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட. பல்வேறு தடைகளை, போராட்டங்களைக் கடந்து தான் சார்ந்த துறைகளில் வெற்றிகரமாகப் பயணிக்கும் பெண்களை மீண்டும் மீண்டும் உடலாக மட்டுமே பார்க்கும், அவமதிக்கும் மனநிலையை நாம் ஒரு சமூகமாக கேள்விக்கு உட்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் பெண்கள் பொதுவெளியில் பாதுகாப்பாகவும், கண்ணியமாகவும் உணர முடியும்.

சி. வி சண்முகம் தனது பேச்சுக்கு உடனடியாக மன்னிப்புக் கேட்க வேண்டும். காவல் துறை வழக்குப் பதிவு செய்ய வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

### நேஷன்ஸ் கோப்பை ஹாக்கியில் இந்திய மகளிர் அணி பங்கேற்பு

**லாசேன், மார்ச் 18:**

எப்ஐஹெச் மகளிர் ஹாக்கி நேஷன்ஸ் கோப்பை வரும் ஜூன் 15 முதல் 21-ம் தேதி வரை நியூஸிலாந்தில் உள்ள ஆக்லாந்து நகரில் நடைபெற உள்ளது. இதில் இந்தியா, நியூஸிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், கொரியா, சிலி, ஸ்காட்லாந்து, பிரான்ஸ் ஆகிய அணிகள் கலந்து கொள்கின்றன. ஹாக்கி புரோ லீக்கில் பங்கேற்காத அதேவேளையில் தரவரிசையில் முன்னணியில் உள்ள அணிகளுக்கு உயர்தரப் போட்டிகளை வழங்குவதற்காக கடந்த 2021-ம் ஆண்டு எப்ஐஹெச் ஹாக்கி நேஷன்ஸ் கோப்பை தொடர் தொடங்கப்பட்டது. இதில் வெற்றி பெறும் அணிக்கு, அடுத்த சீசனில் புரோ லீக்கிற்குத் தகுதி பெறும் வாய்ப்பு வழங்கப்படும்.

கடந்த 2024-25-ம் ஆண்டு நடைபெற்ற புரோ லீக் தொடரில் 9 அணிகள் பங்கேற்ற நிலையில் இந்திய மகளிர் அணி கடைசி இடத்தைப் பிடித்திருந்தது. இதனால் இந்திய மகளிர் ஹாக்கி அணி அந்தத் தொடரிலிருந்து தரம் இறக்கப்பட்டது. தற்போது நேஷன்ஸ் கோப்பையில் கலந்து கொள்ளும் இந்திய அணி அதில் வெற்றி பெறும் பட்சத்தில் மீண்டும் ஹாக்கி புரோ லீக்கில் கால்பதிக்க முடியும். எப்ஐஹெச் ஆடவர் நேஷன்ஸ் கோப்பை தொடர் தென் ஆப்பிரிக்காவின் கேப்டவுன் நகரில் வரும் ஜூன் 11 முதல் 20-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் தென் ஆப்பிரிக்கா, நியூஸிலாந்து, பிரான்ஸ், கொரியா, ஜப்பான், வேல்ஸ், மலேசியா, ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகிய அணிகள் கலந்து கொள்கின்றன.

### தோனி உடன் விளையாடுவது உற்சாகம்" - சஞ்சு சாம்சன்

திருவனந்தபுரம்: விரைவில் தொடங்கவுள்ள ஐபிஎல் 2026 சீசனில் தனது கவனத்தை முழுவதுமாக வைத்துள்ளார் நடப்பு டி20 உலகக் கோப்பை தொடரில் தொடர் நாயகன் விருதை வென்றவர் சஞ்சு சாம்சன். இந்த சீசனில் முதன்முறையாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக அவர் விளையாட உள்ளார். அது குறித்து அவர் கூறியதாவது:

"டி20 உலகக் கோப்பையை வென்றது எனது கிரிக்கெட் கரியரில் முக்கியமான தருணம். ஆனால், இப்போது எனது கவனம் ஐபிஎல் கிரிக்கெட்டில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதில் உள்ளது. இந்த முறை புதிய அணியுடன் இணைத்துள்ளேன். என்னுடைய சிறந்த ஆட்டத்தை அவர்களுக்கு வெளிப்படுத்த விரும்புகிறேன்.

சிஎஸ்கே அணியில் இணைவதும், தோனி உடன் விளையாடுவதும் எனக்கு உற்சாகம் தருகிறது. அவருடன் போனில் பேசினேன். இந்திய அணியில் அவருடன் டிரெஸ்ஸிங் ரூமை பகிர்ந்து கொண்ட அனுபவம் எனக்கு உள்ளது. அவருடன் பேசும்போதெல்லாம் நான் பாசிட்டிவாக உணர்வேன். இந்த முறை இரண்டு மாதங்கள் அவருடன் பயணிக்க உள்ளேன். இது முற்றிலும் மாறுபட்ட ஒரு அனுபவமாக இருக்கும். அவரிடம் இருந்து நிறைய கற்றுக் கொள்வேன். அதை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன்.

சென்னை மக்கள் என்னை அவர்களில் ஒருவராக பார்க்கிறார். உலகக் கோப்பை தொடரின்போது எனக்கு சென்னையில் கிடைத்த ஆதரவு எனக்கே சர்ப்ரைஸ் தந்தது. நிச்சயம் அவர்களை ஏமாற்ற மாட்டேன் என்றார்.

# மதுரை நகை வியாபாரியிடம் 77.42 சவரன் பறிமுதல்; பறக்கும் படை நடவடிக்கை

**மதுரை, மார்ச் 18:**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வருகிற ஏப்ரல் 23-ந்தேதி, ஒரே கட்ட தேர்தலாக நடத்தி முடிக்கப்படும். இதற்கான அறிவிப்பை இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் சமீபத்தில் வெளியிட்டார். இதனை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் நகை, பணம் உள்ளிட்டவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்து வருகின்றனர்.



இதன்படி, வாக்காளர்களுக்கு பட்டுவாடா செய்ய வாகனங்களில் பணம் கொண்டு செல்லப்படுகிறதா? என்பதை கண்டறிய தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர வாகன சோதனை நடத்தி வருகின்றனர். பறக்கும் படையில் உதவி காவல் ஆய்வாளர், காவலர், ஆயுதம் தாங்கிய காவலர் உள்ளிட்டோர் இருப்பர். பறக்கும் படையுடன் கண்காணிப்பு குழுவும் இணைந்து செயல்படும்.

இந்த நிலையில், சாத்தூர் வெங்கடாசலபுரம் சோதனை சாவடியில் ரூ.90 லட்சம் மதிப்பிலான 77.42 சவரன் நகைகள் மதுரையை சேர்ந்த நகை வியாபாரியிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. உரிய ஆவணங்களின்றி எடுத்து வந்ததால் பறக்கும் படை நடவடிக்கை எடுத்துள்ளது. அவரிடம், தேர்தல் பறக்கும் படையினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழகத்தின் 8 இடங்களில் அகழாய்வு மேற்கொள்ள ஒப்புதல்: மு.க.ஸ்டாலின் பதிவு

**சென்னை, மார்ச் 18:**

தமிழகத்தின் 8 இடங்களில் அகழாய்வு மேற்கொள்ள ஒப்புதல் பெற்றிருப்பதாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;



தொடர் அழுத்தத்தாலும், கடிதங்களாலும் கீழடி உள்ளிட்ட 8 இடங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்வதற்கான ஒன்றிய அரசின் ஒப்புதலைப் பெற்றுள்ளோம். பல மாதங்கள் தாமதத்துக்குப் பின்பு, நமது விடாமுயற்சிக்குக் கிடைத்த வெற்றி இது. அடுத்து, ஒன்றிய பா.ஜ.க. அரசு வெளியிடாமல் நிறுத்தி வைத்திருக்கும் கீழடி ஆய்வறிக்கையையும் வெளியிட வைப்போம்!"

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# கூட்டணி குறித்து யாருக்கும் அழுத்தம் கொடுக்கவில்லை - தமிழிசை பேட்டி

**தூத்துக்குடி, மார்ச் 18:**

பாஜக மூத்த தலைவர் தமிழிசை சௌந்திரராஜன் தூத்துக்குடி விமானநிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;



"தமிழகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக யாருக்கும் பாதுகாப்பு இல்லை. விளம்பர ஆட்சி மட்டும் தான் நடக்கின்றது. இந்துக்கள் இந்த ஆட்சியில் புறக்கணிப்பட்டு வருகின்றனர். தமிழ் இன அடையாளத்தை திமுக தொலைத்து வைத்திருக்கின்றது. அதனை நடைபெற இருக்கும் தேர்தலில் மீட்டு எடுப்போம். திருமாவளவன் போன்றோர்கள் நாங்கள் கூட்டணிக்கு நெருக்கடி கொடுக்கிறோம் என்கின்றனர்.

நாங்கள் கூட்டணி குறித்து யாருக்கும் அழுத்தம், நெருக்கடி கொடுக்கவில்லை. திமுகவை வீழ்த்த நினைப்பவர்கள் மட்டும் சேர்ந்து கூட்டணி அமைத்துள்ளோம். வேறு யாரும் கூட்டணிக்கு வருவார்களா என்று தெரியாது. ஆனால் இப்போது இருக்கக்கூடிய எங்கள் கூட்டணியே பலமாக உள்ளது."

இவ்வாறு அவர் கூறினார்.

## க்ரைம் கார்னர்

### நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் ரயிலில் 8 கிலோ கஞ்சா பறிமுதல்

**கன்னியாகுமரி, மார்ச் 18:**

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ரெயில் நிலையத்திற்கு வந்தடைந்த எக்ஸ்பிரஸ் ரெயிலில், ரெயில்வே போலீசார் வழக்கமான சோதனையில் ஈடுபட்டனர். அப்போது ரெயிலின் ஒரு பகுதியில் சந்தேகப்படும்படி சில பார்சல்கள் கேட்பாரற்று கிடந்தன. இதனைத் தொடர்ந்து போலீசார் அந்தப் பார்சல்களைக் கைப்பற்றிச் சோதனையிட்டனர்.

சோதனையில் அந்தப் பார்சல்களில் சுமார் 8 கிலோ கஞ்சா இருப்பது கண்டறியப்பட்டது. வெளிமாநிலம் அல்லது வெளி மாவட்டத்திலிருந்து இந்த கஞ்சா கடத்தி வரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சா பார்சல்களை ரெயில்வே போலீசார், மேல் நடவடிக்கைக்காக மதுவிலக்கு போலீசாரிடம் ஒப்படைத்தனர். இந்த சம்பவம் குறித்து மதுவிலக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தொடங்கியுள்ளனர். ரெயிலில் கஞ்சா கடத்தி வந்த மர்ம நபர்கள் யார்? அவர்கள் எந்த ஊரிலிருந்து கஞ்சாவை ஏற்றி வந்தனர்? என்பது குறித்து ரெயில் நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

### சேலம் வழியாக கேரளாவிற்கு ரயிலில் கஞ்சா கடத்தல் - 10 கிலோ பறிமுதல்

**சேலம், மார்ச் 18:**

வடமாநிலங்களில் இருந்து சேலம் வழியாக செல்லும் ரெயில்களில் கஞ்சா கடத்தப்படுவதை தடுக்க ரெயில்வே போலீசாரும் மற்றும் போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசாரும் இணைந்து தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். அப்போது ரெயிலில் கஞ்சா கடத்துபவர்களை போலீசார் கைது செய்கின்றனர். இந்த நிலையில் ஜார்கண்ட் மாநிலம் தன்பாத்தில் இருந்து கேரள மாநிலம் ஆலப்புழாவிற்கு செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 13351) நேற்று காலை பொம்மிடி-சேலம் ரெயில் நிலையங்களுக்கு இடையே வந்து கொண்டிருந்தது. அப்போது ரெயில்வே போலீஸ் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் பாலமுருகன் தலைமையில் போலீசார் சோதனை நடத்தினர்.

இந்த சோதனையின் போது, ரெயிலின் பின்பக்கத்தில் உள்ள முன்பதிவில்லா பெட்டியில் கழிவறை அருகே கேட்பாரற்று 2 பைகள் கிடந்தன. இதை போலீசார் பிரித்து பார்த்தனர். இதில் 10 கிலோ கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.

### கல்லூரி மாணவி இறப்புக்கு காரணமான போலீஸ்காரருக்கு இரட்டை ஆயுள் தண்டனை

**சென்னை, மார்ச் 18:**

ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டாம் நிலை போலீஸ்காரரான மகேஷ் (33), சென்னை புழல் சிறை கண்காணிப்பாளரின் தனிப் பாதுகாவலராக பணிபுரிந்து வந்தார். கடந்த 2020-ம் ஆண்டு இவருக்கும், வண்ணாரப் பேட்டை பகுதியைச் சேர்ந்த 16 வயது மைனர் பெண்ணான கல்லூரி மாணவி ஒருவருக்கும் முகநூல் மூலமாக பழக்கம் ஏற்பட்டுள்ளது. அப்பெண்ணை காதலிப்பதாக கூறிய மகேஷ், ஒரு கட்டத்தில் வீடியோ கால் மூலமாக அந்த மாணவியை ஆபாசமாக புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து மிரட்டியுள்ளார். பின்னர் மாணவியை கோவளம் பகுதியில் உள்ள கடற்கரை தங்குமிடத்துக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதில் அந்த மாணவி கர்ப்பமடைந்துள்ளார். பின்னர் திருமணம் செய்ய மறுத்து, கர்ப்பத்தை கலைக்கவும் மகேஷ் வற்புறுத்தி உள்ளார். இதனால் மனமுடைந்த மாணவி, கடந்த 2020 நவ.19-ம் தேதி வீட்டில் தீக்குளித்தார். ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், 2 நாட்களுக்கு பிறகு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இறக்கும் முன்பாக தனது நிலைமைக்கு மகேஷ் தான் காரணம் என வாக்குமூலம் அளித்து இருந்தார். தனது மகளின் இறப்புக்கு காரணமான மகேஷை கைது செய்யக்கோரி மாணவியின் தாயார் எம்கேபி நகர் போலீஸில் புகார் அளித்தார்.

அதையடுத்து நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட போலீஸ்காரர் மகேஷுக்கு இரட்டை கடுங்காவல் ஆயுள் தண்டனையும், ரூ.1.10 லட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

## வணிகச் செய்திகள்

### பின்னலாடை உற்பத்திக்கான நூல் விலை கிலோவுக்கு ரூ.7 உயர்வு: ஏற்றுமதியாளர்கள் கவலை


**திருப்பூர், மார்ச் 18:**

பின்னலாடை ஏற்றுமதி, உள்நாட்டு வர்த்தகம் மூலமாக ஆண்டுக்கு சுமார் ரூ.70 ஆயிரம் கோடிக்கு மேல் திருப்பூரில் வர்த்தகம் நடைபெற்று வருகிறது. பின்னலாடை உற்பத்தியின் மூலப் பொருளான நூலின் விலையை அடிப்படையாகக் கொண்டே ஆடைகளின் விலையும் நிர்ணயம் செய்யப்படுகிறது. பின்னலாடை உற்பத்திக்கான நூல் விலை மாதம்தோறும் 1 மற்றும் 16-ம் தேதிகளில் நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன்படி, மார்ச் இரண்டாவது பகுதிக்கான நூல் விலையை நூற்பாலைகள் நேற்று வெளியிட்டன. இதில், பின்னலாடைகள் உற்பத்திக்கான அனைத்து வகையான நூல்களின் விலையும், கிலோவுக்கு ரூ.7 உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு பின்னலாடை உற்பத்தியாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இதுகுறித்து திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் கூறியதாவது: நூல் விலையானது பிப்ரவரி மாதம் கிலோவுக்கு ரூ.7 உயர்த்த நிலையில், தற்போது மேலும் ரூ.7 உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே, போர் காரணமாக ஏற்றுமதி செய்யப்பட்ட பின்னலாடைகள், வர்த்தகர்களுக்குச் சென்றடையாமல் பல்வேறு இடங்களில் தேக்கமடைந்துள்ளன. இந்நிலையில், நூல் விலை உயர்ந்துள்ளது. நூல் விலையைக் கணக்கிட்டே ஆடைகளின் விலையை நிர்ணயம் செய்கிறோம். இந்த சூழலில் விலை உயர்ந்திருப்பது தொழிலை பெரிதும் பாதித்துள்ளது. நூல் விலையை சீராக வைத்திருக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# வேர் கடலை, பிளாஸ்டிக் கவர் விலை உயர்வு... கோவில்பட்டி பேமஸ் கடலை மிட்டாய் தயாரிப்பு பாதிப்பு

**கோவில்பட்டி, மார்ச் 18:**

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் தயாரிக்கப்படும் கடலை மிட்டாய் உலகப்புகழ் பெற்றது. இங்கு சுமார் 120 கடலை மிட்டாய் தயாரிப்பு நிறுவனங்கள் உள்ளன. இந்த நிறுவனங்களில் நேரடியாக 5 ஆயிரம் பேரும், மறைமுகமாக 15 ஆயிரம் பேரும் பணிபுரிந்து வருகின்றனர். நாள் ஒன்றுக்கு 30 டன் (ஒரு டன் ஆயிரம் கிலோ) கடலை மிட்டாய் தயாரிக்கப்படுகின்றன. இவை உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.



இந்த நிலையில், சமீபத்தில் கடலை மிட்டாய்க்கு மூலப்பொருளான வேர்க்கடலை விலை உயர்வால் தயாரிப்பாளர்கள் பாதிக்கப்பட்டனர். தற்போது, அந்த மிட்டாய் பாக்கெட் செய்ய பயன்படும் பிளாஸ்டிக் கவர்களின் விலையும் உயர்ந்துள்ளதால், கடலை மிட்டாய் தயாரிப்பு பணி பாதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, கோவில்பட்டி கடலை மிட்டாய் தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தினர் கூறும்போது, "மேற்காசிய போர் பதற்றம் காரணமாக கடலை மிட்டாய் ஏற்றுமதி 10 சதவீதம் அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது. கடலை மிட்டாய் தயாரிப்புக்கு 90 சதவீதம் விறகு அடுப்புகளே பயன்படுத்துவதால், வணிக கேஸ் சிலிண்டர் நிறுத்தத்தால் எந்த பிரச்சினையும் இல்லை.

ஆனால், கடலை மிட்டாய் பாக்கெட் செய்யும் பிளாஸ்டிக் கவர், தாள், டப்பாக்களின் விலை கிலோவுக்கு ரூ.30 உயர்ந்துள்ளது. இதனால் தயாரிப்பு பணியும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, கடலை மிட்டாய்கள் மீது கிலோவுக்கு ரூ.10 கூடுதல் விலை வைத்து விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

# 8 எம்பிக்கள் இடைநீக்கம் ரத்து! மக்களவையில் தீர்மானம் நிறைவேற்றம்!




புதுடெல்லி, மார்ச் 18:

எதிர்க்கட்சிகளை சேர்ந்த 8 எம்பிக்கள் இடைநீக்கத்தை ரத்து செய்யும் தீர்மானம் மக்களவையில் செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் பகுதியில், கடந்த பிப்ரவரி 3 அன்று, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது ராகுல் காந்தி உரையாற்றும்போது, முப்படைகளின் தலைமைத் தளபதி எம்.எம். நரவணே எழுதிய புத்தகத்தில் சில வரிகளைக் குறிப்பிட்டு பிரதமர் நரேந்திர மோடியையும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கையும் விமர்சித்தார். இதனைத் தொடர்ந்து, விவாதத்துக்கு தொடர்பில்லாத விவகாரத்தை பேச அனுமதியில்லை என்று ராகுல் காந்திக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மக்களவை தலைமைச் செயலரின் மேஜை மீது ஏற முயன்றதுடன், காகிதங்களைக் கிழித்து, அவைத் தலைவர் இருக்கையை நோக்கி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வீசினர். ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக காங்கிரஸ் எம்.பி.க்களான மாணிக்கம் தாகூர், குர்ஜீத் சிங் அஜ்லா, ஹிபி ஈடன், சி.கிரண் குமார் ரெட்டி, அமரீந்தர் சிங் வாரிங், பிரசாந்த் படோல், டீன் குரியகோஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பி. சு.வெங்கடேசன் ஆகியோர் கூட்டத்தொடர் முழுவதும் அவை நடவடிக்கைகளில் இருந்து இடைநீக்கம் செய்து மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா அறிவித்திருந்தார். திங்கள்கிழமை அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இதில், எதிர்க்கட்சி எம்பிக்களின் இடைநீக்கத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தொடர்ந்து, இடைநீக்கத்தை ரத்து செய்ய ஓம் பிர்லா ஒப்புக் கொண்டார். இந்த நிலையில், மக்களவையில் இன்று 8 எம்பிக்களின் இடைநீக்கத்தை ரத்து செய்யும் தீர்மானத்தை ஓம் பிர்லா முன்மொழிந்தார். தொடர்ந்து குரல் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## மாம்பழம் சின்னம் யாருக்கு?: உச்சநீதிமன்றம் அடுத்த வாரம் விசாரணை

புதுடெல்லி, மார்ச் 18:

மாம்பழம் சின்னத்தை தனது தரப்புக்கு ஒதுக்க வேண்டும் அல்லது அச்சின்னத்தை முடக்க வேண்டும் என்ற தனது கோரிக்கையை நிராகரித்த சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையை உச்சநீதிமன்றம் வரும் 23-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தது.

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதி ஜாய்மால்யா பாக்சி அமர்வில் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது பாமக நிறுவனர் தரப்பில் வழக்கை சற்று நேரத்திற்கு ஒத்திவைக்குமாறு நீதிபதிகளிடம் வழக்குரைஞர்கள் கோரிக்கை வைத்தனர். உடனே குறுக்கிட்ட அன்புமணி தரப்பு வழக்குரைஞர் மீனாக்ஷி அரோரா, இந்த மனுவில் (பாமக நிறுவனர் மனு) தற்போது எதுவும் இல்லை. ஏனெனில் தமிழ்நாடு, புதுச்சேரிக்கு தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டது என தெரிவித்தார். அப்போது நீதிபதிகள் மாம்பழத்தை பெறப்போவது யார்? என்பதுதான் கேள்வி என சிரித்தபடி கூறினர். அதற்கு அன்புமணி தரப்பு வழக்குரைஞர் மீனாக்ஷி அரோரா, 'கடைசியாக எந்த அணி பதிவு செய்யப்பட்டதோ அவர்களுக்கே சின்னம் என தேர்தல் ஆணையம் கூறுகிறது. பாட்டாளி மக்கள் கட்சி கடைசியாக பதிவு செய்யப்பட்டதன் விவரங்களின் அடிப்படையில் அந்த கட்சி அன்புமணியின் கீழ்தான் உள்ளது என்பதை தேர்தல் ஆணையம் தில்லி உயர்நீதிமன்றத்தில் ஒத்துக் கொண்டுள்ளது. உயர்நீதிமன்றம் தந்தைக்கும் மகனுக்கும் இடையே உள்ள பிரச்னையை தீர்க்க கடுமையாக முயற்சி செய்தது. ஆனால், மகனுடன் பேசத் தயாராக இல்லை என்று தந்தை கூறிவிட்டார். அவருக்கு 86 -87 வயதாகிறது' என்றார். அப்போது வழக்கை ஒத்திவைக்குமாறு பாமக நிறுவனர் தரப்பில் மீண்டும் கோரப்பட்டது. இதையடுத்து, வழக்கை மார்ச் 23ம் தேதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்திவைத்தது.

## இந்திய ஏற்றுமதி பிப்ரவரி மாதத்தில் ரூ. 3.37 லட்சம் கோடியாக சரிவு!

புதுடெல்லி, மார்ச் 18:

மத்திய வர்த்தக அமைச்சகத்தின் தரவுகளில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த பிப்ரவரி மாதம் இந்தியா ரூ.3.37 லட்சம் கோடி மதிப்புக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இது கடந்த 2025-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியுடன் ஒப்பிடும்போது, 0.81 சதவீதம் குறைவு ஆகும்.

அதேநேரத்தில் வெளிநாடு களில் இருந்து இந்தியாவுக்கு கடந்த பிப்ரவரி மாதத்தில் ரூ.5.87 லட்சம் கோடிக்கு இறக்குமதி நடைபெற்றுள்ளது. இது கடந்தாண்டு பிப்ரவரி மாதம் செய்யப்பட்ட இறக்குமதியுடன் ஒப்பிடுகையில் 24.11 சதவீதம் அதிகம். இதற்கு தங்கம், வெள்ளி இறக்குமதி அதிகரிப்பே காரணம். பிப்ரவரி மாதம் மட்டும் தங்கம் ரூ.68,647 கோடிக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது 218.55 சதவீதம் அதிகம் ஆகும். இதேபோல் வெள்ளி ரூ.15,319 கோடிக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது 285.23 சதவீதம் அதிகம். எண்ணெய் இறக்குமதியும் 9 சதவீதம் அதிகரித்துள்ளது. பிப்ரவரி மாதத்தில் மட்டும் ரூ.1.19 லட்சம் கோடிக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

பிப்ரவரி மாதம் வர்த்தக பற்றாக்குறை ரூ.2.49 லட்சம் கோடியாகும். இது கடந்த ஜனவரி மாதத்துடன் (ரூ.3.20 லட்சம் கோடி) ஒப்பிடும்போது குறைவாகும். எனினும் கடந்த 2025-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் வர்த்தக பற்றாக்குறை அதிகரித்துள்ளது. அதாவது கடந்த 2025 பிப்ரவரி மாதத்தில் ரூ.1.29 லட்சம் கோடியாக இருந்த வர்த்தக பற்றாக்குறை, நிகழாண்டு பிப்ரவரி மாத்ததில் ரூ.2.49 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. அரிசி, கடல்சார் பொருள்கள், முத்துக்கள், நகைகள், மருந்துகள், ரசாயனங்கள், மின்னணு சாதனங்கள், கட்டுமான சாதனங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி பிப்ரவரி மாதத்தில் இந்தியாவுக்கு சாதகமாக இருந்துள்ளது என்று அந்த தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண்ணை கடித்துக் கொன்ற தெரு நாய்கள்!

புவனேஸ்வர், மார்ச் 18:

இதுகுறித்து புணே சாக்கண் காவல் நிலைய அதிகாரி கூறியதாவது: புணே-நாசிக் நெடுஞ்சாலையை ஒட்டிய சாக்கண் பகுதியில் உள்ள சேவைச் சாலையில் அதிகாலை 2 மணியளவில் அந்தப் பெண் நடைப் பயிற்சி மேற்கொண்டபோது இந்தச்சம்பவம் நடைபெற்றுள்ளது. அந்த சாலையில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா பதிவு மூலம் இந்தச் சம்பவம் கண்டறியப்பட்டது. அந்தப் பெண் ஷோபா வக்மாரே (33) என அடையாளம் காணப்பட்டுள்ளார். சாலையில் அவர் நடந்து செல்லும்போது நாய்கள் கூட்டம் திடீரென அவரைத் தாக்கின. நள்ளிரவு நேரம் என்பதால் சாலையில் யாரும் இல்லை. இதனால், உதவியேதும் கிடைக்காமல் சம்பவ இடத்திலேயே அந்தப் பெண் உயிரிழந்தார். இதுகுறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

உச்சநீதிமன்ற உத்தரவு: தெரு நாய் கடியால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, தெரு நாய்களைப் பிடித்து காப்பகங்களில் அடைக்க அனைத்து மாநிலங்களுக்கும் உச்சநீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது. மேலும், கல்வி, மருத்துவமனைகள் மற்றும் முக்கிய இடங்களில் சுற்றித் திரியும் நாய்களை அப்புறப்படுத்தி, கருத்தடை, தடுப்பூசி போடவும் உத்தரவிட்டது. மேலும், இந்த உத்தரவைப் பின்பற்றாக மாநில அரசுகளுக்கு எதிராக கடும் அதிருப்தியையும் உச்சநீதிமன்றம் அண்மையில் தெரிவித்திருந்தது.

## நீர் விநியோகத்தை அதிகரிக்க ஹரியாணாவுடன் டில்லி அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது

மும்பை, மார்ச் 18:

தற்போது, நகரத்தின் சராசரி நீர் உற்பத்தி ஒரு நாளைக்கு 900 - 1,000 மில்லியன் கேலன்கள் (எம்ஜிடி) வரை உள்ளது. அதே நேரத்தில் சராசரி நீர் தேவை சுமார் 1,260 எம்ஜிடி ஆகும். கோடை காலத்தில் தேவை உச்சத்தை அடைகிறது.

'எங்கள் விநியோக பாதைகளில் உள்ள இடைவெளிகளை நாங்கள் சரிசெய்து நீர் இழப்புகளைக் குறைக்கும் அதே வேளையில், தில்லி அரசு ஹரியாணாவிலிருந்து 30 கன அடி தண்ணீரை சுத்திகரிக்கப்பட்ட தண்ணீருக்கு ஈடாக பரிமாறிக்கொள்ளும் திட்டத்தில் செயல்பட்டு வருகிறது. இது அவர்களின் மாநிலத்தில் பாசன நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம்" என்று நீர்வள அமைச்சர் பர்வேஷ் சாஹிப் சிங் கூறினார்.

அமைச்சரின் கூற்றுப்படி, ஹரியாணாவிலிருந்து பரிமாற்றத்தில் 20 சதவீத நீர் இழப்பு ஒரு முக்கிய காரணியாக உள்ளது. இது தேவை மற்றும் உற்பத்தியில் இடைவெளியை அதிகரிக்கிறது. தில்லி ஜல் போர்டு (டிஜேபி) தற்போது ஒன்பது நீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்கி, சுமார் 864 எம்ஜிடி தண்ணீரை வழங்குகிறது. மீதமுள்ள 126 எம்ஜிடி நீர் கிணறுகள் மற்றும் குழாய் கிணறுகள் மூலம் பிரித்தெடுக்கப்படுகிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

'டில்லியில் மூல நீரின் முக்கிய ஆதாரங்களில் ஒன்று ஹரியாணாவின் முனாக் கால்வாய் ஆகும். இது தில்லியின் மொத்த நீர் விநியோகத்தில் 60 சதவீதத்தை கொண்டுள்ளது. வட இந்திய மாநிலங்களுக்கு இடையிலான நீர் பகிர்வு ஏற்பாட்டின்படி, ஹரியாணா முனாக் கால்வாய் மற்றும் யமுனை வழியாக தில்லிக்கு சுமார் 1,133 கனஅடி தண்ணீரை வழங்குகிறது' என்று ஒரு அதிகாரி கூறினார். 'தண்ணீர் பெறும் முக்கிய கால்வாய்களையும் சரிசெய்ய அண்டை அரசுடன் நாங்கள் பேசி வருகிறோம். டிரான்ஸ்மிஷன் இழப்புகளைத் தவிர்த்து, தில்லிக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நீரைப் பெற வேண்டும். விநியோகத்தின் போது நீர் இழப்பைக் குறைக்க, தில்லி ஜல் போர்டு தலைநகர் முழுவதும் பழைய நீர் குழாய்களை மாற்றுகிறது என்று' என்று அமைச்சர் கூறினார்.

## பாஜகவின் வசதிக்கேற்ப தேர்தல் தேதிகள்: பிரியங்கா விமர்சனம்



புதுடில்லி, மார்ச் 18:

பாஜகவின் வசதிக்கேற்ப தேர்தல் தேதிகள் மற்றும் வாக்குப்பதிவு கட்டங்களை இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது என்று காங்கிரஸ் பொதுச் செயலர் பிரியங்கா காந்தி விமர்சித்தார்.

தமிழகத்தில் ஏப்.23-ஆம் தேதியும், கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் ஏப்.9-ஆம் தேதியும், மேற்கு வங்கத்தில் ஏப்.23, 29-இல் இருகட்டங்களாகவும் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் தேதிகள் ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டன. இந்நிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை பேசிய காங்கிரஸ் பொதுச் செயலர் பிரியங்கா காந்தியிடம் தேர்தல் அட்டவணை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு, 'தேர்தல் தேதிகள் மற்றும் வாக்குப்பதிவு கட்டங்கள், பாஜகவின் வசதிக்கேற்ப தீர்மானிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது' என்று அவர் பதிலளித்தார்.

திருவனந்தபுரம் தொகுதி காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் கூறுகையில், 'கேரளத்தில் ஏப்ரல் மாதத்தின் கடைசி 10 நாள்களில் தேர்தல் நடைபெறும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், ஏப்.9-ஆம் தேதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதை எதிர்பார்க்கவில்லை. தேர்தலுக்கு கிட்டத்தட்ட 3 வாரங்களே உள்ளன. இது குறைவான காலகட்டம்' என்றார். இதேபோல், 'கேரளத்தில் தேர்தல் பிரசாரத்துக்கு சொற்ப நாள்களே உள்ளன; இதற்கிடையே புனித வாரம் கடைப்பிடிக்கப்பட உள்ளது. விஷு பண்டிகைக்கு சில நாள்களுக்கு முன் தேர்தல் நடைபெறவுள்ளது' என்று காங்கிரஸ் பொதுச் செயலர் கே.சி.வேணுகோபால் தெரிவித்தார்.

## விடுப்பு, சம்பளம் மறுப்பு: வங்கி மேலாளரை சுட்டுக்கொன்ற பாதுகாவலர்!



புதுடெல்லி, மார்ச் 18:

லக்னௌவின் காஜியாபாத்தில் உள்ள ஒரு வங்கியில் விடுப்பு, சம்பளம் தொடர்பான பிரச்னைகளால் வங்கி மேலாளரை பாதுகாவலர் ஒருவர் சுட்டுக் கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக லோனி எல்லைப் பகுதி காவல் நிலைய ஆய்வாளர் கூறுகையில்,

லோனி கிளையின் பஞ்சாப் மற்றும் சிந்து வங்கியில் வங்கி மேலாளராகப் பணியாற்றி வருபவர் 34 வயது அபிஷேக் குமார். இவர் பாட்னாவைச் சேர்ந்தவர். 2025 முதல் காஜியாபாத்தில் உள்ள வங்கியில் பணியமர்த்தப்பட்டுள்ளார். இவர் தனது மனைவியுடன் வாடகை வீட்டில் வசித்து வந்தார். அதே வங்கியில் பாதுகாப்பு ஊழியராக ரவீந்திர ஹூடா (50), அவருக்குத் துணையாக ஷிஷுபால் (57) ஆகியோர் பணியாற்றி வந்தனர்.

இந்த நிலையில், கடந்த இரண்டரை மாதங்களாக ரவீந்திர ஹூடாவுக்கு விடுப்பு கேட்டபோதெல்லாம் மறுக்கப்பட்டதாகவும், சம்பளம் குறைக்கப்படதாகவும் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, அவருக்கும் வங்கி மேலாளருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த பாதுகாவலர் ரவீந்திர ஹூடா வங்கி மேலாளரைத் தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டுள்ளார். இச்சம்பவம் நடந்தபோது ஷிஷுபால் அவருடன் இருந்துள்ளார்.

இதையடுத்து, காயமடைந்த வங்கி மேலாளர் சிகிச்சைக்காகத் தில்லியில் உள்ள ஜிடிபி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

ஆனால் அங்கு அவர் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

பாதுகாவலர்கள் ரவீந்திர ஹூடா மற்றும் ஷிஷுபால் ஆகிய இருவரும் உத்தரப் பிரதேச மாநிலம் பாக்வத் மாவட்டத்தில் உள்ள ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் கைது செய்யப்பட்டனர். இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கடன் மீட்பு வழக்குகளைத் தீர்க்க 4 சிறப்பு லோக் அதாலத்: நிர்மலா சீதாராமன் தகவல்


புதுடில்லி, மார்ச் 18:

மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்து அவர் கூறியதாவது: கடன் மீட்பு தீர்ப்பாயங்கள் மற்றும் கடன் மீட்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களின் முன் நிலுவையில் உள்ள வழக்குகளில் பெரும்பாலானவை ரூ.100 கோடி மற்றும் அதற்கு மேலான மதிப்புடையவையாகும். கிட்டத்தட்ட 71 சதவீத வழக்குகள் அதிக மதிப்பு கொண்டவையாக உள்ளன. நிலுவை வழக்குகளுக்குத் தீர்வுகாண இருமுனை உத்தியை மத்திய அரசு ஏற்றுள்ளது. முதலாவது, ரூ.100 கோடி மற்றும் அதற்கு மேலான மதிப்பு கொண்ட வழக்குகளை விசாரிக்க பிரத்யேக கடன் மீட்பு தீர்ப்பாயங்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது, மாற்று வழிமுறைகள் அதாவது லோக் அதாலத் போன்ற தளங்களின் வாயிலாக பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வங்கிகள் மற்றும் நிதி சார் நிறுவனங்களை ஊக்குவிப்பதாகும். இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, கடன் மீட்பு வழக்குகளுக்காகவே சிறப்பு லோக் அதாலத்-களை ஏற்பாடு செய்வது குறித்து இந்திய தேசிய சட்டப் பணிகள் ஆணையத்துடன் மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. தேசிய லோக் அதாலத் தவிர, நடப்பாண்டில் கடன் மீட்பு வழக்குகளுக்குத் தீர்வுகாண 4 சிறப்பு லோக் அதாலத்-களை நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் நிலுவை வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண முடியும் என்றார் நிர்மலா சீதாராமன்.

'ஸ்டாண்ட்-அப் இந்தியா' திட்டம் மேலும் சிறப்பான பலன்களுடன் புதுப்பிக்கப்பட்டு விரைவில் தொடங்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

## குழந்தை தத்தெடுப்பு நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்பட வேண்டும்: மாநிலங்களுக்கு சிஏஆர்ஏ அறிவுறுத்தல்



புதுடெல்லி, மார்ச் 18:

குழந்தை தத்தெடுப்பு நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டு, அவர்களின் அடையாளம் பாதுகாப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய தத்தெடுப்பு வள ஆணையம் (சிஏஆரஏ) வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் சிஏஆரஏ செயல்படுகிறது. அந்த ஆணையம் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உள்ள அனைத்து மாநில தத்தெடுப்பு வள முகமைகளுக்கு 3 முக்கிய அறிவுறுத்தல்களை அனுப்பியுள்ளது. அந்த அறிவுறுத்தல்களில், 'ஒரு குழந்தையை சட்டபூர்வமாக தத்தெடுக்கலாம் என்று முடிவு செய்யும் முன், அதற்கான சட்ட நடைமுறைகள் மற்றும் கால வரையறைகள் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். ஆதரவற்ற அல்லது கைவிடப்பட்ட குழந்தைகள் குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளுதல், அவர்களின் பெற்றோரை கண்டறிதல், அவர்களிடம் குழந்தையை சேர்க்க முயற்சித்தல் மற்றும் பிற சட்டபூர்வ நடவடிக்கைகளை வரையறுக்கப்பட்ட கால வரம்புக்குள் நிறைவு செய்ய வேண்டும். இதைச் செய்யாமல் அந்தக் குழந்தைகளை சட்டபூர்வமாக தத்தெடுக்கலாம் என்று முடிவு செய்யக் கூடாது.

தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களான பின்னர், தங்கள் பூர்விகம் குறித்த தகவல்களைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். சில வேளைகளில், சம்பந்தப்பட்ட சிறப்பு தத்தெடுப்பு முகமை (எஸ்ஏஏ) அல்லது குழந்தை பராமரிப்பு மையம் (சிசிஐ) மூடப்பட்டது, அவற்றின் செயல்பாடுகள் வேறு மையத்துக்கு மாற்றப்பட்டது போன்ற காரணங்களால் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் குறித்த ஆவணங்கள் கிடைப்பதில்லை. இதைக் கருத்தில் கொண்டு, ஆதரவற்ற அல்லது கைவிடப்பட்ட குழந்தைகள் மற்றும் தத்தெடுத்தக்கப்பட்ட குழந்தைகளின் விவரங்கள் அடங்கிய அனைத்து ஆவணங்களும் பாதுகாப்பாகப் பராமரிக்கப்படுவதை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் உறுதி செய்யவேண்டும். குற்ற சம்பவங்களில் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படும் 18 வயதுக்குள்பட்ட சிறார்கள், பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் தேவைப்படும் குழந்தைகளின் அடையாளம் பொதுவெளியில் வெளியிடப்படுவதை சிறார் நீதிச் சட்டத்தின் 74-ஆவது பிரிவு தடை செய்கிறது.

# துபாய், அபுதாபி உள்ளிட்ட அனைத்து விமான நிலையங்களும் மூடல்

அபுதாபி, மார்ச் 18:

வளைகுடா பிராந்தியத்தில் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் 2 வாரங்களுக்கு மேலாக தாக்குதல் நடத்தி வருகின்றன. இதற்கு வலுவான பதிலடி கொடுத்து வரும் ஈரான், அமெரிக்காவின் படைத்தளங்கள் உள்ள அரபு நாடுகளிலும் கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகிறது. பழிவாங்கும் எண்ணத்துடன் அமெரிக்க தளங்களை நோக்கி ஏவுகணைகளையும், டிரோன்களையும் சராமாரியாக ஈரான் அனுப்பி வருகிறது.

இதில் இடைமறித்து அழிக்கும் பணியிலேயே



வளைகுடா நாடுகள் தங்கள் நேரத்தையும், பணத்தையும் செலவு செய்து வருகின்றன. அந்த வரிசையில் ஈரானில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள் மற்றும் டிரோன் தாக்குதலை அமீரக விமான பாதுகாப்பு படையினர் இடைமறித்து அழித்து வருகின்றனர்.

நாட்டில் 17-வது நாளான நேற்று தொடர்ந்து ஈரானின் தரப்பில் ஏவப்பட்ட ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் அமீரகத்தின் வானில் பறந்து வந்தன. இதில் நேற்று அதிகாலை துபாய் சர்வதேச விமான நிலையம் அருகே டிரோன் தாக்குதல் முயற்சி நடந்தது. இதனை அமீரக வான் பாதுகாப்பு படையினர் இடைமறித்து சுட்டு வீழ்த்தினர். இந்த சம்பவத்தில் எண்ணெய் கிடங்கு மேல் சிதறிய டிரோன் பாகங்களால் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதனால் விமான நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள 4 முக்கிய சாலைகள் தற்காலிமாக மூடப்பட்டன. காலை நேரத்தில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதையடுத்து, உடனடியாக விமான சேவைகளும் நிறுத்தப்பட்டது. இந்நிலையில் ஐக்கிய அரபு அமீரகத்தில் துபாய், அபுதாபி உள்ளிட்ட அனைத்து விமான நிலையங்களும் தற்போது மூடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. துபாய் விமான நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விமான போக்குவரத்துக்கான வான்பகுதியை மூடுவதாக ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்துள்ளது. டிக்கெட் முன்பதிவு செய்தவர்கள் விமான நிறுவனங்களின் அறிவுறுத்தலை பின்பற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே அமீரக பாதுகாப்பு அமைச்சகம் சார்பில் நாட்டில் அனைத்து ராணுவ படைகளும் தயார்படுத்தப்பட்டு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பொதுமக்கள் இடைமறிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை சம்பவங்கள் குறித்து அதிகாரப்பூர்வ தளங்களில் இருந்து மட்டுமே தகவல்களை பகிர வேண்டும் என அமீரக பாதுகாப்பு அமைச்சகம் வலியுறுத்தி உள்ளது.

## லெபனானில் தரைவழித் தாக்குதல்: நிலத்தை ஆக்கிரமிக்கும் இஸ்ரேல்

காசா, மார்ச் 18:

ஹிஸ்புல்லா அமைப்புக்கு எதிராக தாக்குதல் நடத்துவதாகக் கூறி லெபனான் மக்கள் மீது குண்டு வீசி வருகிறது இஸ்ரேல் ராணுவம். குறிப்பாக சர்வதேச திட்டத்தால் தடை செய்யப்பட்ட வெள்ளை பாஸ்பரஸ் குண்டுகளை லெபனான் மீது வீசி போர் குற்றத்திலும் ஈடுபட்டு வருகிறது. 100-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 800-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

31 சுகாதாரப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள் ளனர். இப்போர்ச் சூழலைப் பயன்படுத்தி லெபனான் நாட்டின் பகுதிகளை ஆக்கிரமித்து இஸ்ரேலுடன் இணைக்கும் வேலைகளையும் இஸ்ரேல் ராணுவம் செய்கிறது.

## ஈரான் மீதான போரை உடனே நிறுத்த வேண்டும்: போப்

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்தி வரும் போருக்கு எதிராகப் போப் லியோ குரல் கொடுத்துள்ளார். மேலும் உடனடியாகப் போர்நிறுத்தம் செய்ய வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார்.

இஸ்ரேல், அமெரிக்கா பள்ளி மீது குண்டு வீசி குழந்தைகளை படுகொலை செய்ததை குறிப்பிட்ட அவர் வன்முறை மூலம் ஒருபோதும் உறுதித்தன்மையைப் பெற முடியாது. மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் விரோதப் போக்கைக் கைவிட்டு, பேச்சுவார்த்தைக்கான பாதைகளை மீண்டும் துவங்க வேண்டும்.

மக்களின் எதிர்பார்ப்பான நீதி, அமைதிக்கு வன்முறை ஒருபோதும் வழிவகுக்காது என்றும் கூறியுள்ளார்.

## டிரம்ப்பின் சீனப் பயணம் கேள்விக்குறி?

மார்ச் மாத இறுதியில் டிரம்ப் சீனா வரும் பயணம் குறித்து அமெரிக்காவுடன் தொடர்பில் இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது. பயணம் உறுதியாகிவிட்டதா அல்லது ரத்தாகுமா என்பது குறித்து அதிகாரப்பூர்வ மாக உறுதிப்படுத்தவில்லை.

மார்ச் 31 முதல் ஏப்ரல் 3 வரை டிரம்ப் சீனாவிற்கு பயணம் செல்ல உள்ளதாக கடந்த மாதம் வெள்ளை மாளிகை அறிவித்திருந்தது. அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ மீது சீனா பொருளாதாரத் தடைகள் விதித்துள்ள நிலையில் டிரம்ப் வந்தாலும் ரூபியோ சீனா வர முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ‘அணு ஆயுதப் பரவல் தடை சட்டத்தின் எதிர்காலம் கவலை அளிக்கிறது’

அணு ஆயுதப் பரவல் தடை சட்டத்தின் எதிர்காலம் பெரும் கவலை அளிப்பதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்துள்ளார். ஈரான் மீதான இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் தாக்குதல் கள் சர்வதேச அணுசக்தி முகமையின் பாதுகாப்பில் உள்ள இடங்களை குறிவைத்து நடத்தப்பட் டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் ராஜ்யரீதியிலான பேச்சுவார்த்தைகள் மீதுள்ள நம்பிக்கையைச் சிதைத்துள்ளன. இதன் விளைவாக, அணு ஆயுதங்கள் இருந்தால் தான் நமக்கு பாதுகாப்பு என சில நாடுகள் கருதத் தொடங்கலாம் என்று அவர் எச்சரித்தார்.


## அமைதிப் பேச்சுவார்த்தைக்குத் தயார் : ஜெலென்ஸ்கி அறிவிப்பு

ரஷ்யாவுடனான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அடுத்த கட்ட முத்தரப்பு அமைதிப் பேச்சுவார்த்தைக்குத் தான் தயாராக இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். எனினும் பேச்சுவார்த்தை நடைபெறுவது குறித்து அறிவிக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என்பதை ஒப்புக்கொள்ளும் வகையில் அமெரிக்காவும் ரஷ்யாவும் தான் பேச்சுவார்த்தை குறித்து முடிவு செய்ய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் மீதான போரின் காரணமாக, அமெரிக்கா இரு தரப்பினருக்கும் இடையிலான இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தள்ளிவைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் -ஆப்கானிஸ்தான் இடையே தீவிரமடையும் மோதல்: பதற்றத்தை தணிக்குமாறு ஐ.நா. வலியுறுத்தல்

காபூல், மார்ச் 18:



ஆப்கானிஸ்தான் தலைநகரில் உள்ள போதைப்பொருள் மறுவாழ்வு மருத்துவமனை மீது நேற்று இரவு பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதலில் 400-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக ஆப்கானிஸ்தான் அரசு குற்றம் சாட்டி உள்ளது. கடந்த மாத இறுதியில் தொடங்கிய மோதலின் தீவிரமாக இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. மேலும் எல்லை தாண்டிய மோதல்கள் மற்றும் ஆப்கானிஸ்தானுக்குள் பாகிஸ்தானின் வான்வழித் தாக்குதல்கள் மீண்டும் மீண்டும் நடைபெற்று வருகின்றன.

இந்த தாக்குதலுக்கு தலீபான் அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், பாகிஸ்தான் இக்குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது. தங்களது தாக்குதல்கள் காபூல் மற்றும் நங்கர்ஹார் பகுதிகளில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மற்றும் ராணுவ நிலைகளை மட்டுமே இலக்கு வைத்ததாக கூறியுள்ளது. பாகிஸ்தானுக்கு எதிராகச் செயல்படும் தீவிரவாதிகளுக்கு ஆப்கானிஸ்தான் புகலிடம் அளிப்பதாகக் கூறி, இந்தத் துல்லியமான தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகப் பாகிஸ்தான் இந்த சம்பவத்தை நியாயப்படுத்தி உள்ளது. இந்த விவகாரத்தில் சர்வதேச நாடுகள் தலையிட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும், இரு நாடுகளும் தங்களது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதால் ஆசிய பிராந்தியத்தில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. இதனிடையே மறுவாழ்வு மருத்துவமனை கடுமையாக சேதம் அடைந்துள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது. இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதல்கள் தொடர்பாக , ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் கவலை தெரிவித்துள்ளார்.

# ஈரான் மூத்த ராணுவ தளபதி படுகொலை; இஸ்ரேல் பாதுகாப்பு படை உறுதி

டெல் அவிவ், மார்ச் 18:






ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. தொடர்ந்து நடந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மனைவி, மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கொல்லப்பட்டு உள்ளனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்ற நிலை காணப்படுகிறது. இதனை தொடர்ந்து ஈரான் நடத்தி வரும் பதிலடி தாக்குதல்களால் இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் அவற்றின் படை தளங்கள் அமைந்த வளைகுடா நாடுகள் பாதிக்கப்பட்டு உள்ளன. ஈரானின் பசிஜ் படை பிரிவின் மூத்த ராணுவ தளபதியாக செயல்பட்டு வந்தவர் குலாம்ரெசா சுலைமானி.

ஈரானின் இஸ்லாமிய புரட்சி காவல் படையின் பசிஜ் துணை ராணுவத்திற்கு தலைமையேற்று செயல்பட்டு வந்த இவர், கூடாரத்தில் தங்கியிருந்தபோது, தாக்கி வீழ்த்தப்பட்டார் என இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்து உள்ளது. பொதுவாக தலைமையகத்தில் இருக்கும்போது கண்டறிந்து விட கூடாது என்பதற்காக கூடாரத்தில் தங்கியுள்ளார். அவருடைய துணை தளபதியான சையது கரிஷியும் படுகொலை செய்யப்பட்டு உள்ளார் என இஸ்ரேல் தெரிவித்து உள்ளது.

இதில், சுலைமானியின் தலைமையின் கீழ் செயல்பட்டு வந்த பசிஜ் துணை ராணுவம், பல்வேறு வன்முறைகளை பரப்பி விட்டும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களை ஆயுதங்களை கொண்டு தாக்கியும் வந்துள்ளது என இஸ்ரேல் வெளியிட்ட எக்ஸ் வலைதள பதிவு தெரிவிக்கின்றது.

## போர் வேண்டாம்..! ஆஸ்கர் விழாவில் முழக்கமிட்ட நடிகர்

லாஸ்ஏஞ்சலஸ், மார்ச் 18:

2026-ஆம் ஆண்டின் ஆஸ்கர் விருது விழாவில், ஸ்பானிஷ் நடிகர் ஜாவியர் பார்டெம், “போர் வேண்டாம். பாலஸ்தீனத்தை விடுவியுங்கள்” என்று முழக்கமிட்டார்.

ஆஸ்கர் விருது 2026 (98ஆவது அகாடமி விருதுகள்) லாஸ் ஏஞ்சலஸில் உள்ள டால்பி தியேட்டரில் நடைபெறுகிறது. இதில் சிறந்த படம், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்கள் என பல்வேறு பிரிவுகளில் விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த சூழலில், சிறந்த வெளிநாட்டு படத்தை அறிவிக்க வந்த ஸ்பானிஷ் நடிகர் ஜாவியர் பார்டெம், “போர் வேண்டாம். பாலஸ்தீனத்தை விடுவியுங்கள்” என்று முழக்கமிட்டார்.

மேலும், போர் வேண்டாம் என்று பொறிக்கப்பட்ட ஒரு பேட்ஜையும், பாலஸ்தீனத்திற்கு ஆதரவான மற்றொரு பேட்ஜையும் பார்டெம் அணிந்திருந்தார்.

## இருளை தாண்டி ஒளி பிறக்கட்டும் - ஈரான் மக்களுக்கு இஸ்ரேல் பிரதமர் வாழ்த்து



டெல் அவிவ், மார்ச் 18:

ஈரான் மீது இஸ்ரேலும், அமெரிக்காவும் தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சமீபத்திய தாக்குதலில் காயமடைந்து உள்ளார் என்றும் அவர் கொல்லப்பட்டு விட்டார் என்றும் மத்திய கிழக்கு பகுதியில் தகவல்கள் பரவின.

இதற்கு முன்பு, கடைக்கு சென்று காபி குடிக்கும் வீடியோவை வெளியிட்டார். அப்போது, தன்னுடைய இரு கைகளையும் அடுத்தடுத்து உயர்த்தி, காண்பித்து 5 விரல்கள் உள்ளன என காட்டினார். இந்நிலையில் ஈரான் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் அந்நாட்டு மக்களுக்கு தனது ஆதரவை தெரிவிக்கும் வகையிலும் நவ்ரூஸ் மற்றும் நெருப்பு திருவிழாவிற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், “ஒவ்வொரு ஆண்டும் நான் வாழ்த்துவது போலவே, ‘ஒளித் திருவிழா’வுடன் தொடங்கும் இந்தத் திருவிழா காலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய வாழ்த்துகிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

இணையத்தில் பரவிய எ.ஐ. வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே இந்த திடீர் வீடியோ வெளியானதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

## தண்ணீர், மின்சாரம் போல ஏஐ-க்கும் மீட்டர் கட்டணம்: சாம் ஆல்ட்மேன் கணிப்பு




மின்சாரம் மற்றும் பொதுப் பயன்பாட்டுக்கான குடிநீருக்கு எப்படி பயன்பாட்டிற்கு ஏற்றபடி கட்டணம் செலுத்துகிறோமோ, அதுபோல எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு தளங்களும் மீட்டர் அடிப்படையில் வழங்கப்படும் என்று சாட்ஜிபிடியை உருவாக்கிய ஓபன் ஏஐ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சாம் ஆல்ட்மேன் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய சாம் ஆல்ட்மேன் இது தொடர்பாக கூறியதாவது: ஏஐ தொழில்நுட்பமானது இனி வரும் காலங்களில் சிக்கலான மென்பொருளாக இல்லாமல் மின்சாரத்தைப் போல அத்தியாவசியமாக மாறும். தற்போது ஏஐ சேவைகள் சப்ஸ்கிரிப்ஷன்களாக உள்ளன. ஆனால் வரும் காலங்களில் மின்சார மீட்டரைப் போல பயனர்கள் தங்கள் பயன்படுத்தும் கணக்கிற்கு ஏற்ப கட்டணம் செலுத்தும் முறை அமலுக்கு வரும். சாமானிய மக்கள் முதல் பெரிய நிறுவனங்கள் வரை தங்கள் தேவைக்கு ஏற்ப ஏஐயைப் பயன்படுத்திக்கொள்ள வழிவகுக்கும் என்றார்.

வரும் காலங்களில் ஏஐ என்பது மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக மாறிவிடும் என்பதே சாம் ஆல்ட்மனின் இந்த கருத்து பிரதிபலிப்பதாக டெக் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

# ஹோர்முஸ் நீரிணைக்கு போர்க் கப்பல் அனுப்ப முடியாது டிரம்ப்புக்கு உதவி செய்ய நேட்டோ நாடுகள் மறுப்பு

வாஷிங்டன், மார்ச் 18:



ஈரான் மீதான போரை நடத்தி வரும் அமெரிக்கா ஹோர்முஸ் நீரிணையை திறக்க உதவி செய்ய வேண்டும் என அதன் நட்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்புக்கு அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடு களான நேட்டோ நாடுகளே கை விரித்துள்ளன.

இஸ்ரேலும் அமெரிக்காவும் பிப்.28 முதல் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. பதிலுக்கு ஈரானும் மேற்கு ஆசிய நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத்தளங்கள், தூதரகங்கள் மீதும், இஸ்ரேல் மீதும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தி வலுவான பதிலடி கொடுத்து வருகிறது. குறிப்பாக ஹோர்முஸ் நீரிணையை மூடியுள் ளது. இதனால் சர்வதேச அளவில் எரி பொருள் பற்றாக்குறை உருவாகி யுள்ளது. இந்த நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரிக்கும் நிலையில் அந்த நீரிணை யில் கச்சா எண்ணெய்க் கப்பல்கள் கடந்து செல்ல பாதுகாப்பு தர வேண்டும்.

அதற்கான ஒரு ராணுவக் கூட்டணி அமைக்கும் என்ற வகையில் சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, ஜெர்மன் என பல நாடுகளுக்கு உதவி கேட்டு டிரம்ப் அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பை எந்த நாடும் ஏற்க வில்லை. அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடுகளான ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா தங்கள் நாட்டுப் போர்க் கப்பல்களை அனுப்பும் திட்டம் எதுவும் இல்லை என்று அறிவித்து விட்டன.

இந்த சூழலில் ‘பைனான்சியல் டைம்ஸ்’ இதழுக்கு அவர் அளித்த பேட்டி யில் ரஷ்யாவுடனான போரில் உக்ரை னுக்கு அமெரிக்கா உதவியது போல, உலகெங்கிலும் எரிசக்தி விலைகள் உயரக் காரணமாக இருக்கும் ஹோர்முஸ் நீரிணை விவகாரத்தில் ஐரோப்பா உதவும் என்று தான் எதிர்பார்ப்ப தாக டிரம்ப் கூறியுள்ளார்.


இதற்கு பதில் வரவில்லை என்றாலோ எதிர்மறை யான பதில் வந்தாலோ அது நேட்டோ வின் எதிர்காலத்திற்கு மிகவும் மோசமா னதாக அமையும் என்றும் அவர் மிரட்டல் விடுத்துள்ளார். ஈரானுடனான போரில் ஏற்கெனவே நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம். ஹோர்முஸ் நீரிணை வழியாக வரும் எண்ணெய்க் கப்பல்களுக்கு அமெ ரிக்க கடற்படை பாதுகாப்பு கொடுக்கும் என்றெல்லாம் பேசி வந்த டிரம்ப், தற்போது பிரான்ஸ், ஜப்பான், தென் கொரியா, பிரிட்டன் என நேட்டோ நாடுகள் மற்றும் சீனாவிடம் ஹோர்முஸ் நீரிணை வழியாக வரும் எண்ணெய்க் கப்பல்களை காக்க தங்கள் போர்க் கப்பல்களை அனுப்புங்கள் என கேட்கி றார். டிரம்ப்பின் கூற்றுகளும் அறிக்கை களுமே அமெரிக்கா எதிர்பார்த்த திசையில் போர் செல்லவில்லை எனக் காட்டுகிறது.



# ஆப்கன் மருத்துவமனை மீதான பாகிஸ்தான் தாக்குதலுக்கு இந்தியா கண்டனம்

# சட்டசபை தேர்தலில் தனித்துப் போட்டி: விஜய் அறிவிப்பு







# "காலம் பேசாது; ஆனால் காத்திருந்து பதில் சொல்லும்"

# திமுக வேட்பாளர்கள் நேர்காணல் தொடங்கியது







# எரிந்த காருக்குள் 4 பேர் பலி


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

18.03.2026 புதன்கிழமை

இலவச இ–பேப்பர்